விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 22 வியாழக்கிழமை (07.09.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 262

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kaiyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

"தகவல் தந்தால் தேடிப்பார்க்க முடியும்"

காணாமல் ஆக்கப்படடோரின் உறவுகள் - ஜனாதிபதி சந்திப்பு

(கொழும்பு) வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று கொழும்பில் இடம்பெற்றுள்ளது. இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் தகவல் தெரிவிக்கப்படின் அவர்கள் தொடர்பில் தேடிப் பார்க்கத் தன்னாலான நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனத் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

வருமானவரி சட்டவரைபு

(கொழும்பு)

புதிய தேசிய வருமான வரி சட்ட வரைபு இன்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவுள்ளது.

புதிய சட்டவரைபுக்கு அமைய இலங்கையில் உள்ள வெளிநாட்டு நிறுவனங்கள் தமது நாடுகளுக்கு இலாபத்தை அனுப்பும் போது அறவிடப்படும் மூலதன வரி, வைப்பு வரி, சம்பாதிக்கும் போது செலுத்தும் வரி என்பன ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு 23

சிகிச்சையில் கவனவீனம் குடும்பப்பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

தேநீர் ஊற்றுவதற்காக அடுப்பை மண்ணெண்ணெய் ஊற்றி எரித்த போது ஏற்பட்ட தீ விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த குடும்ப பெண்ணொருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்த தீவிபத்துச் சம்பவம் முழங்காவில் நாச்சிக்குடா செபஸ்ரியர்புரத்தில் நடைபெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தாயாரான பூஜின் கிறிஷ்ரியான (வயது 33) 23

9 கிலோ கஞ்சாவுடன் நபர் ஒருவர் கைது

(கொழும்பு)

ஒன்பது கிலோ கஞ்சாவை வீட்டினுள் ஒளித்து வைத்திருந்த நபர் ஒருவர் சுழிபுரம் பகுதி சிவில் பாதுகாப்பு குழுவினரால் கைது செய்யப்பட்டதுடன் அவர் மறைத்து வைத்திருந்த கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ். - சுழிபுரம் காட்டுப் புலத்தில் உள்ள வீடொன்றில் 9 கிலோ கஞ்சாவை நபர் ஒருவர் ஒளித்து வைத்திருப்பதாக சிவில் பாதுகாப்பு 23

தென்னிலங்கை மீனவர்கள் அடாத்து;

உள்ளூர் மீனவர் படகு மூழ்கடிப்பு நடுக்கடலில் இருவர் தத்தளிப்பு

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கை மீனவர்களின் தொடர்ச்சியான அத்துமீறல்களால் முல்லைத்தீவு மீனவர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கி வருகின்றனர்.

நேற்று அதிகாலையிலும் தென்னிலங்கை மீனவர்களின் படகு ஒன்று உள்ளூர் மீனவர் ஒருவரின் படகு மீது மோதி அதனை மூழ்கடித்துவிட்டுத் தப்பிச்சென்றுள்ளது.

இதன்போது மூழ்கிய படகில் இருந்த இரு மீனவர்கள் நடுக்கடலில் தத்தளித்து கரை நேர்ந்துள்ளனர். 23

இந்திய - இலங்கை கூட்டுப் பயிற்சிகள் இன்று ஆரம்பம்

(புதுடில்லி)

இலங்கை - இந்திய கடற்படைகளின் கூட்டு பயிற்சிகள் இன்று ஆரம்பமாகின்றன. கூட்டுப் பயிற்சிகளுக்காக இலங்கையில் இருந்து சயுர மற்றும் சாகர ஆகிய ரோந்துக் கப்பல்களுடன் 368 கடற்படையினர் விளக்கப்படினம் 24

முரசறைந்து வெளியேற்றப்பட்ட மூதாட்டி மீள சொந்த வீட்டில் குடியமர்த்தப்பட்டார்

பலரது நிதியுதவியில் வீடு மீட்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் நீதிமன்ற உத்தரவின் பேரில் முரசறைந்து வீட்டைவிட்டு வெளியேற்றப்பட்ட மூதாட்டியின் வீடு நேற்று மீண்டும் அவருக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

காரைநகரைச் சேர்ந்த மனிதநேயக் கொடையாளர்களின் நிதி உதவியுடன் அந்த பெண்மணி நேற்று மாலை மீண்டும் தனது சொந்தவீட்டில் குடியேறினார். 23

இந்து மத வழிபாட்டிடங்களை ஆக்கிரமிக்கும் புத்தர் சிலைகள்

24

இராணுவத்தை தண்டிக்க துளியும் இடமளியோம்!

ஐ.தே.க. நேற்று அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் விடுதலைக்காக போராடிய இராணுவத்தை உள் நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ தண்டிப்பதற்கு இடமளிக்கப் போவது இல்லையென தேசிய அரசாங்கத்தின் முக்கிய பங்காளிக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப் 24

நெடுங்கேணியில் வாகன விபத்து

இளைஞன் பலி; மூவர் படுகாயம்

(வற்றாப்பளை)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் நெடுங்கேணி வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளதுடன் மூவர் படுகாயமடைந்துள்ளார்கள்.

நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் நெடுங்கேணியில் இருந்து முச்சக்கரவண்டியில் பயணித்த நான்கு இளைஞர்கள் பாரஊர்தியுடன் மோதுண்டு விபத்திற்குள்ளாகியுள்ளனர்.

இதில்முச்சக்கர வண்டியில்சென்ற வசந்தபுரம் கற்சிலைமடுவினை சேர்ந்த ஜெனந்தன் என்ற இளைஞன் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். மேலும் அவருடன் பயணித்தவர் 24

வலிப்பு ஏற்பட்டு கடலினுள் வீழ்ந்த குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

வீதியால் சென்றுகொண்டிருந்த போது திடீரென வலிப்பு ஏற்பட்டு கடலினுள் தவறி விழுந்ததில் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

புங்குடுதீவு 8 ஆம் வட்டாரத்தை சேர்ந்த லோகநாதன் 24

நடுவு நிலை தவறாது நன்னெறி தரக்கும் உங்கள் நாளிதழ்

யானைகளை விற்கின்ற பரிந்துரைக்கு எதிர்ப்பு

(கொழும்பு)

நாட்டில் இருக்கின்ற யானைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் அவற்றை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யலாம் என்று நாடாளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் ஊடக பிரதி அமைச்சர் கருணாரத்ன பரணவிதான தெரிவித்துள்ள கருத்துக்கு எதிர்ப்பு எழுந்துள்ளது.

அண்மையில் இரத்தினபுரி, பலான்கோட பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அமைச்சர் பரணவிதான, இலங்கையில் அதிகபட்சமாக 4 ஆயிரம் யானைகள் மட்டுமே இருக்கலாம்.

ஆனால் தற்போது இலங்கையில் 6 ஆயிரம் யானைகள் காணப்படுவது மிக பெரிய அதிகரிப்பு என்று குறிப்பிட்டுள்ளார்.

இதனால்தான் யானைகளின் மூலம் பொது மக்களுக்கு ஏற்படும் ஆபத்துக்கள் அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்திருந்த பரணவிதாரண,

எனவே, யானைகளை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யும் திட்டத்தை நடைமுறைபடுத்தலாம் என்று தெரிவித்ததுடன் இவ்வாறான திட்டங்களுக்கு மக்கள் எதிர்ப்பு தெரிவிப்பதால் எந்த பயனும் ஏற்படபோவதில்லை என்றும் கூறினார்.

அமைச்சரின் இந்த கருத்துக்களுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள இலங்கை யானை உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் தமசிரி கருணாரத்ன, இலங்கையில் யானைகளின் எண்ணிக்கை பெருமளவு குறைந்து வருவதாக தெரிவித்துள்ளார்.

மனிதர்களின் நடவடிக்கைகள் காரணமாக நாள்தோறும் பெரும் எண்ணிக்கையான யானைகள் இறந்து வருவதாக குற்றம் சாட்டிய அவர், தற்போது பெரஹரா போன்ற பௌத்த வழிபாட்டு நிகழ்வுகளுக்கு பயன்படுத்தக்கூடிய 115 யானைகள் மட்டுமே இருப்பதாக தெரிவித்தார்.

எனவே, யானைகளை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யும் திட்டத்தை தாங்கள் எதிர்ப்பதாகவும் இலங்கை யானை உரிமையாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை அமைச்சர் பரணவிதானவின் கருத்துக்களுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள வன விலங்குகள் பாதுகாப்பு அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா, நமது நாட்டின் யானைகளை விற்பனை செய்யவோ, வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கவோ அனுமதிக்கப்போவதில்லை என்று தெரிவித்திருக்கிறார்.

சட்ட விரோதமாக காடுகளை அழிப்பது மற்றும் மனிதர்களின் பலமோசமான நடவடிக்கைகளால், யானைகள் இறந்து வருவதாக தெரிவித்த அமைச்சர் ஜெயவிக்கிரம பெரேரா, இந்த நிலையில் யானைகளை விற்பனை செய்ய முடியாதென்றும் அவற்றை பாதுகாக்க தான் சிறப்புதிட்டங்களை முன்னெடுத்துள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளனர். (செ-11)

அதிபர் பதவிக்கு விண்ணப்பம்

யா/மிருசுவில் அ.த.க பாடசாலை (வகை II)யில் நிலவும் அதிபர் பதவி வெற்றிடத்திற்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்களை எதிர்பார்ப்பதாக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். இதன்படி விண்ணப்பிப்பதற்கான **தகைமைகள்,**

குறித்த பாடசாலைக்கு விண்ணப்பிப் போர் இலங்கை அதிபர் சேவை தரம் II அல்லது அதற்கு மேற்பட்ட தரமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

குறித்த தரத்தைச் சேர்ந்த அதிபர்கள் விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில் இலங்கை அதிபர் சேவை தரம் IIIஐச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

நிபந்தனைகள்.

அதிபர் நியமனத்தின் போது தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் நிரந்தரமாகச் சேவையாற்றும் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் தற்போது கடமையாற்றும் பாடசாலையில் 3 வருடங்கள் தொடர்ச்சியான சேவையினை ஆற்றியிருத்தல்வேண்டும்.

தங்கள் அதிபர் தரத்திற்குப் பொருத்தமற்ற பாடசாலைகளில் கடமையாற்றுபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவுத் திகதியிலிருந்து ஆகக் குறைந்தது மூன்று வருடங்கள் கடமையாற்றக் கூடியவயதெல்லையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை வலயக் கல்வி அலுவலக நிர்வாகக் கிளையில் பெற்று பூரணப்படுத்தி 20.09.2017ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளீர்கள். (செ)

வட மாகாணத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய 176 பேருக்கு ஆசிரியர் நியமனம்

பிரதமர் ரணில் நாடாளுமன்றில் தெரிவிப்பு

(கொழும்பு)

வட மாகாணத்தில் ஒப்பந்த அடிப்படையில பணியாற்றிய 176 பேர் இலங்கை ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கப்படவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எந்த வித இன அடிப்படையிலும் ஆசிரியர நியமனங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட மாட்டாதென்றும், எவருக்காவது அநீதி இழைக்கப்பட்டிருப்பின் அது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் ரத்னாயக்க நேற்றைய அமர்வின் போது ஒப்பந்த, தொண்டர் அடிப்படையிலான ஆசிரியர்களை நிரந்தர சேவையில் இணைத்துக் கொள்வது தொடர்பில் முன்வைத்த கேள்விக்கு பதிலளிக்கையிலேயே பிரதமர் இதனை தெரிவித்தார்.

வட மாகாணத்தில் சில பகுதிகளில் பணியாற்றுவதற்கு விருப்பமுள்ள ஆசிரியர்கள் இல்லாததினாலும் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் கடமைகளை பொறுப்பேற்காததினாலும் அந்த பிரதேசத்தில் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுதிகளை கொண்டவர்கள் குறைவாக காணப்படுவதினால் இந்த பிரதேசங்களில் ஒப்பந்த, தொண்டர் மற்றும் பகுதிநேர அடிப்படையில் ஆசிரியர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

இந்த விடயங்களை கருத்தில் கொண்டு அமைச்சரவையினால் வடமாகாணத்தில் தொண்டர் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய அடிப்படை தகுதிகளை பூர்த்தி செய்து சுமார் 3 வருட காலம் சேவையை கொண்டிருந்தவர்களை சேவையில் இணைத்துக் கொள்வதாக கொள்கை ரீதியில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஆசிரியர் சேவைக்கு தகுதி பெற்ற 339 பேர் இருந்தனர். இதற்கமைவாக சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை ஆவணத்தின் மூலம் சேவைக்காலத்தை நீடிப்பதற்காக தகுதி பெற்றோர் எண்ணிக்கை 676 வரையில் அதிகரித்தது. தற்போது வடமாகாணத்தில் ஒப்பந்த அடி ப்படையில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 167 ஆகும். இந்த ஆசிரியர்களை ஆசிரியர் சேவையில் உள்வாங்குவதற்கு அமைச்சரவை ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை இந்த ஆவணத்திற்கு அங்கீகாரம் அளித்துள்ளது. இவர்கள் ஆசிரியர் சேவையில் உள்வாங்கப்படவுள்ளனர். இந்த பிரச்சினையில் அனைத்து தரப்பினருக்கும் நீதி கிட்டும் வகையில் செயற்பட கல்வி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

எந்த வித இன அடிப்படையிலும், வடமாகாணத்தில் ஆசிரியர் நியமனம் வழங்கப்படமாட்டாது. எவருக்கேனும் அநீதி இழைக்கப்பட்டிருக்குமாயின் அது தொடர்பில் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க ஆலோசனை வழங்கப்படும் என்றும் பிரதமர் பதில் தெரிவித்தார்.(செ-11)

ஏல விற்பனை

யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் பாவித்த பொருட்கள் பாடசாலை மண்டபத்தில் 20.09.2017 புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு ஏலவிற்பனை. கணினித்திரை-02, லேசர் பிறிண்டர்-01, CPU-05

(சி-9559) -அதிபர்

கார், வான் வாடகைக்கு

கார், வான் நாள் வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

RP Rent a Car (459)

0770295211

கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் **பொன்னம்பலம் அதீஸ்சன்** அவர்களின் அன்புத் தாயார் அமரர் **திருமதி இராஜேஸ்வரி பொன்னம்பலம்** அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி! சாந்தி!!

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்

(459)

துயர் பகிர்தல்

திருமதி கணபதிப்பிள்ளை நாகேஸ்வரி
(முள்ளானை, இளவாலை)

நேற்றையதினம் (06.09.2017) இறைபதம் அடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு அமரர் கணபதிப்பிள்ளை நாகேஸ்வரி அவர்களின் பூதவுடல் "சூரியன் கலட்டி" இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

முள்ளானை, இளவாலை.

மலர்வு:-25.07.1923
உதிர்வு:-06.09.2017

(459)

வைரமுத்து பரமானந்தம்
(சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்)

மலர்வு 13 ● 10 ● 1926

உதிர்வு 04 ● 09 ● 2017

அராலியை பிறப்பிடமாகவும் தெல்லிப்பளையை வதிவிடமாகவும் கொண்ட வைரமுத்து பரமானந்தம் 04.09.2017 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து-தங்கமுத்து தம்பதிகளின் ஏகபுத்திரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம்-இராஜஇராஜேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, மங்கையற்கரசி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற தர்மபூபதியின் அன்புக் கணவரும், மணிசேகரன், மதிவதனி, மோகனசேகரன், உதயசேகரன், ஜெயசேகரன், நிர்மலசேகரன், தனசேகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மாலாரமணி, சரவணபவன், அம்பிகாதேவி, கமலினி, சிவபவானி, கீதா, பிறேமினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சரண்யா, கௌசல்யா, ஸ்ரீராம், ராம்பிராஷ், ஆரபி, கயல்விழி, யதுகுலன், கிருஸ்ணிகா, தமிழினி, கோகுலன், நிலேஷ், நிலக்ஷி ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2017) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ்.வீதி, தூர்க்காபுரம், தெல்லிப்பளை. | 021 205 9829, 077 984 7694 | தகவல்: குடும்பத்தினர். (452)

கொத்தணிக் குண்டுகளுக்குத் தடை!

அனைத்துலக பிரகடனத்தில் இலங்கை கைச்சாத்திடும்

தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

கொத்தணிக் குண்டுகளைத் தடை செய்யும் அனைத்துலக பிரகடனத்தில் இலங்கை இணைந்து கொள்ளும் என்று ஜெனிவாவுக்கான இலங்கை தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் நேற்று முன்தினம் நடந்த கொத்தணிக் குண்டுகளைத் தடை செய்யும் அனைத்துலக பிரகடனத்துக்கான அரசதரப்பு பிரதிநிதிகள் குழுக்களின் ஏழாவது மாநாட்டிலேயே ரவிநாத் ஆரியசிங்க இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

2011ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை கொத்தணிக் குண்டுகளைத் தடை செய்யும் பிரகடன மாநாட்டில் கலந்து கொண்டு வருகிறது.

விரைவில் இந்த பிரகடனத்தில் கையெழுத்திடுவதாக இலங்கை உறுதியளித்திருப்பதை, கொத்தணிக் குண்டுகளைத் தடை செய்வதற்கும், கண்ணிவெடிகளைத் தடை செய்வதற்கும் ஆதரவாக பரப்புரைகளை மேற்கொள்ளும் நாடுகளும் அமைப்புகளும் வரவேற்றுள்ளன.

இலங்கை கொத்தணிக் குண்டுகளை உற்பத்தி செய்வதோ ஏற்றுமதி செய்வதோ இல்லை என்ற போதிலும், இறுதிக்கட்டப் போரில் கொத்தணிக் குண்டுகளைப் பயன்படுத்தியதாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

13 இன் மூலம் அதிகாரத்தை பகிரலாம்

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை அவசியமே!

சுதந்திரக் கட்சி விடாப்பிடி

புதிய அரசியல் அமைப்பு தொடர்பிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்மொழிவுகள் பாராளுமன்ற வழிநடத்தல் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 13 ஆம் திருத்தத்தின் மூலமான அதிகாரப் பகிர்விற்கு ஆதரவு. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அவசியம் என்பதை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மீள வலியுறுத்தியுள்ளது.

புதிய அரசியல் அமைப்பு குறித்த சகல கட்சிகளினதும் முன்மொழிவுகள் பாராளுமன்ற வழிநடத்தல் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இந்த விடயத்தில் இழுத்தடிப்புகளை முன்னெடுத்து வந்தது.

இந்நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டினை ஆராய்ந்து கட்சியின்முன்மொழிவுகளைவழங்கும் வகையில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் ஜனாதிபதி குழுவொன்றை நியமித்திருந்தார். இரண்டு மாத கால எல்லையில் தமது நிலைப்பாடுகளை முன்வைப்பதாக இவர்கள் தெரிவித்திருந்த நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முன்மொழிவுகளை வழிநடத்தல் குழுவில் சமர்ப்பித்துள்ளதாக தெரியவருகின்றது.

அதிகாரப் பகிர்வு மற்றும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையில் முரண்பட்டு வந்த ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினர் தற்போது 13 ஆம் திருத்தத்தின் மூலமாக அதிகாரப் பகிர்வை நோக்கிச் செல்ல இணக்கம் தெரிவித்துள்ளனர். சகல தரப்பினரதும் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் அதிகாரப் பகிர்வை முன்னெடுக்க முடியும் என இதன் போது அவர்கள் இணங்கியுள்ளனர்.

அதேபோன்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையினை நீக்கக் கூடாது என்ற நிலைப்பாட்டில் தொடர்ந்தும் தாம் இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளனர். ஜனாதிபதியின் அதியுச்ச அதிகாரங்களை நீக்கவேண்டும் எனினும் அதிகாரங்களை முழுமையாக பறிப்பதை ஒற்றையாட்சி நாட்டில் உகந்த செயற்பாடாக கருத முடியாது என தெரிவித்துள்ளதாக கூறப்படுகின்றது. ஆகவே புதிய அரசியல் அமைப்பில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இருக்க வேண்டும் என்பதை சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் இலங்கைக்கான சட்டங்களை இலங்கையின் நீதிமன்றங்களின் மூலமாக கையாள வேண்டும் என்பதை புதிய அரசியல் அமைப்பு ஆணித்தரமாக வலியுறுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட முக்கிய எட்டு விடயங்களை உள்ளடக்கிய தமது முன்மொழிவுகளை பாராளுமன்ற வழிநடத்தல் குழுவிற்கு சமர்ப்பித்துள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

மகாநாயக்கர்களின் சொல்லை இந்த அரசு கேட்பதேயில்லை

மகிந்த ராஜபக்ஷ கவலை

அரசாங்கம் மகாநாயக்க தேரர்களின் ஆலோசனைகளைக் கேட்பதில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார். மகாநாயக்க தேரர்களினால் வழங்கப்படும் ஆலோசனை வழிகாட்டல்களை தற்போதைய அரசாங்கம் எந்த வகையிலும் செவிமடுப்பதில்லை. புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டத்தினால் புனித தலங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. இதன் ஊடாகவே அரசாங்கம் எதேச்சதிகார போக்கில் செயற்படுவது அம்பலமாகியுள்ளது என அவர் தெரிவித்தார்.

இரத்தினபுரியில் அமைந்துள்ள விஹாரை ஒன்றில் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

சைட்டத்துக்கு எதிராக இன்று மாபெரும் பேரணி

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியை தடை செய்ய அரசு உத்தரவிட வேண்டும் எனக் கோரி இன்று கொழும்பில் மாபெரும் பேரணி நடைபெறவுள்ளது.

'மாணவ மக்கள் சக்தி அரங்கம்' என்ற பெயரில் இந்த எதிர்ப்புப் பேரணி ஆரம்பிக்கப்படும் என்று அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

காலியில் ஆரம்பிக்கப்படும் பேரணியைத் தொடர்ந்து மாவட்டங்கள் தோறும் இந்தப் பேரணி தொடர்ச்சியாக நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அந்த ஒன்றியம் அறிவித்துள்ளது. (இ-7)

ஜெகத் ஜெயசூரியவை மாட்டி விட்டவர்களில் இருவர் பெண்களாம்

சிங்கள ஊடகம் தகவல்



முன்னாள் இராணுவ தளபதி ஜெகத் ஜெயசூரியவுக்கு எதிராக போர்க் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டதன் பின்னணியில், இரண்டு பெண்கள் உள்ளிட்ட நான்கு இலங்கையர்கள் உள்ளதாக பாதுகாப்பு பிரிவை மேற்கோள்காட்டி திவயின செய்தி வெளியிட்டுள்ளது. இவர்களில் ஒருவர் இலங்கை நீதிமன்றத்தினால் தீவிரவாத செயற்பாடு தொடர்பில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட வராவார் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஜெகத் ஜெயசூரியவுக்கு எதிரான குற்றச்சாட்டு ஐக்கிய நாடுகளின் முன்னாள் அதிகாரி யஸ்மின் சூக்காவின் சார்பில் பிரேசில் உள்ளிட்ட நாடுகளில் தாக்கல் செய்யப்பட்டது. இதற்கான நிதியுதவியை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியுள்ளதாக தெரிய வந்துள்ளது என்றும் அந்தச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது. (இ-7)

ரி20 போட்டியிலும் இந்தியாவிடம் வீழ்ந்தது இலங்கை



ரி20 போட்டியிலும் இந்தியாவின் வெற்றி நடை தொடர இலங்கை பரிதாபகரமாக வீழ்ந்தது.

இப்போட்டியில் சிறப்பாக செயற்பட்ட இந்திய அணித் தலைவர் விராட் ஹோலி அரைச்சதம் விளாசி வெற்றிக்கு வழிகோலினார்.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி டெஸ்ட் (3-0), ஒருநாள (5-0) தொடரை முழுமை யாக கைப்பற்றியது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான ஒரே ஒரு ரி20 போட்டி நேற்று கொழும்பு பிரேமதாஸ மைதானத்தில் நடந்தது.

மழை காரணமாக போட்டி 40 நிமிடம் தாமதமாக ஆரம்பித்தது. நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் ஹோலி களத்தடுப்பை தேர்வு செய்தார்.

இந்திய அணியில் ரகானே, ஷர்துல் தாகூர் நீக்கப்பட்டு லோகேஷ் ராகுல், அக்சர் படேல் இடம்பிடித்தனர்.

இலங்கை அணிக்கு டிக்வெல, அணித் தலைவர் உபுல் தரங்க ஆரம்பம் கொடுத்தனர். தரங்க (5) ஒற்றை இலக்கில் திரும்பினார். டிக்வெல 17 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். சாகல் பந்துவீச்சில் முனவீர தொடர்ந்து 2 சிக்ஸர் விளாசினார். மத்யூஸ் (7) ஏமாற்றினார். முனவீர (53) அரை சதம் கடந்தார். சாகல் 'சுழலில்' திசார பெரேரா (11), ஷானக (0) சிக்கினர். 20 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 170 ஓட்டங்கள் எடுத்தது. பிரியஞ்சன் (41),

உடான (19) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஹோலி விளாசல்

பின், களமிறங்கிய இந்திய அணிக்கு ரோகித், லோகேஷ் ராகுல் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. ரோகித் (9) விரைவில் திரும்பினார். ராகுல் 24 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். தனது 50ஆவது சர்வதேச ரி20 போட்டியில் களமிறங்கிய ஹோலி அசத்தினார். திசார பெரேரா பந்துவீச்சில் இரண்டு பவுண்டரி அடித்த இவர் அரை சதம் விளாசினார். இவருக்கு மணிஷ் பாண்டேவும் கைகொடுக்க வெற்றி உறுதியானது. ஹோலி 82 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பாண்டே ஒரு பவுண்டரி அடிக்க, இந்திய அணி 19.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 174 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட்டுக்களால்வெற்றி பெற்றது.

மணிஷ் பாண்டே (51), தோனி (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இதன்மூலம், இந்திய அணி இம்முறை இலங்கை மண்ணில் டெஸ்ட், ஒரு நாள், ரி20 என மூன்றுவித தொடரையும் முழுமையாக கைப்பற்றி அசத்தியது.

சிட்டாஹொங் டெஸ்ட் 3ம் நாள்

டேவிட் வோர்னர், பீற்றர் ஹான்ட்ஸ்கேம்ப் அபாரம்

ஆஸியிடம் மாட்டிக்கிட்டது பங்களாதேஷ்

தொடர் வெற்றி கடும் இக்கட்டான நிலையில்

மிர்புர் டெஸ்டின் ஹீரோவான ஷகிப் அல் ஹசனின பந்துகளை இம்முறை நேர்த்தியாக எதிர்கொண்ட வோர்னர், ஹேண்ட்ஸ்கோம்ப் இணையின் சிறப்பான துடுப்பாட்டத்தால் நேற்றைய 3ஆம் நாள் ஆட்ட நேர நிறைவில் அவுஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களை இழந்து 377 ஓட்டங்களைக் குவித்துள்ளது. இதன்மூலம் ஒரு விக்கெட் கைவசமிருக்கும் நிலையில் 72 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது. இது அவுஸ்திரேலிய அணிக்கு ஆரோக்கியமான முன்னிலையாக அமைகிறது.

பங்களாதேஷ் - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான 2ஆவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி சிட்டஹொங்கில் நடைபெற்று வருகிறது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் தனது முதல் இன்னிங்சுக்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 305 ஓட்டங்கள் சேர்த்தது.

துடுப்பாட்டத்தில் பங்களா தேஷ் அணி சார்பில் முஸ்பிகுர் ரஹீம் 68, சபீர் ரஹ்மான் 66 ஓட்டங்களை குவித்தனர்.

பந்துவீச்சில் அசத்திய நேதன் ல்யன் 7 விக்கெட்டுக்கள் அள்ளினார்.

தொடர்ந்து முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய அவுஸ்திரேலியா 2ஆவது ஆட்ட நேர நிறைவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 225 ஓட்டங்களை எடுத்தது. களத்தில் வோர்னர் 88, ஹேண்ட்ஸ்கேம்ப் 69 ஓட்டங்களுடன் இருந்தனர்.

நேற்று 3ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. ஹேண்ட்ஸ்கேம்ப் 82 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ரன் அவுட் ஆனார். சதம் அடித்த வோர்னர் 123 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

வோர்னர் ஆட்டமிழக்கும் போது அவுஸ்திரேலியா 4 விக்கெட்டுக்களை இழந்து 298 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

அதன்பின் விக்கெட்டுக்கள் மளமளவென சரிந்தன. கார்ட்ரைட் (18), வேட் (8), மக்ஸ்வெல் (38), ஏகர் (22), கம்மின்ஸ (4) அடுத்தடுத்து ஆட்டமிழக்க,

நேற்றைய 3ஆவது நாள் ஆட்ட முடிவில் அவுஸ்திரேலியா 9 விக்கெட்டுக்களை இழந்து 377 ஓட்டங்கள் குவித்துள்ளது.

இதன்மூலம் ஒரு விக்கெட் கைவசமிருக்கும் நிலையில் 72 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது.

போட்டியின் 4ஆவது நாள் ஆட்டம் இன்றாகும்.



மரண அறிவித்தல்

தை.காமராஜ்

பதுளையைப் பிறப்பிடமாகவும் இல.26, கனகாம்பிகைக் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தை.காமராஜ் (இரணைமடு ஐங்கையன் சுவையூற்று உரிமையாளர், முருகண்டீஸ்வரர் ஆலய ஸ்தாபகரும் தர்மகர்த்தாவும் தலைவரும்) அவர்கள் நேற்று (06.09.2017) புதன்கிழமை அகால மரணம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-
076 607 0469

(C-9560)

தகவல்:-
குடும்பத்தினர்

ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றுவதற்கு விரும்பும் ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் விண்ணப்பிக்கலாம்

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் இயங்கும் ஆதார வைத்தியசாலை ஆய்வு கூடங்களுக்கு, ஆய்வு கூட தொழில் நுட்பவியலாளர்களுக்கான பற்றாக்குறை நிலவுகின்றமையினால் ஆதார வைத்தியசாலைகளில் கடமையாற்றுவதற்கு தகுதியான 65 வயதிற்குட்பட்ட ஆய்வு கூட தொழில் நுட்பவியலாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எனவே கடமையாற்ற விரும்புவோர் வடமாகாண அமைச்சரவை வாரியத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கேதுவாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையுடன் 2017.09.22ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தொலைபேசியூடாகவோ (021-2222278) தொடர்பு கொண்டு விபரங்களை சமர்ப்பிக்கவும் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க.நந்தகுமாரன் அறிவித்துள்ளார். (இ)



சேவை நலன் பாராட்டு

தமிழ்ப்பாட இணைப்பாளரும் தமிழ்ப்பாட ஆசிரியருமான
செல்வி. சின்னத்துரை நாமகள் (B.A.Dip.in edu)

சேவை விபரம்

01) 27.11.1989 - 31.12.1996 வரை-
யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்பாடசாலை.
02) 01.01.1997-04.10.1997 வரை-
வ/கற்பகபுரம் அ.த.க.பாடசாலை.
03) 05.10.1997-05.04.1999 வரை-
வ/ கோமாங்குளம் சித்திவிநாயகர் வித்தியாலயம்.
04) 06.04.1999-03.03.2014 வரை-
க/விக்கினேஸ்வரா தமிழ் மகா வித்தியாலயம்.
05) 04.03.2014-06.09.2017 வரை-
யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்பாடசாலை.

நாமகள் எனும் நாமம் கொண்ட நல்லாசிரியை
அகவை அறுபதிலும் அழிவில்லாத
அற்புத ஆளுமையின் இணையற்ற உச்சம்
இருபத்தெட்டு ஆண்டுகள் ஆசிரியப் பணியாற்றி
தேனாக தமிழை இனிதாக தெளிவாக
கற்பித்து பண்புறு மாணவர் பயனுற்று
கற்றவர் சபையில் காவியத்து நாயகராய்
காலமெல்லாம் வலம்வர வைத்த பேராசிரியை
ஓய்வு பெறும்வரை ஓயாது உழைத்த ஓயாத அலை– நீங்கள்
கல்விப் பணியுடன் இலக்கியப் பணியாற்றி
எழுத்துப் பணியுடன் நீண்ட பணியாற்றிய
உங்கள் மகத்தான பணி தொடரட்டும்
மலரட்டும் உங்கள் வாழ்வில் சந்தோசம்
பாரெங்கும் உயரட்டும் உங்கள் புகழ்!.

(455)

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை

மீனம் புதியவர்களின் நட்பு கிடைக்கும், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது.

மேடம் ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணிபுரிதும் சூழ்நிலை அமையலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள்.

இடபம் அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், கலகலப்பான நகைகள் வந்து சேரலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

மிதுனம் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், தொழில் வளர்ச்சி கூடும் நாள். அரசு வழியில் அனுகூலமுண்டு.

கும்பம் ஆரோக்கியம் கம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், எதிர்பார்ப்புகள் நிறைவேறும், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள்.

மகரம் கேலிப்பேச்சில் அக்கறை காட்டுவீர்கள், பிற இனத்தவர்களால் பெருமைகள் வந்து சேரலாம், சிலர் உங்களிடம் தொழில் ரீதியாக உதவி கேட்டு வரலாம்.

தனுசு எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.

விருச்சிகம் மகிழ்ச்சி கூடும் நாள், தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், பெற்றோர்களால் ஆதாயமுண்டு.

துலாம் நினைத்த காரியத்தை எளிதில் செயல்படுத்திமுடிப்பீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், நண்பர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

கன்னி சந்தேகத்தவர்களால் ஏற்றமும் கிடைக்கும் நாள், திருமண முயற்சிகள் கைகூடும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

இராசி பலன்

சந்			
	கிரகநிலை சந்திராஷ்டமம் மகம் பூரம் காலை 8.23 மணிக்கு மீன சந்		ராகு சுக்ர
சேது			குரு புத சூரி
	சனி	செ	

07.09.2017
(ஆவணி 22, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
பிரதமை பிற்பகல் 12.35 மணிவரை
பூரட்டாதி பிற்பகல் 2.27 மணிவரை
சுபநேரம் 7.34-9.04 மணிவரை
இராகுகாலம் 01.34-3.04 மணிவரை
வளவன்

ரிஷபம் மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், மனதில் உற்சாகமும் புதுத்தெம்பும் அதிகரிக்கும் நாள், கோபத்தைக் குறைத்துக்கொள்வது நல்லது.

சிம்மம் வழிபாட்டால் மகிழ்ச்சி காண வேண்டிய நாள், வீண் பழுதுச் செலவுகள் ஏற்படலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

புதிய அரசியலமைப்பு தொடர்பாக சர்வதேசத்தை நம்பியிருக்காமல் த.தே.கூ. விரைந்து செயற்பட வேண்டும்

சித்தார்த்தன் எம்.பி. வலியுறுத்து



எந்தவொரு வெளிநாட்டு அரசாக இருந்தாலும் அவர்கள் தமது நன்மையை தான் முன்னிறுத்துவார்கள் என்பதில் எமக்கு எந்தவித சந்தேகமும் இருக்கக்கூடாது என தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், புதிய அரசியல் அமைப்பு தொடர்பாக சர்வதேசத்தை நம்பியிருக்காமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் கலந்துரையாடலை மேற்கொண்டு முடிவெடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில், உத்தேச அரசியலமைப்பு முயற்சி குறித்த கருத்துப் பகிர்வு மற்றும் பிரகடன வெளியீடு நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு "அரசமைப்பு உருவாக்க முயற்சியின் போக்கு" தொடர்பாக கருத்துரை வழங்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

இந்த அரசின் இரு தலைவர்களான ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கம் தொடர்பாக கூறும் கருத்துக்கள் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளது. தமிழ் மக்களின் அபிலாஷைகளை தூக்கி ஒரு பக்கத்தில் வைக்கக்கூடியதாகவே பேசி வருகிறார்கள்.

அரசியல் அமைப்பு தொடர்பில் ஆறு உப குழுவில் ஒரு குழுவுக்கு தலைவராக நான் இருந்திருக்கிறேன். அக்குழுவில் அனைத்து கட்சிகளை சேர்ந்த 11 பேரும் உள்ளார்கள். இதில் முக்கியமாக கூட்டு எதிர்க்கட்சியினர் வந்த முதல் நாளே எம்மிடம் கேட்ட கேள்வி, அதிகாரப் பரவலாக்கம் தேவையா? மாகாண சபை தேவையா? என்று தான் கேட்டார்கள்.

அவர்களுக்கு அது தொடர்பில் அக்கறை எதுவும் இல்லை. ஆனால் அதிலே அரசில் இருக்கக்கூடிய பலர் குறித்த அறிக்கையில் பல விடயங்களைச் சேர்ப்பதற்கும் முன்னின்றார்கள். அதே போல் பல நிபுணர்கள் தென்னிலங்கையில் இருந்து வந்திருந்தார்கள். அவர்களும் மிகப் பெரிய அளவில் பங்குகளை வகித்திருந்தனர்.

அத்துடன் ஏனையமாகாண சபை முதலமைச்சர்கள், அமைச்சர்கள், எதிர்க்கட்சியினரை அழைத்து கருத்தறிந்திருந்தோம். அதிலே அவர்களுடைய கருத்து மிகத் தெளிவாக இருந்தது. அதிகாரப் பரவலாக்கல் 13 ஆம் திருத்தச் சட்டத்தை விடக் கூடுதலாக போக வேண்டும். அதிகாரங்கள் பகிர்ந்தளிக்க வேண்டும் என பெரும்பான்மை கருத்துக்கள் இருந்தன. எமது குழுவுக்குத் தரப்பட்ட அதிகாரத்துக்கு உட்பட்ட வகையில் கருத்துக்களைக் கேட்டிருந்தோம்.

பொதுவாக அதிகாரம் பகிரப்படவேண்டும் என்று தெற்கில் கருத்துள்ளது. ஆனால் பாராளுமன்றில் பெரும்பான்மையான கருத்தாக ஒற்றையாட்சி தான் இருக்க வேண்டும் என உள்ளது. பழைய மூத்த அரசியல் வாதிகள் எமக்கு புத்திமதி சொல்கிறார்கள் எவ்வாறெனில் 13 ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதை கேளுங்கள். மேலதிகமாக கேட்க வேண்டாம் என தெரிவிக்கிறார்கள். 13 ஆம் திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவதாயின் இவ்வளவு ஏற்பாடுகள் எதற்கு என்ற கேள்வியை நாம் கேட்கிறோம்.

அவர்களைப் பொறுத்த மட்டில் தேர்தல் முறைமை மாற்ற வேண்டும் என்பது தான் நோக்கமாக உள்ளது. அதாவது இப்போதுள்ள தேர்தல் முறையில் கூடுதலாக சிறுபான்மை மக்களில் தங்கியுள்ள தன்மை உள்ளது. அதை இல்லாமல் செய்ய வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாகும். சிறுபான்மையினரின் ஆதரவு இல்லாமல் வெல்ல வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடம் உள்ளது. எம்மால் அதை உணரக்கூடியதாக உள்ளது.

எங்களைப் பொறுத்த மட்டில் தமிழ் மக்கள் சமஷ்டியை வலியுறுத்தி அதை ஆணையாக இன்றுவரை கொடுத்துள்ளார்கள். அதே போல் சிங்கள மக்களைப் பொறுத்தமட்டில் ஒற்றையாட்சிக்கு வாக்களித்து வந்துள்ளார்கள். இந்த இரண்டும் எவ்வாறு ஒன்றாக இணைந்து நியாயமான தீர்வை கொண்டுவர முடியும்?

எம்மைப் பொறுத்த மட்டில் சமஷ்டி ஆட்சியை விடுத்து இறங்கிவேறு தீர்வுக்குபோவோமேயாக இருந்தால் அந்தத் தீர்வு 13 ஆம் திருத்தச் சட்டத்தை போல் எந்தவித அர்த்தமற்றதாக இருக்கும்.

நடவடிக்கைக் குழுவின் அறிக்கை வரவுள்ளது. அந்தக் குழுவின் அறிக்கைக்கு இணையாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கொடுக்கும் அறிக்கை வரவு ள்ளது. அத்தோடு மேலும் ஒரு அறிக்கை வருவதற்கான சாத்தியம் உள்ளது. அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வைக்கவுள்ள அறிக்கை. ஆனால் அதில் என்ன உள்ளது என எனக்கு தெரியாது அது பற்றி பேசவில்லை.

6 குழுக்களின் அறிக்கையும் வரும் .அது பாராளுமன்றில் விவாதிக்கப்பட்டு அதன் பின் வரைபு வரையப்பட்டு அந்த வரைவு அரசியல் அமைப்பு பேரவைக்கு வந்து நிறைவேற்றப்பட இன்னும் 3 வருடங்களாவது தேவை. அதற்குள் ஆட்சியும் மாறலாம்.

இலங்கை அரசை பொறுத்தமட்டில் சர்வஜன வாக்கெடுப்பை எதிர்ப்பதற்கு காரணம் அதில் உள்ள சில விடயங்களை மாற்றாமல் இருப்பதற்காகத்தான். மாற்றாமல் இருந்தால் அதில் எந்த பயனும்எமக்கு இல்லை. ஆகவே தான் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர், சர்வஜன வாக்கெடுப்புக்கு போக வேண்டும் என கோருகிறார். சிங்கள மக்களின் முழுமையான அங்கீகாரத்துடன் வரும் அரசியலமைப்பு மாற்றம் நிலைத்து நிற்கும் என கருதுகிறார்.

இது நடக்குமா? நடக்காதா? என எனக்கு தெரியாது. பல விடயங்கள் பேசப்படுகிறது. அவை எல்லாம் அவர்களின் கவனத்தில் எடுக்கப்படுகிறதா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டியுள்ளது.

இதுவரை உள்ள அரசியல் அமைப்புக்கள் முழுமையாக ஒரு பெரும்பான்மை இனம் அல்லது ஒரு கட்சி கொண்டு வந்த அரசியல் அமைப்பாகவே இருக்கிறது. சகல இன மக்களுடைய ஏற்புடனும் ஒரு அரசியல் அமைப்பு இன்று வரை வரவில்லை. இது வருமா? வராதா? என்ற கேள்விக்கு பதில் தெரியவில்லை. சர்வதேச அமைப்புக்களின் அழுத்தம் இதைக் கொண்டு வருமா? என்று நான் நம்பவில்லை.

சர்வதேசத்தினர் மிகக் கவனமாக எமது கருத்துக்களை கேட்கிறார்கள். ஆனால் அவர்கள் மிக கவனமாக இந்த அரசை விழ விட்டு விடாதீர்கள் என்று தான் பல சந்தர்ப்பங்களில் தெரிவிக்கிறார்கள். எந்தவொரு வெளிநாட்டு அரசாக இருந்தாலும் அவர்கள் தமது நன்மையை தான் முன்னிறுத்துவார்கள் என்பதில் எந்தவிதச் சந்தேகமும் எமக்கு இருக்கக்கூடாது. எமக்கு இது கடந்த 70 களில் விளங்காத காரணத்தினால் தான் சில பிழைகள் நடந்து போயுள்ளன.

எந்த அரசாக இருந்தாலும் தமது நன்மையை முன்னிறுத்தி அதற்குள் எம்மை சேர்க்கலாமா என பார்ப்பார்கள். அதை விடுத்து எமது நன்மை கருதிதான் செயற்படுவார்கள் என்பதில் நம்பிக்கை இல்லை. அந்த ரீதியில் அவர்களை பொறுத்த மட்டில் இந்த அரசு பிரச்சினை அற்றதாக உள்ளது. அதை கலைத்துவிடாதீர்கள் என கோருகிறார்கள். அப்படி நாங்கள் இருந்து விட முடியாது.

மகிந்தவின் பயத்தினால் தான் இந்த அரசு பல செயற்பாடுகளை செய்யாமல் இருப்பதாகவும் கூறப்படுகிறது. இதே போன்ற பல விடயங்கள் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினால் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. இருந்தாலும் கூறுவது மாத்திரம் அல்ல நிச்சயமாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கலந்துரையாடல் ஒன்றை விரைவில் நடத்த வேண்டும். அதில் அரசியலமைப்பு தொடர்பாக எதை முக்கியமாக பேச வேண்டும் என்பதை கதைத்து முடிவுகள் எடுக்கவேண்டும். என்னென்ன விடயங்கள் சேர்க்கப்பட வேண்டும். அதை சேர்க்காதுவிடத்து அரசியல் அமைப்பு உருவாக்கத்தில் பங்குபற்றக் கூடாது என்ற முடிவை எடுக்க வேண்டும். அவ்வாறு செய்வது தான் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக்கூடிய ஒரு நியாயமான தீர்வை உருவாக்குவதற்கு நாம் செய்யக்கூடிய கடமையாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

யாழ். காட்டுக் கந்தோர் வீதியில் வழிப்பறி சம்பவங்கள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம் காட்டுக் கந்தோர் வீதியால் பயணித்த முதியவர் மீது தாக்குதல் நடத்தி அவரிடமிருந்த சிறுதொகைப் பணத்தை இனம் தெரியாத நபர்கள் பறித்துச் சென்றுள்ளனர். தாக்குதலில் படுகாயமடைந்த முதியவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, கடந்த 2 ஆம் திகதி இரவு 8 மணியளவில் காட்டுக் கந்தோர் வீதியால் சென்று கொண்டிருந்த முதியவரை அவ் வீதியால் வந்த இரு இளைஞர்கள் வழி மறித்து தாக்குதல் நடத்தி அவரிடமிருந்து சிறு தொகைப் பணத்தை பறித்து சென்றுள்ளனர்.

தாக்குதலில் படுகாயமடைந்த முதியவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். காட்டுக் கந்தோர் வீதியால் இரவு வேளைகளில் பயணிப்போர் மீது தாக்குதல் நடத்திப் பணம் பறிக்கும் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (இ-10--107)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் கரவெட்டி பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள் பிரதேச செயலர் சிறிமோகனன் தலைமையில் ஒருமணி நேர உடற்பயிற்சியில் ஈடுபட்டனர். (படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)

108

தமிழரின் தலைவிதி எப்படியாகும்?

மாணவி வித்தியாவின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர் எனக் கருதப்படும் சுவிஸ்குமார் கைது செய்யப்பட்டதுடன் யாழ்ப்பாணத்தில் ஓர் அமைதிநிலை ஏற்பட்டது.

பொதுமக்கள் திரண்டு கோஷம் எழுப்பியதால் அனைவருமே விழிப்பாக இருக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது.

சுவிஸ்குமாரின் கைதோடு மாணவி வித்தியாவின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் ஒன்பது பேர் இதுவரை கைதாகியுள்ளனர்.

சொந்த ஊரில் சொந்த உறவில் உள்ள ஒரு மாணவியின் கொலையுடன் 9 பேர் சம்பந்தப்பட்டனர் என்பது அதிர்ச்சியை தரக்கூடிய தகவலே.

என்ன செய்வது சட்டம், பொலிஸ், பாதுகாப்பு என்ற நிர்வாகக் கட்டமைப்புக்கள் பற்றி இம்மியும் கவலை கொள்ளாது ஒன்பது பேர் ஒரு பாடசாலை மாணவியை கூட்டுவன்புணர்வுக்கு உட்படுத்தி கொலை செய்தனர் என்பதை நினைக்கும் போது கன்னங்கராவின் இலவசக் கல்வி படுதோல்வி கண்டுள்ளதா? என்று எண்ணத் தோன்றும்.

மாணவி வித்தியா கொலை நடந்தது என்ன?

கைதான ஒன்பது பேரில் ஒருவர் பிரதேச சபை ஒன்றில் வேலை செய்பவர்.

மற்றையவர் சுவிட்சர்லாந்தில் வாழ்பவர். ஏனையவர்களும் ஆகக் குறைந்தது சாதாரண தரம் வரை படித்தவர்கள். நிலைமை இதுவாக இருக்கையில் இரக்கமற்ற- மிருகத்தனமான ஒரு காரியம் பட்டப் பகலில் நடந்தேறியது எனும் போது எங்கள் தமிழ் சமூகத்தில் எங்கோ தவறு நடந்து வருகிறது என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

இவை யாழ்ப்பாணத்தில் நடக்க 21.05.2015 அன்று வவுனியா மாவட்டத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. மாணவி வித்தியாவின் படுகொலைக்கு எதிரான கண்டனங்கள் யாழ்ப்பாண மாவட்டம் என்ற எல்லை கடந்து வவுனியா மாவட்டத்திலும் அதன் தாக்கம் வெளிப்படுத்தப்பட்டது.

ஆம் மே 21 ஆம் திகதி வவுனியாவில் உள்ள அனைத்துக் கடைகளும் பூட்டப்பட்டிருந்தன. வவுனியா நகரம் வெறிச்சோடியது. மாணவி வித்தியாவுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற கோஷங்கள் அடங்கிய பதாகைகள் ஆங்காங்கே கட்டப்பட்டிருந்தன.

பாடசாலைகள் இயங்கவில்லை. சக மாணவிக்கு நடந்த வன்கொடுமையைப் பொறுக்கமுடியாது என்பதாக வவுனியா மாவட்டப் பாடசாலை மாணவர்களின் ஹர்த்தால் அனுஷ்டிப்பு இருந்தது.

மாணவி வித்தியாவின் படுகொலைக்கு எதிராக மாவட்டம் கூடந்த அளவில் மக்களின் ஆர்ப்பாட்டங்கள் நடந்து கொண்டிருக்க 22.05.2015 அன்று யாழ்ப்பாணத்திற்கு பிரதம நீதியரசர் க.ஸ்ரீபவன் அவர்கள் வருகைதந்து தாக்குதலுக்குள்ளான நீதிமன்றக் கட்டடத்தைப் பார்வையிட்டதுடன் நிலைமைகள் குறித்து நீதிபதிகள் மற்றும் சட்டத்துணைகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இதேவேளை பிரதம நீதியரசருடன் பொலிஸ்மா அதிபர் அடங்கிய குழுவினரும் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தனர்.



புங்குடுதீவின் ஒரு மூலையில் நடந்த கொலைக்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்க பிரதம நீதியரசர், பொலிஸ்மா அதிபர் ஏன்? இந்த நாட்டின் ஜனாதிபதி என அனைவரும் யாழ்ப்பாணத்திற்கு வர வேண்டியதாயிற்று.

பிரதம நீதியரசர், பொலிஸ்மா அதிபர் ஆகியோரின் யாழ்ப்பாண விஜயத்தை அடுத்து யாழ்ப்பாண பொலிஸ் கட்டமைப்பில் மிகப்பெரிய மாற்றம் நிகழ்ந்தது. யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லக்ஸ்மன் வீரசேகர, ஊர்காவற்றுறை தலைமை பொலிஸ் பரிசோதகர் ஆகியோர் அதிரடியாக இடமாற்றப்பட்டனர். இந்த மாற்றம் எதற்கானது என்பதை பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.

(வளரும்)

-புருசோத்தமன்-

பரந்தன்-பூநகரி வீதியில் விபத்து; மூவர் படுகாயம்

(பூநகரி)

கிளிநொச்சி பூநகரி பகுதியில் நடைபெற்ற விபத்தில் மூவர் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் பரந்தன்-பூநகரி (ஏ-32) வீதியில் நடைபெற்றது.

ஹயஸ் வாகனமும் காரும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இவ் விபத்து நேர்ந்தது.

சம்பவம் அறிந்து அவ்விடத்திற்கு விரைந்த பூநகரி பொலிஸார் விசாரணையை முன்னெடுத்தனர். வேகக்கட்டுப்பாட்டை இழந்தமையே விபத்திற்கு காரணம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர். (2-23)

தென்னை பயிர்ச்செய்கை சபையின் தென்னை தின விழாவை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் அளம்பில் பிரதேசத்தில் 200 பொலிப்பை கன்றுகள் பயனாளிகளுக்கு கடந்த மாதம் 25 ஆம் திகதி வழங்கி வைக்கப்பட்டதைப் படத்தில் காணலாம்.

ராணுவத்தினரிடமிருந்து விடுவிக்கப்பட்ட காணிகள் அனுமதியின்றி முறையற்ற விதத்தில் பகிர்ந்தளிப்பு

மாகாண காணி ஆணையாளர் குற்றச்சாட்டு

கிளிநொச்சி நகரத்தை அண்டிய பகதிகளில் இராணுவத்தினரின் பயன்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட காணிகள் பல மாகாண காணி ஆணையாளர்களின் அனுமதிகள் இன்றி முறையற்ற விதத்தில் வழங்கப்பட்டுள்ளதாக மாகாண காணி ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவில் பெறுமதி வாய்ந்த பல அரச காணிகள் அதிகாரிகளின் உதவியுடன் அபகரிக்கப்பட்டுள்ளபோதும், நகரில் வாழும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் காணிகள் இன்றி வாழந்து வருகின்றன.

இராணுவத்தினரின் பயன்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட காணிகள் கிளிநொச்சி குளத்தை அண்டிய குளத்தின் காணிகள் இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

குறித்த காணிகள் காணிகளற்ற யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட மிகவும் வறிய குடும்பங்கள் எவையும் காணிகளை அபகரித்துக் கொள்ளவில்லை அவர்களுக்கான காணித்துண்டுகள் எதுவும் வழங்கப்படவில்லை என்றும் மாறாக குறித்த காணிகளை மாவட்டத்தில் முக்கிய பொறுப்புக் களிலும் உயர் பதவிகளில் உள்ள அதிகாரிகளும் முதலாளி வர்க்கத்தினருமே காணிகளை அடாத்தாக பிடித்து ஆக்கிரமித்துள்ளனர். இது தொடர்பில் பல் வேறு பொது அமைப்புக்களும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளன.

இக்காணிகள் தொடர்பில் கடந்த 28 ஆம் திகதி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த மாகாண காணி ஆணையாளர், அண்மையில் பரவிப்பாஞ்சான் பகுதியில் ஒரு ஏக்கரும் கண்டாவளைப்பகுதியில் நாற்பது ஏக்கர் காணிகளும் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டுள்ளன. அது தொடர்பான விபரங்கள் எவையும் எமக்கு தெரியப்படுத்தப்படவில்லை.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள விடுவிக்கப்படும் காணிகள் தொடர்பான எந்த விபரங்களும் மாகாண காணி ஆணையாளராகிய எனக்கு அனுப்பி வைக்கப்படுவதில்லை.

அரச கருணிகளை அதில் வசிப்பவர்களுக்கு மாத்திரமே கொடுக்க முடியும். புதிய காணிகளை வழங்குவதாக இருந்தால் சரியான தீர்மானங்கள் எடுக்கப்பட்டு மாகாண காணி ஆணையாளரின் அனுமதியோடு காணிகளற்றவர்களுக்கு காணிக்கச்சேரிகள் வைக்கப்பட்டு காணிகள் வழங்கப்பட வேண்டும்.

ஆனால், பல பிரச்சினைகளுக்கு நான் முகம்கொடுத்திருக்கின்றேன், பல வழக்குகள் எனக்கு எதிராக இருக்கின்றன. ஆனால், எனக்கு எந்தவித தகவல்களும் தரப்படவில்லை.

இராணுவத்தினர் வசமிருந்து விடுவிக்கப்பட்ட காணிகளை இனங்கண்டு கொடுப்பதற்கும் பகிர்ந்தளிப்பதற்கும் மாகாண காணி ஆணையாளர் அமைச்சர் சார்பில் ஒரு பிரதிநிதியை நியமிக்க அனுமதிக்கவேண்டும் என்றும் குறிப்பிட்ட மாகாண காணி ஆணையாளர், கிளிநொச்சி பழைய மாவட்ட செயலகத்திற்கு அருகில் படையினர் வசமிருந்து விடுவிக்கப்பட்ட நான்கு அரை ஏக்கர் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக்காணிகள் உரிமையாளர்கள் தவிர கூடுதலான ஆட்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தக்காணிகள் எவ்வாறு யார் யாருக்கு கொடுக்கப்பட்டுள்ளது எந்தச் சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது என்ற கேள்விகள் என்னிடம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்கப்பட்டுள்ளதுடன், எனக்கு எதிராக வழக்கு ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளருக்கு கடிதங்களை அனுப்பியிருந்தேன், ஆனால் இதுவரை எந்த பதில்களும் எனக்கு கிடைக்கவில்லை.

இந்த விடுவிக்கப்பட்ட காணிகளில் ஒரு சிலர் அத்துமீறியிருப்பதாக மாத்திரம் நீதிமன்றில் வழக்கு வைக்கப்பட்டுள்ளது. ஏனையவர்களுக்கு வழக்கு வைக்கப்படவில்லை. ஏனையவர்கள் அத்துமீறிப்பிடிக்கவில்லையா? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஆகவே விடுவிக்கப்படும் அனைத்து காணிகளும் மாகாண காணி ஆணையாளர் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என தெரிவித்த அவர் குறித்த காணிகளை வழங்கம் அதிகாரம் வேறு யாருக்கும் கிடையாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

வீட்டுத் தோட்டம், சேதனச் செய்கையாளர் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

2017 ஆம் ஆண்டிற்கான சிறந்த வீட்டுத் தோட்டம் மற்றும் சேதனச் செய்கையாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை அருகிலுள்ள விவசாயப் போதனாசிரியர்களின் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பப் படிவங்களை பூரணப்படுத்தி ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் விவசாயப் போதனாசிரியர் அலுவலகங்களில் ஒப்படைக்கலாம் அல்லது தபால் மூலமாக அனுப்பி வைக்க விரும்புவோர் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகம், விவசாயத் திணைக்களம், முல்லைத்தீவு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும் என முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ. அற்புதச்சந்திரன் அறிவித்துள்ளார். (2)

மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுப்பு

கிளிநொச்சி வன்னேரிக்குளத்தின் அணைக்கட்டு மற்றும் கல்மடுக்குளத்தின் நீர்ப்பாசன வாய்க்கால் ஆகியவற்றின் அபிவிருத்தி வேலைகள் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி வன்னேரிக்குளத்தின் அணைக்கட்டு திருத்தவேலைகள் மூன்று மில்லியன் ரூபா செலவிலும் கல்மடுக்குளத்தின் வாய்க்கால் திருத்தவேலைகள் எட்டு மில்லியன் ரூபா செலவிலும் கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக்குளங்களில் உள்ளடங்கிய மேற்படி குளங்களில் பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டிய நிலையில் குறித்த வேலைத்திட்டங்கள் வடக்கு மாகாண சபையின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியொதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-315)

13 வருடக் கட்டாயக் கல்வி செயற்றிட்டம்

கிளிநொச்சி மாவட்ட பாடசாலையில் 2016 ஆம் ஆண்டு க.பொ.த. (சா/த) பரீட்சையில் முதலாம் தடவை தோற்றி க.பொ.த. உயர் தரத்தில் 5 பாடத்துறைக்கும் தகுதி பெறாத மாணவர்களை 13 வருட கட்டாயக் கல்விச் செயற்றிட்டத்தில் உள்வாங்குவதற்காக விண்ணப்பப்படிவத்தினை பாடசாலை அலுவலகத்தில் பாடசாலை நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என கிளி/ கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அதிபர் மு.இரவீந்திரன் அறிவித்துள்ளார். இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி 18.09.2017 என அவர் தெரிவித்துள்ளார். (2)

கணித விநாடிவினாப் போட்டியில் கிளிநொச்சி அணி சம்பியனானது

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட கனிஷ்ட பிரிவுக்கான மாகாண மட்ட கணித விநாடி வினாப் போட்டியில் கிளிநொச்சி வலய அணி முதலாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளது.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்ற மேற்படி போட்டியில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பன்னிரெண்டு கல்வி வலய அணிகளும் பங்கு கொண்டன. இப்போட்டியில் இறுதிப் போட்டிக்குத் தெரிவான யாழ்ப்பாண வலய அணியை வீழ்த்தி கிளிநொச்சி வலய அணி சம்பியனானது.

அத்துடன் தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள வடக்கு மாகாண அணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த தரம்- 6 மாணவன் செல்வன் தெ.திருக்குமரன் தெரிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இம்மாணவன் அண்மையில் நடைபெற்ற தேசிய மட்ட கணித ஒலிம்பியாட் போட்டியில் தெரிவு செய்யப்பட்டு சிங்கப்பூரில் நடைபெறவுள்ள சர்வதேச மட்ட கணித ஒலிம்பியாட் போட்டியில் பங்குபற்றவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (2-312-315)

மீள்குடியேறியுள்ள குடும்பங்களுக்கு வழங்க 14 ஆயிரத்து 600 வீடுகள் தேவையாகவுள்ளன

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேறியுள்ள குடும்பங்களுக்கு 14 ஆயிரத்து 600 இற்கும் மேற்பட்ட வீடுகள் தேவையாகவுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வையடுத்து மீள்குடியேறிய மக்களுக்கான பல்வேறு உதவித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் வீடமைப்பு தொடர்பில் கருத்துத் தெரிவித்த கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் வீடமைப்பை பொறுத்தவரையில் ஒவ்வொரு வருடமும் இம் மாவட்டத்தில் வீடுகள் அமைக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் கூட இன்னமும் 14 ஆயிரத்து 600 வரையான வீடுகள் தேவையாகவுள்ளது.

எமது தேவைகள் என்பது அதிகமாக இருக்கின்ற நிலையில் அதனை நிறைவேற்றுகின்ற விகிதாசாரம் என்பது மிகக் குறைவாகவே உள்ளது. இதனை துரிதப்படுத்த வேண்டியுள்ளது.

இவ்வாறு 14 ஆயிரத்து 600 வரையான வீடுகள் உடனடித் தேவையுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

புதியவகை மலேரியா நுளம்புக் காவியை தடுப்பதற்கு சுகாதார அமைச்சருடன் மன்னாரில் கலந்துரையாடல்

(மன்னார்)

மன்னாரில் அண்மையில் மலேரியா நோயை பரப்பும் "அனாஅக் பிலிஸ் ஸ்டீபென்சி" என்ற நுளம்பின் புதிய வகை காவியின் தாக்கத்தை கட்டுப்படுத்த அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன் கேட்டுக் கொண்டுள்ளார்.

மன்னார் தீவு பகுதியில் குறித்த நுளம்பின் தாக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் பத்தாம் நாள் வேலைத் திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

மன்னார் தீவுப் பகுதியில் அண்மையில் மலேரியா நோயை பரப்பும் "அனாஅக் பிலிஸ் ஸ்டீபென்சி" என்ற நுளம்பின் புதிய வகை காவி அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த நுளம்பின் தாக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் அனைத்து தரப்பினரும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

நோயை பரப்பும் "அனாஅக் பிலிஸ் ஸ்டீபென்சி" என்ற நுளம்பின் புதிய வகை காவியால் எதிர்காலத்தில் மலேரியா நோயின் தாக்கம் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன.

ஆரம்பத்திலேயே குறித்த நுளம்பு இனத்தின் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசர தேவை உள்ளது என்றும் வடக்கு சுகாதார அமைச்சர் குணசீலன் தெரிவித்துள்ளார்.

மன்னார் தீவு பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ளமையினால் மன்னார் தீவுப்பகுதியில் உள்ள கிராமங்களை 7 பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு பகுதிகளுக்கும் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, இவர்களுக்கு கீழ் உப குழுக்கள் நியமிக்கப்பட்டு குறித்த வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன்போது குறித்த பிரதேசங்களில் உள்ள பயன்படுத்தப்பட்ட மற்றும் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்ற கிணறுகள் மற்றும் நீர்த்தொட்டிகள் போன்றவற்றில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை, குறித்த அவசர கலந்துரையாடலின் போது, தேசிய மலேரியா தடை இயக்கத்தின் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத், மன்னார் உதவி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கில்றோய் பீரிஸ், மலேரியா நோய் தடுப்பு பிரிவின் மன்னார் மாவட்ட பிராந்திய வைத்திய அதிகாரி டாக்டர் கே.அரவிந்தன், பொது சுகாதார வைத்திய அதிகாரிகள், மாவட்டத்தில் கடமையாற்றுகின்ற பொது சுகாதார பரிசோதகர்கள் உட்பட மலேரியா நோய் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டுள்ளனர். (2)

நிலங்களை போராடி பெற்றதனால் அடிப்படை வசதிகளின்றி வாழ்கின்றோம்

பிலவுக்குடியிருப்பு மக்கள் கவலை

(கண்டாவளை)

நிலங்களை போராடி பெற்றதனால் எங்களுக்கான அடிப்படை வசதிகள் எவையும் இதுவரை செய்து தரப்படவில்லை என முல்லைத்தீவு கேப்பாபிலவு பிலவுக்குடியிருப்பு மக்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு கேப்பாபிலவு கிராம அலுவலர் பிரிவின் கீழ் உள்ள பிலவுக்குடியிருப்பு பகுதியில் விமானப் படையினர் வசமிருந்த தமது காணிகளை கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதி வரையான ஒரு மாத காலம் விமானப் படையினர் முகாம் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதையடுத்து மார்ச் மாதம் 28ஆம் திகதி 85 குடும்பங்களுக்கு சொந்தமான 42.5 ஏக்கர்காணிகள் விடுவிக்கப்பட்டு மக்கள் மீள் குடியேற அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு மீள்குடியேறிய குடும்பங்கள் ஆறுமாதங்கள் கடந்த நிலையிலும் எந்த விதமான அடிப்படை வசதிகளும் இல்லாத நிலையில் தாங்களாக அமைத்துக் கொண்ட தற்காலிக கொட்டகைகளிலே வாழ்ந்து வருகின்றனர்.

மீள் குடியேறிய போது அங்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர் உள்ளிட்ட அரசியல் வாதிகள் அடிப் படை வசதிகளை செய்து தருவதாக உறுதியளித்தனர். ஆனாலும் ஆறு மாதங்கள் கடந்த போதும், தாங்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித் துள்ளனர்.

குறிப்பாக இப்பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லக்கூடிய போக்குவரத்து வசதிகள் கூட இல்லாத நிலை காணப்படுகின்றது. என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனை கவனத்தில் எடுத்து தமக்கான அடிப்படை வசதிகளை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் மாவட்ட அரச அதிபர் கருத்துத் தெரிவிக்கும் போது, இவ்வாறு குடியேறியுள்ள குடும்பங்களுக்கான வசதிகள் ஏற்கனவே கேப்பாபிலவு மாதிரிக்கிராமத்தில் வழங்கப்பட்டு விட்டன.

நிரந்தர வீடுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். (2-315)

வவுனியா நகர சபையின் செயற்பாட்டை எதிர்த்து வியாபாரி தீக்குளிக்க முயற்சி

பொலிஸார் நிலைமையைக் கட்டுப்படுத்தினர்

(குரூமன்காடு)

வவுனியா நகரசபையின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத்தெரிவித்து வவுனியா சந்தைச்சுற்றுவட்ட வீதியில் வியாபாரம் செய்யும் வியாபாரி ஒருவர் தீக்குளிக்க முயற்சி செய்துள்ளார். இதனை பொலிஸார் தலையிட்டு கட்டுப்படுத்தியுள்ளனர்.

நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவம் குறித்து தெரிய வருவதாவது.

வவுனியா சந்தைச் சுற்றுவட்ட வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் சில அத்துமீறி பாதையில் விற்பனைப் பொருட்களை விற்பனை செய்ததையடுத்து வவுனியா நகரசபையினர் அத்துமீறி வீதியில் வைத்திருந்த பொருட்களை அகற்றுமாறு வர்த்தர்களுக்கு வேண்டுகோள் விடுத்தனர்.

இதன் போது குறித்த பாதையில் மதுபானசாலைக்கு அருகே அமைந்துள்ள மரக்கறி வியாபாரம் செய்யும் வர்த்தகர் ஒருவர் தனது பொருட்களை அகற்ற முடியாது என மறுப்புத் தெரிவித்ததுடன், அத்துமீறி நகரசபையினர் அகற்றினால் நான் தற்கொலை செய்வேன் என தெரிவித்து தனது உடல் முழுவதும் மண் மெண்ணெய் ஊற்றி தீக்குளிக்க முயன்றார்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா பொலிஸார் குறித்த நபரை கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச்சென்றனர்.

இதன் பின்னர் சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா நகரசபை செயலாளர் இ.நயனரன் குறித்த வர்த்தக நிலையமும், அப்பகுதியில் உள்ள நகையகம் ஒன்றும் அத்துமீறி அமைக்கப்பட்டுள்ளது.

எனவே இரு வர்த்தக நிலையம் உரிமையாளர்களுக்கும் உத்தியோகபூர்வமாக கடிதம் அனுப்பி குறித்த கட்டடத்தினை அகற்றி பாதையை திறப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதாக தெரிவித்தார். (2-250)

கௌதாரிமுனை, இரணைமாதா நகரில்

2.5 மில்லியன் ரூபா செலவில் இரண்டு வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி நாச்சிக்குடா கடற்றொழில் பரிசோதகர் பிரிவில் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் ஊடாக பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி பூநகரி நாச்சிக்குடா ஆகிய பகுதிகளில் மேற்படி தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் மூலம் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் கௌதாரி முனை மற்றும் இரணைமாதா நகர் ஆகிய பகுதிகளில் தலா 2.5 மில்லியன் ரூபா நிதியில் இரண்டு இளைப்பாறு மண்டபங்கள், கருவாடு பதனிடும் மேடைகள் என்பன அமைக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், 30 பயனாளிகளுக்கு 0.5 மில்லியன் ரூபா செலவில் திசைகாட்டிகள் வழங்குதல், 0.1 மில்லியன் ரூபா செலவில் கருவாடு பதனிடுதல் தொடர்பான பயிற்சிகள் வழங்குதல் மற்றும் ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் நல்லூர் நாகதேவன்துறை ஆகிய பகுதிகளில் 40 கடற்றொழிலாளர்களுக்கு வலைகள் வழங்குதல் போன்ற ஐந்து வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

தவணைப்பணத்தை செலுத்த முடியாத குடும்பங்கள் தற்கொலைக்கு முயற்சி

பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி கல்லாறு பகுதிகளில் நுண்கடன் நிதி நிறுவனங்களிடம் அதிக வட்டிக்கு கடன்களை பெற்று அதனை மீளச்செலுத்த முடியாது தற்கொலை முயற்சிக்கு தள்ளப்படும் நிலை அதிகளவில் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள மிகவும் பின் தங்கிய பகுதிகளில் ஒன்றாகக் காணப்படும் கல்லாறு கிராமத்தில் வாழ்ந்து வரும் குடும்பங்கள் எதுவித தொழில் வாய்ப்புக்களும் இன்றி வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் கிராமங்களைத் தேடிச்சென்று கடன்களை வழங்கும் நுண்கடன் நிதி நிறுவனங்களிடமிருந்து கடன்களைப் பெற்றுக் கொண்டு அதற்கான தவணைப் பணங்களை செலுத்த முடியாது பெரும் துன்பங்களை அனுபவிப்பதாகவும் கடன்களை செலுத்த முடியாது தற்கொலை முயற்சிகளில் ஈடுபடும் சம்பவங்கள் அதிகளவில் காணப்படுகின்றன.

அண்மைய நாட்களாக பலர் இவ்வாறான முடிவுகளை எடுத்துள்ளதாகவும் இதனை விட குடும்பப் பிணக்குகள் போன்ற சம்பவங்களும் அதிகளவில் காணப்படுவதாகவும் இப்பகுதி பொது அமைப்புக்கள் மற்றும் பொது மக்கள் தெரிவித்துள்ளனர். (2-315)

சமூகசேவை திணைக்களத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிக்கொடுப்பனவுகள்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் 212 பயனாளிகளுக்கு புற்றுநோய்க்கான கொடுப்பனவுகளும் 174 பயனாளிகளுக்கு சிறுநீரக நோய்க்கான கொடுப்பனவுகளும் வழங்கப்படுவதாக மாவட்ட சமூக சேவை திணைக்களதகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தினாலும் ஏனைய வழிகளிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணத் திட்டங்கள் மாவட்ட சமூக சேவை திணைக்களத்தினூடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட 212 பேருக்கும் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட 174 பேருக்கும் முள்ளந்தண்டு பாதிக்கப்பட்ட 192 பேருக்கும் காசநோயினால் பாதிக்கப்பட்ட 25 பேருக்கும் தலசீமியா நோயினால் பாதிக்கப்பட்ட 6 பேருக்கும் தொழுநோயினால் பாதிக்கப்பட்ட 2 பேருக்கும் நோய்க்கான உதவிக்கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருவதாக மாவட்ட செயலகப் புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

வரட்சி நிவாரணம் வழங்கலில் பாரபட்சம்

கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியில் வரட்சி நிவாரணம் வழங்கலில் பாரபட்சம் காட்டப்படுவதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சிமாவட்டத்தில் வரட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகளை வழங்கும் நோக்கில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் ஐந்து நாட்கள் இலகுவேலை மேற்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் வேலைகளில் ஈடுபட்டதுடன் அவர்களுக்கான நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந் நிலையில் நிவாரணத்திற்கான வேலைகளில் ஈடுபட்ட பல குடும்பங்கள் ஐந்து நாட்கள் வேலைகளைச் செய்த போதும் அவர்களுக்கான நிவாரண உதவிகள் வழங்கப்படவில்லை. தமக்கான நிவாரண உதவியைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

எம்மை நாமே ஆளும் சமஷ்டி தீர்வே வேண்டும்

தமிழ் மக்கள் பேரவையின் விசேட கூட்டத்தில் இணைத்தலைவர், முதலமைச்சர் விக்னேஸ்வரன் உறுதி

(நேற்றைய தொடர்ச்சி...)

மேலும் தமிழ் மக்கள் தமது கோரிக்கைகளை அடைவதற்காக இதுவரை விலைமதிப்பற்ற தியாகங்களைச் செய்ததுடன் பல்வேறு இழப்புக்களையும் சந்தித்து வந்துள்ளனர். இத்தகைய நிலையில் தமிழ் மக்களது நீண்ட நாளைய அபிலாஷைகளையும் கோரிக்கைகளையும் இடை நடுவே கைவிடுவதற்கு எந்தவொரு தனிப்பட்ட தலைவருக்கோ அரசியல் கட்சிக்கோ அல்லது அமைப்புக்கோ உரித்தில்லையென நான் கருதுகின்றேன். 'சிலர் தேர்தல் காலம் வருகின்றது என்றோ என்னவோ பேரிகை கொட்டிப் பெரிய பேச்சுக்களில் ஈடுபட எத்தனித்துள்ளனர். நேர்மையுடன் மனச்சாட்சிப்படி அவர்கள் இவ்வாறான பயிற்சிகளில் ஈடுபடுகின்றார்கள் என்றால் நாம் அதை வரவேற்கின்றோம். மூன்றாவது முஸ்லிம்கள் பற்றியது. அண்மையில் மட்டக்களப்பில் "எழுக தமிழ்" கூட்டம் முடிவடைந்த பின்னர் முஸ்லிம் பள்ளிவாசல்கள் பலவற்றின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களுடன் கருத்துப் பரிமாற்றம் நடந்தது. முஸ்லிம்கள் வடக்கு, கிழக்கு இணைப்புக்கு எதிர் என்று சிங்கள மக்களும் தமிழ் மக்களில் சிலரும் கூறிக்கொண்டு திரிந்தாலும் உண்மையான பாரம்பரிய தமிழ் பேசும் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் அவ்வாறு சிந்திக்கவில்லை என்பதை அந்தக் கூட்டத்தின் போது தெரிந்து கொண்டோம். முஸ்லிம் மக்களுக்கு ஒரு போதுமான அலகைக் கொடுத்தால் வடகிழக்கு இணைப்புக்குத் தாங்கள் ஆட்சேபனை இல்லை என்ற விதத்திலேயே அவர்களின் கருத்துப் பரிமாற்றங்கள் இருந்தன. இதனை நாம் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

அடுத்து பூகோள அரசியல் எம்மைந்தாக்குவது பற்றி ஆராய இருக்கின்றார்கள். இது மிகமுனுக்கமாகச் சிந்திக்க வேண்டிய ஒரு விடயம். மகிந்த ராஜபக்ஷவை வெளியேற்றியதில் வெளிநாட்டுச் சக்திகளின் பங்கேற்பு வெகுவாக இருந்தது. நாம் எமது உள்ளூர் அரசியல் சிந்தனைகளில் சஞ்சரித்துக் கொண்டிருக்கப் பிற நாடுகள் தமது நாட்டு நலன் விரும்பி நகர்த்தல்களை மேற்கொண்டு வருகின்றார்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இறுதியாக அரசியலமைப்பு உருவாக்க முயற்சிகளின் போக்குப் பற்றி பேச இருக்கின்றார்கள். பேசுவது எதுவாக இருந்தாலும் நடைமுறையில் எதனை இதுவரை சாதித்து விட்டோம் என்பது தான் முக்கியம். ஜெனிவாவில் கொடுத்த வாக்குறுதிகளில் தமிழர் சார்பாக எவற்றையாவது முழுமையாக நிறைவேற்றியுள்ளார்களா? என்ற கேள்விக்கு அரசாங்கம் பதில் தரவேண்டும். மேலும் இரண்டு வருடங்கள் தேவை என்று கோரி அதனையும் பெற்றுவிட்டார்கள். அப்படியிருந்தும் முன்னேற்றம் காணப்படுவதாகக் கூறமுடியாத நிலையே இன்றும் நிலவுகின்றது.

பயங்கரவாதச் தடைச்சட்டம் வாபஸ் பெறப்படவில்லை. இன்னமும் எமது இளைஞர்கள் வழக்குப் பதியப்படாமல் சிறைக்காவலில் இருக்கின்றார்கள். குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் ஒன்றையே வைத்து குற்றவாளிகள் ஆக்கப்பட்டவர்களும் அரசியல் ரீதியாகக் குற்றவாளிகள் ஆக்கப்பட்டு நீண்டகால சிறைவாசத்தை அனுபவித்துக் கொண்டிருப்பவர்களும் பொது மன்னிப்பில் வெளிவிடப்படவில்லை. மக்களின் காணிகள் விடுவிக்கப்படவில்லை. இராணுவம் குறைக்கப்படவில்லை. போர்க்குற்றங்கள் விசாரிக்கப்படவில்லை. காணாமல் போனோர் பற்றி தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இப்படி இல்லை இல்லை என்று அரசாங்கம் செய்யாதவற்றைப் பட்டியல் போட்டுக் கூறலாம். ஆனால் மிக முக்கியமானதொன்றுண்டு. சர்வதேச உள்ளீட்டுடன் போர்க்குற்ற விசாரணை நடைபெற வேண்டும் என்பதே அது.

எமது இராணுவ வீரர்களை விட்டுக் கொடுக்க மாட்டோம். அவர்களுக்கெதிராக விசாரணை செய்ய விடமாட்டோம் என்று அமைச்சர்கள் மட்டத்தில் ஜனாதிபதி மட்டத்தில் அடித்துக் கூறும் போது தமது இராணுவ வீரர்கள் யுத்தக் குற்றங்களில் கட்டாயமாக ஈடுபட்டிருந்தார்கள் என்பதை மறைமுகமாக ஏற்றுக்கொள்கின்றார்கள் தெற்கத்தைய அரசியல் தலைவர்கள். அது எமக்கு சார்பாக அமைகின்றது. தற்போது அமைச்சர் சரத் பொன்சேகா ஜெகத் ஜெயசூரிய என்ற முன்னைய இராணுவத் தளபதி யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டார் என்பது பற்றி சாட்சியம் அளிக்கப்போவதாக பகிரங்கமாகக் கூறியுள்ளார். ஆகவே குற்றவாளிகள் தாமாகவே அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றார்கள். என்வேதான் சர்வதேச நீதிபதிகளுடன் யுத்தக்குற்ற விசாரணையானது விரைவில் நடைபெற வேண்டும் என்று கோருகின்றோம். ஜனாதிபதி தமது போர்வீரர்களை எப்படியும் காப்பாற்றுவோம் என்று கூறும் போது உள்ளூர் நீதிபதிகள் உரியவாறு நீதியைப் பெற்றுத் தருவார்கள் என்று நாங்கள் எப்படி எதிர்பார்க்க முடியும்?

அதேபோல் காணாமல் போனோரின் விடயமும் இதனோடு சம்பந்தப்பட்டதே. குற்றம் இழைத்தவர்களை தப்பிக்க விடக்கூடாது. இன்றிருக்கும் நிலையில் காணாமல் போனோர் பற்றி இந்த அரசாங்கம் எந்த ஒரு திடமான நடவடிக்கையையும் எடுக்காது என்பதென்றெனத் தெரிகின்றது. எமது மக்களின் தொடர் ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதங்கள் போன்றவை எந்தவிதப் பலனையும் அளிக்கவில்லை. ஆகவே சர்வதேச உள்ளீடல்களுடனான விசாரணை ஒன்றே எமக்கு நீதியைப் பெற்றுத் தரும். உண்மையை வெளிக்கொண்டுவரும். முன்னைய தளபதி ஜெகத் ஜெயசூரிய பற்றி ஜெனரல் சரத் பொன்சேகா கூறியிருப்பது யுத்தக்குற்ற விசாரணைகள் உரியவாறு நடைபெறுமோ என்ற நப்பாசையை எழுப்பினாலும் தற்போதைய அரசியல்வாதி சரத் பொன்சேகாவின் கருத்துக்கள் அரசியல் பால்பட்ட கருத்துக்கள் என்பதை நாம் மறக்கக் கூடாது. அத்துடன் அவர் சொந்த வாழ்க்கையில் நடைபெற்ற கசப்பான அனுபவங்களின் பிரதிபலிப்பு என்பதையும் நாங்கள் மறந்துவிடக் கூடாது. உண்மையான சர்வதேச உள்ளீடல்களுடனான விசாரணை விரைவாக நடைபெற வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசாங்கத்திடம் வலிந்து கேட்டுக் கொள்கின்றோம். ஜெனிவாவில் அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளை நாம் அவர்களுக்கு நினைவூட்டுகின்றோம்.

அரசியல் யாப்பைப் பொறுத்த வரையில் எம்மிடமிருந்து பறிக்கப்பட்ட அனைத்து அதிகாரங்களும் எமக்குத் திருப்பித் தரப்பட வேண்டும். இதைத் தான் உச்ச நீதிமன்றப் பேச்சொன்றில் பல வருடங்களுக்கு முன்னர் நான் கூறியிருந்தேன். மாணவர்களாக நாங்கள் இருந்த போது எமது சிரேஷ்ட மாணவர்கள் மாபிள்கள் 25ஐ எம்மிடம் இருந்து பறித்துவிட்டு "இந்தா ஐந்து மாபிள்கள்", "இந்தா எட்டு மாபிள்கள்" என்று பேரம் பேசுவார்கள். அதே போன்று எமது உரிமைகளைப் பறித்து விட்டு இது தருவோம் அது தருவோம் என்று பேரம் பேசுகின்றது அரசாங்கம் என்று கூறியிருந்தேன். எல்லா மாபிள்களும் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும் என்றேன். தமிழ் மக்களின் சகல உரித்துக்களும் அதிகாரங்களும் எமக்குத் திருப்பித்தரப்பட வேண்டும். 98 வருடங்களுக்கு முன்னர் 1919 ஆம் ஆண்டில் பிரதேச பிரதிநிதித்துவம் எம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்டதால்தான் சிங்கள மக்களின் பெரும்பான்மைக் குணவியல்பு எம்மை அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் சிக்கவைத்தது. அதுவரையில் இன ரீதியான பிரதிநிதித்துவமே வெள்ளையர் காலத்தில் இருந்து வந்தது. அதாவது ஒவ்வொரு இனத்திற்கும் ஓரிருவர் பிரதிநிதித்துவம் அளித்தார்கள். பிரதேச பிரதிநிதித்துவம் ஏற்றுக்கொள்ளப்பட்ட போது கூடிய பிரதேசங்கள் சிங்கள மக்கள் சார்ந்து இருந்ததால் அவர்களின் தொகை பெரும்பான்மையாகி அக் காலகட்டத்தில் இருந்து சிங்களப் பெரும்பான்மை ஆதிக்கம் எம்மைச் சூழ்ந்து கொண்டது.

பெரும்பான்மைத் தீர்மானம் என்பது ஒரேவிதமான ஒரே மக்களின் நடுவே ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய தொன்று. வெவ்வேறு விதமான மக்களிடையே, பல்லின, பன்மொழி, பல்சமய மக்களிடையே, பெரும்பான்மைத் தீர்மானம் என்பது சிறுபான்மையினரைக் கட்டுப்படுத்தும் கைவிலங்காய் மாறிவிட வாய்ப்பிருக்கின்றது. இதை அறிந்தே ஆங்கிலேயர்கள் முதல் அரசியல் யாப்பில் பிரிவு 29ஐ உள்ளடக்கி சிறுபான்மையினருக்குத் தகாத எந்த ஒரு சட்டத்தையும் பெரும்பான்மையினர் கொண்டுவந்து அவர்களுக்கு இடர் விளைவிக்கக் கூடாது என்று கூறினார்கள். ஆனால் 1956 ஆம் ஆண்டில் அந்த சட்டத்திற்குப் புறம்பான விதத்தில் "சிங்களம் மட்டும்" சட்டம் கொண்டுவரப்பட்டது. அது பிரிவு 29ன் ஏற்பாடுகளுக்கு முரணாக அமைந்தது. அந்த முரண்பாட்டைச் சுட்டிக்காட்டி "சிங்களம் மட்டும்" சட்டம் சட்ட வலுவற்றது என்று கோடீஸ்வரன் வழக்கில் டி க்ரெட்சர் என்ற நீதியரசர் தீர்ப்பு வழங்கினார். அதனை மேன்முறையீடு செய்து பின்னர் கோமறைக்கழகம் என்ற ப்ரிவி கௌன்சிலுக்கு மேன்முறையீடு செய்து அரசாங்கம் காலத்தைத் தாக்காட்டிக் கொண்டிருந்த போதுதான் 1972 ஆம் ஆண்டின் குடியரசு அரசியல் யாப்பு கொண்டுவரப்பட்டது. அதிலே தான் பெரும்பான்மையர் பலம் பதிக்கப்பட்டது. அதற்கு உதவியவர் மாணவர்களாக நாங்கள் இருந்த போது எமது மதிப்பிற்குரியவராக விளங்கிய கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா. அந்த அரசியல் யாப்புடன் அவர் மீதிருந்த எமது மதிப்பு யாவும் சரிந்துவிட்டது, கரைந்துவிட்டது. ஒரு மொழி என்றால் இரு நாடுகள் இரு மொழி என்றால் ஒரு நாடு என்று 1956இல் கூறிய தீர்க்கதரிசி கலாநிதி கொல்வின்ஆர்டிசில்வா. அரசியல் காரணங்களுக்காகப் பெரும்பான்மையினரின் சார்பு நபராக மாறியமை எம்மை எல்லாம் வியப்பில் ஆழ்த்தியது.

பதவி மோகமே இதைச் செய்தது என்று கூறலாம். அதே பதவி மோகம் எமது தமிழ்த் தலைவர்களையும் பீடிக்கக்கூடாது என்பதே எமது பிரார்த்தனை. அதைத் தந்து இதைத் தந்து எம்மை வாங்கிப்போடுவது தெற்கத்தையருக்குக் கைவந்த கலை. தெற்கில் எனது சிங்கள நண்பருக்கு ஏதாவது ஒரு பிரச்சினை எழும். ஓரிரு வாரங்களில் அது சரியாகிவிடும். என்ன செய்தாய் என்று எனது சிங்கள நண்பரிடம் கேட்டால் shape பண்ணி விட்டேன் என்று பதில் வரும். shape என்ற சொல்லில் தான் அவர்கள் பலம் அடங்கியிருக்கின்றது. சாம, பேத, தான, தண்டம் எல்லாவற்றையும் பாவித்து shape பண்ணி விடுவார்கள். நான் ஒருமுறை அப்போதைய பிரதம நீதியரசருடன் வெளிநாட்டுப் பணிக்கூடம் ஒன்றிற்குச் சென்றுவந்தேன். வந்து இருவாரங்களில் அமெரிக்கா செல்ல வாய்ப்பொன்று நீதியரசருக்குக் கிடைத்தது.

(11 ஆம் பக்கம் பார்க்க...)

சர்வதேச உள்ளீடுடன் போர்க்குற்ற விசாரணை நடைபெற வேண்டும்



(10 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அந்தக் காலகட்டத்தில் பிரதம நீதியரசரின் சில நடவடிக்கைகளுக்கு எதிராக நான கருத்துக்கள் தெரிவித்திருந்தேன். என்னை shape பண்ணுவதற்கு அவர், "நீங்கள் அமெரிக்கா செல்லுங்கள்" என் றார்.

"இல்லை பாகிஸ்தான் போய் வந்து விட்டேன் எனக்கடுத்த நீதியரசரே இந்தப் பயணத்தில் செல்ல வேண்டும்" என் றேன். "நான்தானே தேர்ந்தெடுக்கும் அதிகாரம் கொண்டவன். நீங்கள் போகலாம்" என்றார்.

"வேண்டாம் முறைப்படியே அடுத்தவருக்கு அந்தச் சந்தர்ப்பத்தை வழங்குங்கள்" என்று கூறிவிட்டு அவ் விடத்தில் இருந்து அகன்று விட்டேன். இப்படித்தான் shape என்பது நடக்கின்றது. நெத்தலி போட்டுச் சுறா பிடிப்பதில் வல்லவர்கள் அவர்கள். எம்ம வர் இதைப் புரிந்து கொள்ள வேண்டும். தந்து தந்து கவிழ்க்கக்கூடியவர்கள் அங்கு ள்ள அரசியல் வாதிகள். நாங்கள் எமது கோரிக்கைகளில் மிகவும் விழிப்பாக, மிகவும் கெட்டியாக இருக்காவிட்டால் எம்மைத் தம்வசம் மாற்றி விடுவார்கள். ஒரு உதாரணம் கூறுகின்றேன். பேராசிரியர் C.சுந்தரலிங்கம் மிகப்பெரிய அறிஞர், அறிவாளி, அரசியல்வாதி. பட்டங்கள் பல பெற்றவர். ஆனால் டி.எஸ்.சேனாநாயக அக்கால எஸ்.எஸ்.சி.க்கூட பாஸ் பண்ணி னாரோ நான் அறியேன். "நீங்கள் தான் கெட்டிக்காரர். உங்களை விட யாருமில்லை" என்று டி.எஸ்.சேனாநாயக கூறியதும் "சிங்களவர் மட்டும்" அமைச்சரவை ஒன்றினை எவ்வாறு அமைப்பது என்று பேராசிரியர் சுந்தரலிங்கம் டி.எஸ்.சேனாநாயகவுக்கு அடி எடுத்துக் கொடுத்தார். எமது நிறைகளையும் குறைகளையும் உன்னிப்பாகக் கவனித்து எம்மை வீழ்த்துவதில் எமது தென்னவர், தமிழ் நாட்டில் கூறுவது போல் "பலே கில்லாடிகள்".

இதனை இங்கு ஏன் கூறுகின்றேன் என்றால் அறிவு வேறு. சாமர்த்தியம் வேறு என்பதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். எம்மிடம் அறிவு உள்ளது. ஆற்றல் உள்ளது. திறமை உள்ளது. ஆனால் எந்த அளவுக்கு சாமர்த்தியம் உள்ளது என்பதை நீங்களே பரிசீலித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும். நான் இவ்வாறு கூறுவதால் நான் என்னிடம் சாமர்த்தியம் இருக்கின்றது என்று கூறவரவில்லை. அவ்வாறான அரசியல் சாமர்த்தியம் என்னிடம் இல்லை என்பதை வெளிப்படையாகவே நான் ஏற்றுக் கொள்வேன். ஆனால் மற்றவர்களின் சாமர்த்தியத்தை அடையாளம் காணும் அருகதை எனக்கு ண்டு என்பதை நான் ஏற்றுத்தான் ஆக வேண்டும். சிங்கள மக்கள் தலைவர்களிடம் சாமர்த்தியம் உள்ளது. அதேபோல் காலஞ்சென்ற சௌமியமூர்த்தி தொண்டமானிடம் சாமர்த்தியம் இருந்தது. ஆகவே அதை உணர்ந்து நாங்கள் எங்கள் காய்களை நகர்த்த வேண்டும். அதற்கு எமது அடிப்படைகளில் விடாப்பிடித்தன்மையும் எம்முள் ஒற்றுமையும் அத்தியாவசியம். தமிழ் மக்கள் பேரவை உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் ஆகியோர் எமது அடிப்படைகளை அறிந்து ஒற்றுமையுடன் எமது இயக்கத் தைக் கொண்டு செல்ல முன்வரவேண்டும்.

எமக்கு ஆதரவாக அண்மையில் தரப்பட்ட சமஷ்டி பற்றிய உச்ச நீதிமன்றத் தீர்ப்பு அமைகின்றது. அவர்கள் என்ன நினைப்பார்கள் என்றும் சமஷ்டி பற்றிப் பேசுவது தகாததென்றும் எம்மவர் இனிக் கூறத் தேவையில்லை. அந்தத் தீர்ப்பை முன் வைத்தே எமது காரியங்களை நாம் முன் நடத்திச் செல்ல வேண்டும். வேண்டுமெனில் அந்தத் தீர்ப்பை சிங்களத்தில் மொழிபெயர்த்து உங்கள் சிங்கள நண்பர்கள் அனைவருக்கும் அனுப்பி விடுங்கள். அடுத்து ஜெகத் ஜெயசூரிய பற்றி சரத் பொன்சேகா அண்மையில் கூறிய கூற்றும் எம்மால் கவனத்திற்கு எடுக்கப்பட்டு யுத்தக் குற்றங்கள் நடைபெற்றமைக்கு போதிய ஆதாரம் அவர் கூற்றில் பொதிந்திருக்கின்றது என்பது பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். வேண்டுமென்றால் முன்னர் நாங்கள் சரத்பொன்சேகாவுக்கு வாக்குப் போட்டதை நினைவுபடுத்தி அவர் இன்று செய்வது, அவர் சொல்வது சரியென்று எடுத்துரைக்க வேண்டும். அவர்களிடையே இருக்கும் வைர்யத்தை எமக்குச் சார்பாக நாம் பாவிக்க வேண்டும். தெற்கில் அவரின் கொடும்பாவி எரிக்கின்றார்கள் என்றால் வடக்கில் அவரின் படத்திற்கு மாலை போட வேண்டும். இவற்றை நாம் பகிரங்கமாகக் கூறுவது பாதிப்பளிக்கலாம்.

ஆனால் மக்களுக்கு அரசியல் ஞானத்தை அறிமுகப்படுத்தும் போது எவ்வாறு நாங் கள் நடந்து கொள்ள முடியும் என்பதை வெளியிடுவது நன்மையே பயக்கும் என்று நம்புகின்றேன்.

மக்களுக்கு அரசியல் அடிப்படைகளை அறிவிக்கும் இந்தக் கூட்டம் மகத்தானது. இதிலிருந்து எமது சாதாரண மக்களின் அரசியல் பங்களிப்பு ஆக்கபூர்வமாக ஆரம்பமாகின்றது. தமிழ் மக்கள் பேரவையின் நடவடிக்கைகள் வெற்றிமேல் வெற்றி பெற வேண்டும் என்று பிரார்த்தித்து "அனைத்தும் அவன் செயல்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

கருணாவிற்கு எதிரான விசாரணைகள் நிறைவு

ஜனாதிபதி செயலகத்திற்குச் சொந்தமான 9 கோடி ரூபா பெறுமதியான குண்டு துளைக்காத வாகனம் ஒன்றைத் தவறான முறையில் பாவித்தமை தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு எதிரான விசாரணைகள் நிறைவடைந்துள்ளதாக நிதி மோசடி விசாரணைப் பிரிவு நேற்று நீதிமன்றுக்கு தெரிவித்துள்ளது.

விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு எதிரான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. விசாரணைகள் தொடர்பில் சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெறப்படவிருப்பதாக நிதி மோசடி விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை சந்தேக நபர் தொடர்பில் இதுவரை சட்டமா அதிபர் மூலம் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்படவில்லை என பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

குறித்த வழக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனக் கொழும்பு பிரதான நீதவான் லால் ரணசிங்க நேற்று உத்தரவிட்டுள்ளார். (இ-7)

பொலிஸ் அதிரடிப்படை அதிகாரிகளுக்கு பதவியுயர்வு

(கொழும்பு)

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து சேவையில் ஈடுபடும் அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

தகுதியுள்ள 117 அதிகாரிகளுக்குக் குறித்த பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 93 சார்ஜன்ட்கள் பிரதி பொலிஸ் பரிசோதகர்களாகவும், 84 பிரதி பொலிஸ் பரிசோதகர்கள் பொலிஸ் பரிசோதகர்களாகவும் பதவி உயர்வு பெற்றுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

குறித்த பதவி உயர்வுகள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர மூலம் வழங்கப்பட்டுள்ளது. (இ-7)

தீய சக்திகளின் சுயநலத்தால் தமிழினம் பரிதாப நிலையில்

சின்மயா மிஷன் சுவாமி கவலை

அரசியல் அறிவு இல்லாத சாதாரண மக்களை சில தீய சக்திகள் தமது சுயநலத்துக்காகப் பயன்படுத்துகின்றனர் என தெரிவித்த யாழ். சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமிகள், இதுவே எமது இனத்தின் தற்போதைய பரிதாப நிலை எனவும் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில், உத்தேச அரசியலமைப்பு முயற்சி குறித்த கருத்துப் பகிர்வு மற்றும் பிரகடன வெளியீடு நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில் ,

எது சரி எது பிழை என்று சிந்திக்கக் கூடிய ஆற்றலை இறைவன் அனைவருக்கும் கொடுத்திருக்கிறார். பகுத்தறிவு என்பது பகுத்துப் பார்க்கக் கூடிய அறிவு, ஒவ்வொரு துறை சார்ந்தும் ஆழமான அறிவும் நுட்பமும் இருக்கும் பொழுதுதான் எந்தத் துறை சார்ந்தும் எமது சிந்தனைகளை முன்னெடுக்க முடியும். அதுவே மிக முக்கியமான தேவை.

எங்களை நாங்களே வழிப்படுத்துவதற்கு அரசியல் ரீதியிலான எமது உரிமைகள், அரசியல் யாப்பில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் அனைவருக்கும் தெரிந்திருக்க வேண்டிய தேவை உள்ளது. போதிய அறிவு இல்லாத காரணத்தினால் சாதாரண மக்களை சில தீய சக்திகள் தமது சுயநலத்துக்காக பயன்படுத்துகிறார்கள். அதனுடைய ஒரு பரிதாபமான நிலைதான் நாம் அனைவரும் எதிர் கொண்டிருக்கின்ற இன்றைய சூழல் ஆகும்.

அந்த நிலையில் எது உண்மை? எது தர்மம்? எது சரியானது? என்ற அறிவும் விழிப்புணர்வும் அனைத்து தமிழ் மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும். அனைவரும் ஒன்றிணைந்து தமிழ் மக்கள் என்ற வகையில் ஓரணியில் இருந்து எமது உரிமைகள் பற்றி சிந்திப்போமேயானால் அது வெற்றியை கொடுக்கும்.

இவ்வாறான தூர நோக்குடைய இலட்சியத்தைக் கொண்ட மக்கள் இயக்கமாக தமிழ் மக்கள் பேரவை உள்ளது. அரசியல் ரீதியில் மட்டுமல்ல கலாசார பண்பாட்டு ஆன்மீக ரீதியிலும் எங்களுடைய மக்களை எவ்வாறு வழிப்படுத்த முடியும் என்ற அற்புதமான சிந்தனைகளுடன் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கி முதலமைச்சர் தலைமையில் இந்த அமைப்பை முன்னெடுத்து வருவது மக்களுக்கு நற்காரியம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

பாரதம்

நீட் தேர்வுக்கு எதிராக

அமெரிக்காவில் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்

(நியூயோர்க்)

நீட் தேர்வால் பாதிக்கப்பட்டு தற்கொலை செய்து கொண்ட மாணவி அனிதாவுக்கு நினைவேந்தல் கூட்டம் நடத்திய அமெரிக்க வாழ் தமிழர்கள், நீட் தேர்வுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தினர். 'நீட்' தேர்வால் மருத்துவ படிப்பு கனவு தகர்ந்ததால் அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த மாணவி அனிதா தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டார். இதனால் மத்திய, மாநில அரசுகளை கண்டித்து தமிழகத்தில் தொடர்ந்து பல்வேறு போராட்டங்கள் நடந்து வருகின்றன.

புலம் பெயர்ந்து அமெரிக்காவில் வசித்தாலும் இலங்கை பிரச்சினை, ஜல்லிக்கட்டு உள்ளிட்டவற்றுக்கு அங்கு வாழும் தமிழர்கள் தங்கள் ஆதரவை தெரிவித்து வந்தனர். இந்நிலையில் அனிதா தற்கொலை சம்பவம் அமெரிக்காவில் உள்ள தமிழர்களையும் அதிர்ச்சி அடைய செய்துள்ளது.

நியூஜெர்சி, மிக்சிகன், அட்லாண்டா, கலிபோர்னியா, சிகாகோ, புளோரிடா உள்ளிட்ட பல நகரங்களில் வாழும் தமிழர்கள், அனிதா மரணத்துக்கு நினைவேந்தல் கூட்டம் நடத்தினர். மேலும் அனிதா மரணத்திற்கு நீதி கேட்டு முழக்கங்கள் அடங்கிய பதாகைகளுடன் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அப்போது மத்திய பா.ஜ.க அரசுக்கும், தமிழக அரசுக்கும் எதிராக முழக்கமிட்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் போது 'நீட்' தேர்வுக்கு எதிராக ஆதரவு கையெழுத்து பெற்றனர். இதேபோல் பல்வேறு நகரங்களில் வாழும் தமிழர்களிடம் கையெழுத்து பெற்று இந்திய தூதரக அதிகாரிகளிடம் அளிக்க உள்ளதாகவும், அடுத்தகட்டமாக இந்திய தூதரகம் முன்பு போராட்டம் நடத்த இருப்பதாகவும் அமெரிக்க வாழ் தமிழர்கள் தெரிவித்தனர். (3-8)

இந்தியச் சிறைகளில் இருக்கும் மியன்மார் கைதிகள் விடுதலை

பிரதமர் மோடி அறிவிப்பு

(நய்பியிடா)

இந்தியச் சிறைகளில் இருக்கும் 40 மியன்மார் நாட்டு கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி சீனாவில் இருந்து மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக நேற்று முன்தினம் மியன்மார் நாட்டுக்கு புறப்பட்டு சென்றார். தலைநகர் நய்பியிடாவில் பிரதமர் மோடிக்கு, மியன்மார் ஜனாதிபதி ஹிடின் கியாவ் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பிரதமர் மோடி, மியன் மார் அரசு ஆலோசகர் ஆங் சான் சூகியை நேற்று சந்தித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை பலப்படுத்துவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அப்போது இரு நாட்டு உறவுகளை மேம்படுத்தும் வகையில் கூட்டறிக்கை வெளியிடப்பட்டது.

இச் சந்திப்பின்போது 11 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இந்நிலையில், இந்திய சிறைகளில் இருக்கும் மியன்மார் நாட்டை சேர்ந்த 40 கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். (3-8)

ஈரோட்டில் நேற்று நடைபெற்ற எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா நிகழ்வு

மூத்த பெண் பத்திரிகையாளர் துப்பாக்கியால் சுட்டுக்கொலை

(பெங்களூரு)

பெங்களூரில் வெளியாகும் லங்கேஷ் பத்திரிகையின் ஆசிரியரும், இலக்கியவாதியுமான கௌரி லங்கேஷ் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மர்ம நபர்களால் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

பெங்களூர் ராஜ ராஜேஸ்வரி நகரில் வசித்துவந்த கௌரி லங்கேஷ் செவ்வாய்க்கிழமை காரில் வெளியே சென்றுவிட்டு இரவு 8 மணியளவில் வீட்டுக்கு அருகே சென்று கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த 3 பேர் கைத்துப்பாக்கியால் 7 முறை சுட்டுள்ளனர். இதில் நெற்றி, மார்பு உள்ளிட்ட இடங்களில் 3 குண்டுகள் பாய்ந்ததில் நிகழ் விடத்திலே கௌரி லங்கேஷ் உயிரிழந்தார்.

தகவலறிந்த ராஜராஜேஸ்வரி நகர் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

உயிரிழந்த கௌரி லங்கேஷ் மூத்த புத்திரிகையாளர் பி.லங்கேஷின் மகள். இடதுசாரி சிந்தனை கொண்ட இவர் பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராக கருத்துக்களைக் கூறி வந்தார்.

கர்நாடகத்தில் மூட நம்பிக்கை ஒழிப்புச் சட்டத்தை அமுலாக்க ஆதரவு தெரிவித்து வந்தார். (3-8)

அமெரிக்காவை தாக்க வரும் "இர்மா" புயல்

(நியூயோர்க்)

வடக்கு அட்லாண்டிக் கடலில் புதிதாக உருவாகியுள்ள 'இர்மா' புயலால் அமெரிக்காவின் சில பகுதிகளும், கரீபியன் கடல் நாடுகளும் பலத்த பாதிப்பை சந்திக்கும் என எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. ஏற்கனவே ஹார்வே புயல் காரணமாக அமெரிக்காவின் டெக்சாஸ் பிராந்தியத்தின் பல்வேறு பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. பலர் உயிரிழந்துள்ள நிலையில் கோடிக்கணக்கான மதிப்பில் பொருட்சேதங்கள் நிகழ்ந்துள்ளன.

வெள்ளத்தின் பாதிப்புகள் இன்னும் விலகாத நிலையில் தற்போது வடக்கு அட்லாண்டிக் பெருங் கடலில் புதிதாக புயல் ஒன்று உருவாகியுள்ளதாக வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

"இர்மா" என்று பெயரிடப்பட்டுள்ள இப்புயல் அமெரிக்காவின் புளோரிடா மாகாணம், கரீபியன் நாடுகளான ஹைதி, கியூபா, டொமினிகன் குடியரசு, புயுர்டோ ரிகோ ஆகிய நாடுகளை தாக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இப்புயலால் கடலில் மாபெரும் அலைகள் உண்டாகலாம் என்று புயல் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இப்புயல் அமெரிக்கா மற்றும் புளோரிடா மாகாணத்தில் அவசர நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அங்கு வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டு வருகின்றனர். மீட்பு பணிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (3-8)

ட்ரம்பின் முடிவுக்கு ஒபாமா எதிர்ப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவுக்குள் சிறு வயதில் சட்டவிரோதமாக குடியேறியவர்களுக்கான வேலைவாய்ப்பை பறிக்க ட்ரம்ப் முடிவெடுத்துள்ளது கொடூரமான நடவடிக்கை என அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஒபாமா விமர்சித்துள்ளார்.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஒபாமா ஆட்சிக் காலத்தின்போது அமெரிக்கக் குடியுரிமையைச் சட்டங்களில் பல்வேறு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன் ஒரு பகுதியாக, சிறுவயதிலேயே அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாகக் குடியேறுபவர்கள், வளர்ந்த பின்னர் அமெரிக்க நிறுவனங்களில் பணிபுரிவதற்கான அனுமதி அளிக்கப்பட்டது.

குழந்தை குடியேற்ற வாசிகளுக்கான நிறுத்தி வைக்கப்பட்ட நடவடிக்கை" என்று அழைக்கப்படும் இச் சட்டத்தை இரத்து செய்வதற்கான முடிவை தற்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எடுத்துள்ளதாக தெரிகிறது. விரைவில் இதனை ட்ரம்ப் பரிசீலிக்க இருப்பதாக வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் அறிவித்துள்ளார்.

இவ் அறிவிப்பையடுத்து ஆயிரக் கணக்கானோர் வெள்ளை மாளிகையின் முன்னர் குவிந்து ட்ரம்புக்கு எதிராக கண்டன குரல்களை எழுப்பினர்.

இந்நிலையில், ட்ரம்பின் இம்முடிவு கொடூரமானது எனவும், சட்டரீதியிலான நடவடிக்கை இல்லை என முன்னாள் ஜனாதிபதி ஒபாமா விமர்சித்துள்ளார். இது தொடர்பாக தனது முகப்புத்தகத்தில் கருத்து தெரிவித்துள்ள அவர், சிறு வயதில் அவர்கள் குடியேறியது தவறான ஒன்றாக இல்லை. எனவே, அவர்களது எதிர்காலம் பாதிக்கும் வகையில் நாம் நடந்துகொள்ளக்கூடாது என ஒபாமா தெரிவித்தார். (3-8)

வெளிநாடுகளி[illegible] வெளியேற்றப்ப[illegible]



(இஸ்லாமபாத்)

வெளிநாடுகளில் இருந்து கடந்த 5 ஆண்டுகளில் 5 இலட்சத்து 44 ஆயிரத்து 105 பாகிஸ்தானியர்கள் வெளியேற்றப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சகம் எழுத்துபூர்வமாக அறிவித்துள்ளது.

வெளிநாடுகளில் வாழும் பாகிஸ்தானியர்கள் அங்கிருந்து வெளியேற்

போர் ஒ[illegible] தென்கொ[illegible]

(சியோல்)

மிரட்டல் விடுக்கும் வடகொரியாவை எதிர்கொள்ள, தென்கொரிய கடற்படை போர் ஒத்திகையில் ஈடுபட்டுள்ளது.

வெளிநாடு

ஜெயலலிதா நினைவிடத்தில் நீட்தேர்வுக்கு எதிராக போராட்டம்

மாணவர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றிய பொலிஸார்

(சென்னை)

நீட் தேர்வுக்கு எதிராக ஜெயலலிதா நினைவிடத்தில் போராட்டம் நடத்திய மாணவர்களை பொலிஸார் வலுக்கட்டாயமாக வெளியேற்றியதால் பரபரப்பு ஏற்பட்டது.

அரியலூர் மாணவி அனிதாவின் மரணத்திற்கு நீதி கேட்டும், நீட் தேர்வை இரத்துச்செய்ய வலியுறுத்தியும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்றும் மாணவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். சென்னையில் பல்வேறு இடங்களில் மாணவர்கள் திரண்டு போராட்டம் நடத்தினர். நீட் தேர்வுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பியபடி மாணவர்கள் ஊர்வலமாக சென்றனர்.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா நினைவிடத்தில் இந்திய மாணவர் சங்கத்தைச் சேர்ந்த மாணவர்கள் சிலர் அமர்ந்து போராட்டம் நடத்தினர். நீட் தேர்வுக்கு எதிராக முழக்கமிட்ட அவர்களை பொலிஸார் வலுக்கட்டாயமாக வெளியேற்றினர். போராட்டத்தில் ஈடுபட்ட மாணவிகளை, பெண் பொலிஸார்இழுத்துச் சென்று வெளியேற்றினர். இதையடுத்து அப்பகுதியில் பொலிஸ் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டது.

நீட் தேர்வை முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா கடுமையாக எதிர்த்ததால் அவரது நினைவிடத்தில் போராட்டம் நடத்தியதாக, மாணவர்கள் தெரிவித்தனர். நீட் தேர்வை இரத்து செய்யும் வரை போராட்டம் நடத்தப்போவதாக தெரிவித்தனர். (3-8)

உலக பேரழிவு ஏற்படும்

ரஷ்ய ஜனாதிபதி எச்சரிக்கை

(ஜியாமென்)

வடகொரியா அணு ஆயுத சோதனை விவகாரத்தை பேசி தீர்க்காமல் வேறு நடவடிக்கை எடுத்தால், உலக பேரழிவு ஏற்படும் என்று ரஷ்ய ஜனாதிபதி புடின் எச்சரித்துள்ளார்.

வடகொரியா மீது மேலும் பல நடவடிக்கைகள் மற்றும் போர் தொடுப்பது பற்றி அமெரிக்கா ஆலோசனை நடத்தி வருகிறது. இந்நிலையில் பிரிக்ஸ் மாநாட்டில் கலந்து கொள்ள சீனா வந்திருந்த ரஷ்ய ஜனாதிபதி புடின் இப்பிரச்சினை குறித்து பேசினார். அவர் அளித்த பேட்டியில், வடகொரியாவின் ஆத்திரமூட்டும் செயல்கள் கண்டிக்கத்தக்கவைதான். அதை பேசித்தான் தீர்க்க வேண்டும். இந்த சமயத்தில் பொருளாதாரத் தடை உள்ளிட்ட எந்த நடவடிக்கை மேற்கொண்டாலும் அது பயன் அற்றதும், திறமையற்ற நடவடிக்கையை குறிப்பதும் ஆகும். மற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது பிரச்சினை பெரிதாகி சக்திவாய்ந்த நாடுகளிடையே பிளவு ஏற்பட்டு உலக பேரழிவுதான் ஏற்படும். இந்த நடவடிக்கைகள் அனைத்தும் உலக பேரழிவுக்கும், ஒரு மிகப் பெரிய எண்ணிக்கை பலியாவதற்கும் காரணமாகும். என்று அவர் தெரிவித்தார். இதனால் பிரச்சினை அதிகரித்துள்ளது. (3-8)

ளிலிருந்து அதிகளவாக ப்படும் பாகிஸ்தானியர்கள்

முதல் 2017 ஜூன் வரை அதாவது 5 ஆண்டுகளில் 5 இலட்சத்து 44 ஆயிரத்து 105 பாகிஸ்தானியர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இவர்கள் 134 நாடுகளில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். அதிக பாகிஸ்தானியர்கள் வெளியேற்றிய நாடுகள் பட்டியலில் சவுதி அரேபியா முதலிடத்தில் உள்ளது. அதைத் தொடர்ந்து ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஓமான், மலேசியா, இங்கிலாந்து, துருக்கி மற்றும் கிரீஸ் ஆகிய நாடுகளில் இருந்து அதிகம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் இருந்து 49 பேர் வெளியேற்றப்பட்டு பாகிஸ்தானுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது. (3-8)

றப்பட்டு வருவது தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இது குறித்து பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் செனட்டர் ஜெகன்செப் ஜமால்தினி கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்கு உள்துறை அமைச்சகம் எழுத்துபூர்வமாக பதில் அளித்துள்ளது. அதில் கடந்த 2012 ஜனவரி

ரோஹிங்யா முஸ்லிம்கள் தப்பிச்சென்ற படகு கவிழ்ந்து விபத்து

10 பேர் பலி

(பாங்கொக்)

மியன்மார் நாட்டிலிருந்து ரோஹிங்யா முஸ்லிம்கள் தப்பிச் சென்ற போது படகு ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 5 குழந்தைகள் உட்பட 10 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இராணுவத் தினரின் தாக்குதலால் உயிருக்கு பயந்து ரோஹிங்யா முஸ்லிம்கள் பங்களாதேஷ்திற்கு தப்பிச் சென்ற வண்ணம் உள்ளனர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான ஆற்றின் வழியாக படகில் செல்லும் பலர் விபத்துகளில் சிக்கி உயிரிழந்து வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று ரோஹிங்யா முஸ்லிம்கள் தப்பிச் சென்ற சில படகுகள் ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் 5 குழந்தைகள் மற்றும் 5 ஆண்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

அவர்களின் உடல்களை பங்களாதேஷ் எல்லைப் பாதுகாப்பு படையினர் ஆற்றின் வெவ்வேறு இடங்களில் இருந்து மீட்டனர்.

ஆற்றில் மூழ்கிய மேலும் சிலரை தேடும் பணிகளில் பங்களாதேஷ் கடலோர காவற் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். (3-8)

ஒத்திகையில் காரிய கடற்படை

அணுகுண்டை விட பல மடங்கு சக்தி வாய்ந்த புதிய ஐதரசன் வெடிகுண்டை வடகொரியா இரகசியமாக கடந்த ஞாயிறு அன்று சோதனை செய்தது.

மேலும் மீண்டும் கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கும் ஏவுகணை சோதனைக்கும் வடகொரியா தயாராகி வருவதாக தென் கொரியா குற்றம் சாட்டியுள்ளது.

இந்நிலையில், வடகொரியாவை இராணுவ ரீதியாக எதிர்கொள்ள கிழக்கு கடற்பகுதியில் தென் கொரியா பிரமாண்டமான போர் ஒத்திகையை கடந்த திங்கட்கிழமை தொடங்கியுள்ளது.

இந்த ஒத்திகை யில் பல வகை போர் கப்பல்கள் ஈடுபடுத்தப்பட்டன. கண்டம் விட்டு கண்டம் பாயும் அதிநவீன ஏவுகணைகளும் இந்த ஒத்திகையில் ஏவப்பட்டுள்ளன. (3-8)

அமேசான் காடுகளில் புதிதாக 381 உயிரினங்கள் கண்டுபிடிப்பு

(வோஷிங்டன்)

அமேசான் காடுகளில் கடந்த இரண்டு வருடங்களாக நடத்தப்பட்ட ஆய்வில், 381 புதிய உயிரினங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

மனித செயற்பாடுகளால் ஆபத்தில் உள்ள பகுதிகளிலேயே புதியதாக கண்டுபிடிக்கப்பட்ட அனைத்து விலங்குகள் மற்றும் தாவரங்கள் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள்தெரிவித்துள்ளனர்.

1999 முதல் 2015 வரையிலான காலத்தில் இங்கு 2000க்கும் மேற்பட்ட புதிய உயிரினங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் கண்டுபிடிக்கப்பட்ட இனங்களைக்கொண்டுள்ள இந்த அறிக்கை பிரேசிலில் உள்ள நகரான "ஸாபாலோ"வில் வெளியானது.

அமேசானில் கண்டுபிடிக்கப்படும் புதிய இனங்கள் தொடர்பாக வெளியாகும் அறிக்கைகளில், இது மூன்றாவதாகும்.

முன்பு அறியப்படாத 216 தாவரங்கள், 93 மீன்கள், 32 நிலநீர் வாழிகள், 20 பாலூட்டிகள், 19 ஊர்வன மற்றும் ஒரு பறவை ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அமேசான் மழைக்காடு உலகிலே மிகப்பெரிய காடாகும். பல இனங்கள் மற்றும் வாழ்விடங்களைக் கொண்ட அமேசான் உயிர்கள் மற்றும் வாழ்விடப் பன்முகத் தன்மைக்கு பிரபலமானது.

ஆராய்ச்சியாளர்கள் இன்னும் நூற்றுக்கணக்கான உயிரினங்களைக் கண்டுபிடித்துவருகின்றனர். அப்பகுதிகளில் இன்னும் பல பணிகள் செய்ய வேண்டும் என்பதற்கு இது ஆதாரமாக உள்ளது என டபிள்யூ. டபிள்யூ.ஃப் பிரேசில் அமேசான் திட்டத்தின் இணை ஒருங்கிணைப்பாளர் ரிக் கார்டோ மெல்லோ கூறுகிறார்.

ஆனால், விவசாயம் செய்தல் மற்றும் மரம் வெட்டுதல் போன்ற மனித செயற்பாடுகள் அமேசான் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களுக்கான ஆபத்தாக இருப்பதாக மெல்லோ எச்சரித்துள்ளார்.



மனிதர்களால் அமேசான் காடு அழிக்கப்படும் பகுதிகளில் தான் இந்த 381 உயிரினங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வு நமக்கு மிக முக்கியமானது.

ஏனென்றால், நமது பொருளாதார நடவடிக்கைகளால் உயிரினங்களைப் பற்றி நாம் அறிவதற்கு முன்பே அவை அழிந்து போவது பற்றிய உண்மையை இந்த ஆராய்ச்சி உணர்த்துகிறது என்கிறார் மெல்லோ.

சுரங்க பணிகளுக்காக இயற்கை வளங்களைப் பயன்படுத்துவது குறித்து பிரேசிலில் கடுமையான விவாதங்கள் நடந்து வரும் நேரத்தில் இந்த அறிக்கை வெளியாகியுள்ளது. (3-8)

அமெரிக்காவின் பசுபிக் கட்டளை தளபதியுடன் விஜேகுணரத்ன சந்திப்பு

(கொழும்பு)

இலங்கையின் பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியான அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, அமெரிக்காவின் பசுபிக் கட்டளைத் தளபதி அட்மிரல் ஹரி பி ஹரிசை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

ஆசிய பசுபிக் பாதுகாப்பு தலைமை அதிகாரிகளின் 20 ஆவது கருத்தரங்கு கனடாவில் நடைபெற்று வருகிறது. இதில், இலங்கைக்கான பிரதானியான அட்மிரல் பாதுகாப்பு அதிகாரிகளின் ரவீந்திர விஜேகுணரத்ன பங்கேற்றுள்ளார்.

இந்தக் கருத்தரங்கின் ஒரு பக்க நிகழ்வாக அவர், அமெரிக்காவின் பசுபிக் கட்டளைத் தளபதி அட்மிரல் ஹரி பி ஹரிசை சந்தித்து பேச்சு நடத்தினார்.

இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது உயிரோட்டத்தை இழந்துள்ளது

பத்தேகம சமித தேரர் கவலை

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 66 ஆவது வருட நிறைவு விழா நிகழ்வின் போது கெம்பல் மைதானத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்ததாக தென் மாகாண சபை உறுப்பினர் பத்தேகம சமித தேரர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எப்போதும் நாட்டுப் பற்றுக் கொள்கையொன்றையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆனால், இன்று எரிபொருள் நிரப்பு நிலையத்தைக் கூட வெளிநாட்டுக்கு விற்பனை செய்து வயிறு வளர்க்கும் இக்கட்சியின் அமைச்சர்களுக்கு அமைச்சரவையில் பேச வார்த்தையின்றி பார்த்திருக்க வேண்டியுள்ளனர். இன்று இக்கட்சியின் உயிரோட்டம் இல்லாமல் போயுள்ளதாகவும் தேரர் மேலும் கொழும்பு சிங்கள ஊடகம்

ஒன்றுக்கு அவர் மேற் கண்ட வாறு தெரிவித்தார். (இ-7)

'வருண' ஆழ்கடல் ரோந்துக் கப்பலை இலங்கைக்கு வழங்கியது இந்தியா

(கொழும்பு)

இந்திய கடலோரக் காவற்படை நேற்று முன்தினம் வருண என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பலை இலங்கைக் கடலோரக் காவற்படையிடம் அதிகாரபூர்வமாக கையளித்தது.

கொச்சியிலுள்ள கடற்படைத் தளத்தில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வில், இந்திய கடலோரக் காவற்படையின் பணிப்பாளர் ராஜேந்திர சிங், இந்தக் கப்பலை, இலங்கைக் கடலோரக் காவற்படையின் பணிப்பாளர் றியர் அட்மிரல் சமந்த விமலதுங்கவிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் இலங்கை கடற்படையின் தலைமை அதிகாரி றியர் அட்மிரல் ரணசிங்கவும் கலந்து கொண்டார்.

பயிற்சி மற்றும் கண்காணிப்பு பயன்பாட்டுக்காக இந்த கப்பலை இலங்கைக்கு வழங்கியுள்ளதாக இந்திய கடலோரக் காவற்படையின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படைக்கு இந்தியக் கடலோரக் காவற்படையின் பயன்பாட்டில் இருந்த வரஹா என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பல் 2008ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமும், விக்ரஹா என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பல் 2008ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதமும் இந்தியாவினால் வழங்கப்பட்டது.

இந்திய கடலோரக் காவற்படையிடம் இருந்து பெற்றுள்ள வருண என்ற ஆழ்கடல் ரோந்துப் படகிற்கு இலங்கை கடலோரக் காவற்படை, SLCG-60 என்று பெயரிட்டுள்ளது. இதன் கட்டளை அதிகாரியாக கப்டன் நெவில் அமர உபயசீலி நியமிக்கப்பட்டுள்ளார்.

கப்பல் இலங்கைக்கு புறப்பட முன்னர், இதனை இயக்கும் செயல்முறைகள் தொடர்பாக இலங்கைக் கடலோரக் காவற்படை மாலுமிகளுக்கு பயிற்சிகள் அளிக்கப்படும் எனத் தெரியவருகிறது. (இ-7)

மூச்சுப் பகுப்பிகள் 90,000 விநியோகம்

மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளைக் கண்டறிவதற்காக, நாடளாவிய ரீதியில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு 90,000 மூச்சுப் பகுப்பிகளை விநியோகித்துள்ளதாக, பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், போதையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள், எதிர்வரும் நாட்களில் துரிதப் படுத்தப் படும் என்றும், அவர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்தியமை உறுதிப்படுத்தப்படுமாயின், சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு, சேவைகளுக்கு தடை விதிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

இன்று ஒரு தகவல்

நாமே சொல்லிவிட்டால்?

ஒருவரைக் காணப் போகும் போது பழம் வாங்கிப் போகிறோம். பழம் நன்றாக இல்லை. நமக்கே திருப்தி இல்லை. ஆனாலும் கொடுத்து விட்டு நகர்ந்து விடுகிறோம். நாம் போனதும், அந்த வீட்டில் ஏகப்பட்ட விமர்சனங்கள்.

"பழம் வாங்கிட்டு வந்திருக்காரு பாரு பழம்!" என்கிறார்கள். பிறிதொரு சந்தர்ப்பத்தில் இது நம் காதையும் எட்டுகிறது. நாம் வருத்தப்படுகிறோம்.

"தானம்கொடுக்கிற மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்க்கிற மோசமான கூட்டம்" என்று நாமும் பதிலுக்கு விமர்சனம் செய்கிறோம்.

ஒரு புதிய அணுகுமுறையால் மேற் கூறிய காட்சியை அடியோடு நம்மால் மாற்றியமைத்து விட முடியும்.

அதாவது, பழத்தைக் கையில் கொடுக்கும் போதே பழம் சுமாராத்தான் கிடைச்சது. நல்ல பழம் கண்ணில் படலை "அவசரத்திற்கு அலையவும் முடியலை. இதையே வாங்கிவந்துவிட்டேன்" என்கிற பாணியில் நாமே வெளிப்படையாகச் சொல்லிவிட்டால் பிரச்சினையே வராது.

விடியற்காலையில் ஒரு வீட்டிற்குப் போக நேரிடுகிறது. "இவ்வளவு சீக்கிரமா வரணுமான்னு யோசிச்சேன். வேற வழியில்லை, அது தான் வந்துட்டேன்" என்று நாமே சொல்லிவிட்டால், "காலங்காலத்தால வந்து சேர்த்துட்டான் பாரு – கடன்காரப் பாவி மாதிரி", என்று அவர்கள் கரித்துக் கொட்டமாட்டார்கள்.

"நம்ம அவதி தெரியாம அவன் பாட்டுக்கு உதவி கேட்கிறானேன்னு நீங்கள் நினைக்கலாம்."

"நான் சொல்லுறதைக் கேட்டுக்கக் கொஞ்சம் சிரமமாத்தான் இருக்கும் ஆனாலும் இதை நான் சொல்ல வேண்டியிருக்கு"

"என்னடா – வந்துட்டு இப்படிச் சாப்பிடாமப் போறாரேன்னு நீங்க நினைக்கலாம். ஆனால் என் அவசரம் அப்படி"

இப்படி அந்தந்த சூழ்நிலைக்குப் பொருத்தமான எதிராளிகள் என்ன நினைப்பார்கள் என்பதையும் சேர்த்து ஊகித்து எல்லாவற்றையும் நாமே சொல்லிவிட்டால் அதில் சில நன்மைகள் இருக்கின்றன.

முதலாவதாக, நாம் ரொம்பவும் பிராக்டிலான மனிதர்கள் என்பதை மற்றவர்களுக்கு அதன் மூலம் அழகாக உணர்த்தி விடுகிறோம்.

அவர்கள் சொல்ல இருந்ததை அல்லது சொல்ல நினைத்து அவர்கள், தர்மசங்கடம் காரணமாகச் சொல்லாமல் விட்டுவிட்டதை நாமே சொல்லிவிடுவதால் நம்மீது கோபமோ வருத்தமோ ஏற்படுவது இல்லை.

எல்லாவற்றையும் விட நாம் இங்கிதம் தெரிந்தவர்கள், நுணுக்கமான மனிதர்கள் என்பதெல்லாம் எதிராளிகளுக்குத் தெரிய வரும். இது அவர்களும் விரும்பும் படியாகில் நம் பெயரும் சேர உதவியாக இருக்கும்.

லேனா தமிழ்வாணன்

ரத்துபஸ்வெல துப்பாக்கிச் சூட்டு சம்பவத்திற்கு உத்தரவிட்டவர் ஜெகத் ஜெயசூரியவே!

கொலைக் குற்றச்சாட்டுக்களை அடுக்குகிறார் பொன்சேகா

(கொழும்பு)

ரத்துபஸ்வெல துப்பாக்கிச் சூட்டு சம்பவத்திற்கு முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவே உத்தரவிட்டதாக பீல்ட் மார்ஷல் அமைச்சர் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.அத்துடன் வெலிக்கடை சிறைச்சாலை படுகொலைக்கும் ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவே உத்தரவிட்டிருந்ததாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

ரத்துபெஸ்வெலயில் சுத்தமான குடிநீர் கேட்டு போராட்டம் நடத்தியவர்கள் மீதும், சிறைக் கைதிகள் மீதும் ஜெகத் ஜெயசூரியவே தாக்குதல் நடத்த உத்தரவிட்டார். இந்நிலையில் ஜெகத் ஜெயசூரியவிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கோரிக்கை விடுத்துள்ளார். இதேவேளை ஜெகத் ஜெயசூரிய இராணுவத் தளபதியாக பதவி வகித்த காலப் பகுதியில் யுத்தக் குற்றச் சாட்டுக்களில்ஈடுபட்டதாகவும்முறையான விசாரணைகள் இடம் பெற்றால் சாட்சியமளிக்கத் தயார் எனவும் பொன்சேகா ஊற்கனவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

மரதன் போட்டி

அரியாலை திருமகள் சன சமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு அமரர்களான திரு.திருமதி. செல்லத்துரை பாக்கியம் ஞாபகார்த்தமாக அன்னாரது குடும்பத்தினரின் அனுசரணையில் யாழ். மாவட்டரீதியாக நடத்தப்படும் ஆண் களுக்கான 5 மைல் மரதன் ஓட்டப் போட்டி 09.09.2017 நாளை மறுதினம் சனிக்கிழமை அன்று காலை 6 மணியளவில் நிலைய முன்றலில் ஆரம்பமாகும் என் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-1)

ஸ்ரீலங்கா விமான சேவை அதிகாரிகளுக்கு எதிராக எட்டு கனேடியர்கள் முறைப்பாடு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா விமான சேவை அதிகாரிகளுக்கு எதிராக கனேடியர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். எட்டு கனேடியர்கள் இவ்வாறு விமான நிலைய அதிகாரிகளுக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளனர்.

விமான பயணச்சீட்டுக்களை கொள்வனவு செய்திருந்த நிலையில் தமக்கு விமான சேவை அதிகாரிகள் ஆசனங்களை வழங்க மறுத்துள்ளதாக தெரிவித்து குறித்த எட்டு கனேடியர்களும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்த விமான சேவை அதிகாரிகளுக்கு எதிராக காவல்துறையினரிடம் கனேடியர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். விமானத்தில் ஆசனங்கள் இல்லாத நிலையில் எவ்வாறு பயணச் சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளன என்பது குறித்து விசாரணை நடத்துமாறு கனேடியர்கள் கோரியுள்ளனர். (இ-7)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணி நேற்று நடைபெற்றது. இச் சிரமதானப் பணியில் தெல்லிப்பழை சமூர்த்திப் பயனாளிகள், கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். குறித்த சிரமதானப் பணிகள் இன்றைய தினமும் நடைபெறும் என கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

(படங்கள்- தெல்லிப்பழை செய்தியாளர்)

கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: செவ் 2 இல்
தகைமை/தொழில்:BSc/அரச தொழில்
தொ.இ: B/7702

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 53 செவ் 8 இல்
உயரம்: 175cm
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: B/7703

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 51
உயரம்: 5'11"
தகைமை/தொழில்:MSc/தனியார் தொழில்
தொ.இ: B/7704

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: செவ் 12 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L/அரச தொழில்
தொ.இ: B/7706

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 19
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:BSc/விரிவுரையாளர்
தொ.இ: G/7701

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 60 செவ் 8 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BSc/முகாமையாளர்
தொ.இ: G/7707

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 63
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:BA
தொ.இ: G/7709

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 15
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/7710

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

மாட்டுவண்டி சவாரிப்போட்டி

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் ஆண்டுதோறும் நடத்தப்படும் மாட்டு வண்டிச் சவாரி போட்டிகளின் வரிசையில் எதிர் வரும் (10-09-2017) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணி தொடக்கம் தங்கப் பதக்கத்திற்கான 4வது மாபெரும் சவாரிப் பந்தயம் வட்டுக்கோட்டை கொத்துத் துறை சவாரி விடந்தையில் இடம் பெறவுள்ளது.

A,B,C,D என நான்கு பிரிவுகளிலும் முதலிடம் பெறும் ஒவ்வொரு வெற்றியாளர்களுக்கும் முதற்பரிசாக தங்கப்பதக்கமும் மற்றும் ஏனைய வெற்றியாளர் களுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (இ-104)

சந்தைகளில் நேற்றைய விலை

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி	கொழுகாமம்	சாவகச்சேரி	கிளிநொச்சி	மருதனார்மடம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	120	100	120	120	140
உருளைக்கிழங்கு	110	100	110	120	100
பச்சைமிளகாய்	280	250	260	400	300
தக்காளி	120	130	240	160	80
மரவள்ளிக்கிழங்கு	80	60	80	60	80
கோவா	100	50	80	100	60
கரட்	100	100	140	160	120
பூசணி	40	30	40	60	80
புடோல்	80	50	80	80	70
வாழைக்காய்	100	80	100	100	100
சின்ன வெங்காயம்	180	180	200	280	160
பெரிய வெங்காயம்	130	110	140	160	130
பாகற்காய்	180	130	120	240	100
வெண்டிக்காய்	50	70	50	80	30
கருணைக் கிழங்கு	80	80	120	100	80
பயற்றங்காய்	120	70	200	80	60
லீக்ஸ்	100	70	100	80	100
பீற்றூட்	40	30	120	60	60
கறிமிளகாய்	80	90	120	120	120
முருங்கைக்காய்	50	50	60	60	60
போஞ்சி	200	140	140	200	120
கத்தரிதம்புள	100	120	100	120	100
சீரை-1பிடி	40	20	30	30	30
தேசிக்காய்	200	150	200	300	200
தேங்காய் (ஒன்று)	70	70	70	50-70	60
இராவள்ளி	300	240	260	600	-
வெங்காயப்பூ	250	70	-	200	-
முள்ளங்கி	80	30	50	60	60
பெரிய பூங்காணி	40	30	40	40	25
வல்லாரை	15	10	20	20	15
ஈரப்பலா	60	30	50	50	60

சைவ பரிபாலன சபை நடத்தும் சைவ மாநாடு யாழில்

(யாழ்ப்பாணம்)

சைவ பரிபாலன சபை நடத்தும் அகில இலங்கைச் சைவ மாநாடு எதிர்வரும் 15.09.2017 வெள்ளிக்கிழமை முதல் 17.09.2017 ஞாயிற்றுக்கிழமை வரை இல. 66, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்எனும்முகவரியில்அமைந்துள்ள சைவபரிபாலன சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

முதலாம் நாள் நிகழ்வு 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து மத அலுவல்கள் கலாசார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

காலை 8 மணிக்கு வண்ணார்பண்ணை சிவன் கோவிலில் வழிபாடுகள் இடம்பெற்று ஊர்வலம் காங்கேசன் துறை வீதி, கல்லூரி வீதி வழியாக விழா மண்டபத்தை வந்தடையும்.

இந்நிகழ்வில் ஆசியுரையினை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழங்கவுள்ளதுடன் "வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்" எனும் தலைப்பில் சிறப்புரையினை திருவாவடுதுறை ஆதீனப் புலவர் ஏ.அனுசாந்தன் வழங்கவுள்ளார்.

சைவ மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வு 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை ஓய்வு நிலைப் பேராசிரியர் திருமதி கலைவாணி இராமநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையினை சைவக் குருமார் அர்ச்சகர் சபைச் செயலர் சிவ ஸ்ரீ ச.மகாலிங்க சிவக்குருக் கள் வழங்கவுள்ளதுடன் "மாறி வரும் சமுதாய மாற்றத் தில் சைவப் பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினையும் சவால்களும்" எனும் தலைப் பில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சாந்தினி அருளானந்தம் சொற் பொழிவினையும், "சைவ சமயமே சமயம்" எனும் தலைப்பில் சிறப்புரையினை அகில இலங்கைக் கம்பன் கழகத் தலைவர் கம்பவாரிதி இ.ஜெயராஜ் சிறப்புரையினையும் வழங்கவுள்ளனர்.

மூன்றாம் நாள் நிகழ்வு 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சைவ பரிபாலன சபைத் தலைவர் இ.வசந்தசேனன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் "சமயமும் வாழ்வியலும்" எனும் தலைப்பில் சொற்பொழிவினை வர்ணனை கலாமணி த.தவநேசன் நிகழ்த்தவுள்ளார். மேலும் "மேன்மை கொள் சைவ நீதி" எனும் தலைப்பில் கம்பவாரிதி இ.ஜெயராஜ், "மெய்ப்பொருள் காட்டிய நீதி" எனும் தலைப்பில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன், "திருநாளைப் போவார் காட்டிய நீதி" எனும் தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன், "திருநீலகண்டர் காட்டிய நீதி" எனும் தலைப்பில் அகில இலங்கை கம்பன் கழக இள நிலை அமைப்பாளர் அ.வாசுதேவன், "சிறுத்தொண்டர் காட்டிய நீதி" எனும் தலைப் பில் சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் ஆகியோரது சிந்தனை அரங்கு இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து திருமதி கவிதா வாமதேவனின் நெறியாள்கையில் விரலிசை கானம் கலை நிகழ்வு (வீணை, வயலின், ஓகன், மிருதங்கம், கெஞ்சிரா) இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

படைகளின் தேவைக்கு யாழ்.கோட்டையை பயன்படுத்தக்கூடாது

டக்ளஸ் எம்.பி. வலியுறுத்து

தற்போது யாழ்.மாவட்டத்தில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணி, நிலங்களில் நிலை கொண்டுள்ள படையினரை, தேசியப் பாதுகாப்பின் தேவை கருதி, அம்மாவட்டத்தின் சனத் தொகைக்கும் இன விகிதாசாரத்திற்கேற்பவும் பொருளாதார ரீதியில் பெறுமதியற்றதான அரசுக்குரிய தரிசு நிலங்களுக்குள் நிலை கொள்ளத்தக்க ஏற்பாடுகளே முன்னெடுக்கப்பட வேண்டுமேயொழிய, வரலாற்று ரீதியில் தொன்மைமிக்க புராதனச் சின்னமாக விளங்கும் யாழ். கோட்டையை படையினர் நிலை கொள்வதற்கு பயன்படுத்தக் கூடிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படக் கூடாதென நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர், குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் படையினரது இருப்புகள் அமைந்துள்ள மாவட்டங்களில் அந்தந்த மாவட்டங்களின் சனத் தொகைக்கும் இன விகிதாசாரத்திற்கும் ஏற்பவே அவை அமைந்திருக்க வேண்டும் என்பதையும் மேற்படி படைகள் நிலை கொண்டிருக்கக்கூடிய காணி, நிலங்கள் கடற்றொழில், விவசாயச் செய்கைகள் போன்ற எமது மக்களின் வாழ்வாதாரங்களுடன் தொடர்புடைய வளங்களைக் கொண்ட பொருளாதார ரீதியில் முக்கியத்துவமான காணி, நிலங்களாக இருக்கக்கூடாது என்பதையும் எமது நிலைப்பாடாக நாம் மிகத் தெளிவாகவே முன்வைத்து வருகின்றோம்.

யாழ்.கோட்டை என்பது எமது பகுதியில் இருக்கக் கூடிய புராதன வரலாற்று அடையாளங்களுள் ஒன்றாகும். அந்த வகையில் கடந்த கால அசாதாரணச் சூழ்நிலைகளின்போது பாரிய சேதங்களுக்கு உட்பட்டிருந்த மேற்படி கோட்டையையும் அதனது சுற்றுப் புறங்களையும் மீளப் புனரமைப்புச் செய்வதற்கு கடந்த காலங்களில் நாம் தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொண்டு, போதியளவில் அதனை நிறைவேற்றியும் வந்துள்ளோம். மேற்படி புனரமைப்பு நடவடிக்கைகளில் இன்னும் எஞ்சியிருக்கின்ற பணிகளை மேற்கொள்வது தொடர்பில் நாம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அவதானத்திற்கும் கொண்டு வந்து, தற்போது அதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போதைய சூழலில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளை கவருகின்ற ஓர் இடமாகவும் யாழ்.கோட்டை விளங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இத்தகையதொரு நிலையில், அதனை மீள படைகளின் தேவைகளுக்காக வழங்குவது என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

எமது தொன்மைகளையும், கலாசார பாரம்பரியங்களையும் அழிக்கக்கூடிய நிலைக்கு தள்ளப்பட நாம் தயாராக இல்லை. எமது தொன்மைகள், கலாசார, பாரம்பரியங்கள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கொள்கை நிலைப்பாட்டிலிருந்தே ஏற்கனவே கடந்த கால அனர்த்தங்கள் காரணமாக அழிக்கப்பட்டவற்றை நாம் ஆக்கபூர்வமான நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கின்றோம்.

அந்த வகையில், படைகளின் தேவைகளுக்காக யாழ். கோட்டையைப் புயன்படுத்துவது தொடர்பிலான கருத்துக்கு இடமில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

வெலிக்கடை சம்பவத்துடன் தொடர்புடைய சாட்சியாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்

கபே அமைப்பு கோரிக்கை

வெலிக்கடை சம்பவத்துடன் தொடர்புடைய சாட்சியாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென கபே அமைப்பு கோரியுள்ளது.

கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

வெலிக்கடைச் சிறையில் இடம்பெற்ற கலகம் தொடர்பான பிரதான சாட்சியாளர் சுதேஸ்நந்திமானின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

வெலிக்கடைசம்பவம் இடம்பெற்று ஐந்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் அது தொடர்பில் சட்டம் உரிய முறையில் அமுல்படுத்தப் படவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். குற்றச் செயலுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு எதிராக அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

கந்தபுராணம் வாராந்த விளக்கவுரை

யாழ். சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா வால் கந்தபுராணம் வாராந்த விளக்கவுரை இலவசமாக பிரதி வெள்ளிக்கிழமைகளில் மாலை 6.30 மணிமுதல் இரவு 7.30 மணி வரை இல. 700, பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள ஞானவேல் ஆச்சிரமத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இது தவிர, பிரதி வெள்ளிக்கிழமைகளில் காலை 5.00 மணி முதல் 6.00 மணி வரை நல்லூர் ஆலய முன்றலில் பஜனை நடைபெறும். மேலும் மாலை 4 மணி முதல் 5.30 மணி வரை இளம் சிறார்களுக்கான (வயது 4 - 12) பால விஹாஸ் வகுப்பும் இலவசமாக இல. 09, செட்டித் தெரு ஒழுங்கை, நல்லூர் எனும் முகவரியில் அமைந்துள்ள சின்மயா மிஷனில், இடம்பெறும். (இ-3)

சிலை திறப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் வி.சிவசுப்பிரமணியத்தின் சிலை திறப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 9.10 மணிக்கு ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் பாடசாலை அதிபர் எம்.செல்வஸ்தன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் ஆசியுரையை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவரும் பாடசாலையின் முன்னாள் அதிபருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனும் சிறப்புரையை யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனும் நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இவிக்னேஸ்வரனும் நிகழ்த்துவர். (இ-3)

கிராமத்துக்கு பொலிஸ் என்னும் தலைப்பில் இளவாலை பொலிஸாரால் கடந்த ஒரு மாத காலமாக நடமாடும் சேவை நடத்தப்பட்டது. அதன் இறுதி நாள் நிகழ்வு அண்மையில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.என்.ஆர். சேனநாயக்க தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் ரொசான் பெர்னாண்டோ பிரதம விருந்தினராகவும் காங்கேசன்துறை பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் மாசிங்க, காங்கேசன் துறை பொலிஸ் பிரிவு-2 உதவி பொலிஸ் அத்தியட்சகர் சிசிர குமார ஹேரத்த ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டதுடன் இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் மற்றும் பிரதேச மக்கள் ஒன்றிணைந்து வழங்கிய கலை நிகழ்ச்சிகளும் பொலிஸாரால் ஒழுங்கு செய்யப்பட்டு இன்னிசை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(படங்கள்:- இளவாலை செய்தியாளர்)

வடக்கு கல்வி அமைச்சரின் அலுவலகம் இடமாற்றம்

வடக்கு மாகாண கல்வி அமைச்சருடைய அலுவலகம் இனிவரும் காலங்களில் புதிய முகவரியில் இயங்கவுள்ளதாக வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இதுவரை ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கி வந்த கல்வி அமைச்சரின் அலுவலகம் நேற்றைய தினம் முதல் செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவுரியில் இயங்கும் என வட மாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (இ-9)

பாதுகாப்பு படைத் தலைமையக நிர்மாண பணிகளை நேரில் பார்வையிட்டார் ஜனாதிபதி



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் முற்பகல் பெலவத்த, அக்குரேகொடவில் நிர்மாணிக்கப்படும் பாதுகாப்பு படை தலைமையக கட்டடத் தொகுதிக்கான கண்காணிப்பு விஜயத்தில் ஈடுபட்டார்.

குறித்த திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பில் ஆராய்ந்த ஜனாதிபதி, குறைபாடுகள் இருப்பின் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி, பிரச்சினைகளை தீர்த்து விரைவாக திட்டத்தை நிறைவு செய்யுமாறு அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கியதுடன், பொறியியலாளர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடினார்.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்கா உள்ளிட்ட முப்படை உயரதிகாரிகள், ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ ஆகியோரும் இவ் விஜயத்தில் இணைந்து கொண்டனர். (இ-7)

நூல்கள் வெளியீட்டு விழா

தெல்லிப்பழை கலை இலக்கியக் கழகத்தினர் நடத்தும் சைவப்புலவர் கலாபூஷணம் அ.செல்லத்துரையின் 'சிந்தனை ஐம்பது' மற்றும் இலக்கிய கலாவித்தகர் கலாபூஷணம் கோகிலாமகேந்திரனின் 'விஞ்ஞான நூல்கள்' வெளியீட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) எஸ்.யு. சந்திரகுமாரன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.வடக்கு பிரதேச செயலாளர் எஸ்.சிவசிறி கலந்து கொள்வார். (இ-10-102)

மணவாளக் கோல பெருவிழாவும் கும்பாபிஷேக நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

யாழ். சுண்டுக்குளி சாமுண்டாபிகா சமேத ஞான வைரவர் ஆலய கும்பாபிஷேக தின மணவாளக் கோல பெருவிழாவும் கும்பாபிஷேக நூல் வெளியீட்டு விழாவும் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிமுதல் அபிஷேகம் இடம்பெற்று முற்பகல் 10 மணிக்கு கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீடு இடம்பெற்று நண்பகல் 12 மணிக்கு அன்னதானம் வழங்கப்படும். (இ-3)

அலோசியஸிற்கு அழைப்பாணை

வாக்குமூலம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழு முன் ஆஜராகுமாறு அர்ஜுன் அலோசியஸிற்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த அழைப்பாணை தொடர்பில் தெரியப்படுத்துவதற்காக அதிகாரிகள் அவரை சந்திக்கச் சென்ற போதும் வீட்டிலோ, காரியாலயத்திலோ அவர் இருக்கவில்லை என ஆணைக்குழுவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அலோசியஸிற்கு தெரியப்படுத்துமாறு அவரது சட்டத்தரணிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் அர்ஜுன் அலோசியஸிற்கு இரட்டை பிரஜாவுரிமை இருப்பதாகவும், அது தொடர்பில் தகவல்களை ஆணைக்குழு முன்னிலையில் சமர்ப்பிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1183

Search for people, places and things Nagendram Home

ரதீபா

குணா



விசாகரூபன்

நித்தியா

சுதாகர்

வினிதா

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

ரோஹிங்யா மக்களைப் பாதுகாக்க மியன்மார் அரசாங்கம் தவறிவிட்டது

கல்வி இராஜாங்க அமைச்சர் இராதா குற்றச்சாட்டு

(கொழும்பு)

மியன்மார் நாட்டில் ரோஹிங்யா மக்களை பாதுகாக்க அந்த நாட்டு அரசாங்கம் தவறிவிட்டது. இந்த விடயம் தொடர்பாக சர்வதேசத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்கு எமது நாடும் மக்களும் முன்வரவேண்டும்என கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுச்சாமி இராதாகிருஷ்ணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில், மியன்மார் நாட்டில் வசிக்கின்ற ரோஹிங்யா மக்களை பாதுகாப்பதற்கு அந்த நாட்டு அரசாங்கம் தவறிவிட்டது. இதன் காரணமாக பலருடைய உயிர் காவு கொள்ளப்பட்டிருக்கின்றது. இலங்கையில் இவ்வாறான 30 வருட கால யுத்தத்தின் போது எமது மக்கள் அனுபவித்த துன்பத்தை நாங்கள் நன்கு அறிவோம்.

எனவே இந்த செயற்பாட்டிற்கு எதிராக எமது மக்களும் எமது நல்லாட்சி அரசாங்கமும் சர்வதேசத்திற்கு அழுத்தம் கொடுத்து ஐக்கிய நாட்டின் மனித உரிமைகளுக்கான விசேட பிரதிகளை மியன்மார் நாட்டிற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மியன்மாரில் கடந்த ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி முதல் இடம் பெற்றுவரும் வன்முறைகள் காரணமாக பலர் பலியாகியுள்ளனர். இதுவரையில் சுமார் 90, ஆயிரம் பேர் நாட்டை விட்டு வெளியேறி அண்டை நாடான பங்களாதேஷில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

மியன்மார் நாட்டில் பல தலைமுறைகளாக வாழ்ந்து வருகின்ற ரோஹிங்யா மக்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த நிலைமையானது மிகவும் கவலை அளிக்கின்ற ஒரு செயற்பாடாகும். அந்த வலியும் வேதனையும் எங்களுக்கு நன்கு தெரியும்.

எமது நாட்டில் 30 வருட கால யுத்தத்தில் எமது மலையக மக்கள் உட்பட பலரும் இடம்பெயர்ந்து பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். தற்பொழுது நல்லாட்சி அரசாங்கத்தில் அது படிப்படியாக குறைந்து வருகின்றது.

மியன்மாரில் ரோஹிங்யா மக்கள் அதிகம் வாழும் ராகைன் பிராந்தியத்தில் அந்த நாட்டின் இராணுவத்தினர் வீடுகளுக்கு தீவைத்து பலரையும் கொடூரமான முறையில்கொலை செய்ததை தொடர்ந்து அந்த மக்கள் தமது உயிரை பாதுகாத்து கொள்வதற்கு இடம் பெயர்ந்து வருகின்றார்கள்.

இந்த மக்கள் வாழும் ஒரு கிராமத்தில் 700 இற்கும் அதிகமான வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எனவே இந்த மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் குடிபெயர்ந்து சென்றுள்ள மக்களை மீண்டும் அழைத்து வந்து அவர்களை குடியமர்த்தவும் அந்த நாட்டு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு எமது அரசாங்கம் சர்வதேசத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

பேஸ்புக் மோசடிகள் தொடர்பில் அதிகரித்து வரும் முறைப்பாடுகள்

இவ் வருடத்தில் கடந்த ஓகஸ்ட் மாத நிறைவு வரை, சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மோசடிகள் தொடர்பான 2200 முறைப்பாடுகள் வரை கிடைக்கப் பெற்றுள்ளதாக, இலங்கை கணனி அவசர தயார் நிலைக்குழு தெரிவித்துள்ளது. இவற்றில் பெரும்பாலானவை பேஸ்புக் வலைத்தளம் குறித்தே கிடைக்கப் பெற்றுள்ளதாக, அந்த குழுவின் பாதுகாப்பு பொறியியலாளர் ரொஷான் சந்திரகுப்த சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

ஜனாதிபதி ஆணைக்குழுவின் அலுவலகத்துக்கு திடீர் பாதுகாப்பு

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய பிணை முறி விநியோகம் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அலுவலகத்துக்கு திடீரென பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் பாதுகாப்புக் கடமையில் இருந்த பொலிஸாருக்கும் மேலதிகமாக சிறப்புப் பொலிஸார் அங்கு பாதுகாப்புக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

பிணை முறி ஆணைக்குழுவில் முக்கியமான ஆவணங்கள் இருப்பதால் இவ்வாறு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

ஜனநாயகம் மலர்ந்துள்ளது

ஹிஸ்புல்லா தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஜனநாயகம் மலர்ந்துள்ளது. அதனால், கட்சிக்குள் சிறுபான்மை மக்களுக்கு சம உரிமை, அந்தஸ்து கிடைத்துள்ளது.

இந்நிலையில், எதிர்வரும் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கரங்களை சிறுபான்மை சமூகம் பலப்படுத்த வேண்டும்" என, புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 66ஆவது நிறைவு தினத்தையொட்டி, கட்சியின் இளைஞர் அமைப்பினால் வெளியிடப்பட்ட "நிதஹச" சஞ்சிகைக்கு வழங்கிய செவ்வியிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கடந்த ஆட்சியில் முஸ்லிம்களுக்கு எதிரான பல சம்பவங்கள் இடம் பெற்றிருந்தன. அவற்றை தடுத்து நிறுத்தி, நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொடுக்க அப்போதைய தலைவர்கள் முன்வரவில்லை.

இதனால், முஸ்லிம் மக்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டும் தூரமாகினர். அதனால், கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களில் நாங்கள் பாரிய பின்னடைவை சந்தித்தோம்.

"இருப்பினும், கட்சியின் தலைமைப் பொறுப்பை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்றுக்கொண்ட பின்னர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீது முஸ்லிம்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். பிரிந்து சென்றவர்கள் நாளுக்கு நாள் மீண்டும் இணைகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

ஹெரோயினுடன் கைதான பாக். பிரஜை மறியலில்

உடம்பினுள் ஹெரோயின் போதைப்பொருளை மறைத்து வைத்து நாட்டுக்குள் கடத்தி வந்த பாகிஸ்தான் பிரஜையை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீர்கொழும்பு மேலதிக நீதவான் ஆர்.ஜி.என்.கே. ரன்கோன்கே உத்தரவிட்டார்.

பாகிஸ்தான் லாகூரை சேர்ந்த 37 வயதுடைய மொஹமத் அஸ்லம் என்பவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவராவார்.

சந்தேக நபர் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் கடந்த ஓகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். தடுப்புக் காவல் உத்தரவு பெற்று நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சந்தேக நபரின் உடம்பினுள் மறைத்து வைத்திருந்த 367 கிராம் ஹெரோயின் அடங்கிய 37 உருண்டைகளை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். (இ-7)

கடன் சுமைக்கு தீர்வை பெற்றுக்கொடுத்தோம்

பிரதமர் ரணில் பெருமிதம்

(கொழும்பு)

நாட்டில் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்ட அரசாங்கமாக தற்போதைய நல்லாட்சி திகழ்கிறது.

எமது கடன்சுமைக்கான தீர்வை எமது காலத்திலேயே பெற்றுக்கொடுப்பது தொடர்பில் நாம் வாக்குறுதி அளித்திருந்தோம். அதன்பிரகாரம் கடன் சுமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கிறோம்" என, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் 71ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில், நேற்று நடைபெற்ற சமய வழிபாடுகளைத் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச நாடுகளிடம் இருந்து எமக்கு ஏராளமான வரப்பிரசாதங்கள் கிடைத்து வருகின்றன.

கடந்த காலங்களில் நாம் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்திருக்கிறோம்.

குறிப்பாக நாட்டில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக்கொடுப்பதாக நாம் உறுதியளித்திருந்தோம்.

அதன் பிரகாரம் 4 இலட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இனிவரும் காலங்களில் அந்த 4 இலட்சம் வேலை வாய்ப்புகளில் வருமானத்தை அதிகரிப்பதுடன், மேலும் தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்தவுள்ளோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

குருப்பெயர்ச்சிப் பலன்கள்

02.09.2017-04.10.2018

சகாய ஸ்தானத்தில் குருபகவான்! தடைகள் விலகி தனம் சேரும்!

எதையும் துணிச்சலுடன் எதிர் கொள்ள வேண்டுமென்று சொல்லும் சிம்ம இராசி அன்பர்களே!

உங்கள் இராசிக்கு 5ஆம் இடமான புத்திர ஸ்தானத்திற்கும் 8ஆம் இடமான ஆயுள் ஸ்தானத்திற்கும் உரியவர் குரு பகவான். பஞ்சம அஷ்டமாதிபதி என்று சொல்லலாம். அப்படிப்பட்ட குருபகவான் இப்பொழுது உங்கள் இராசிக்கு 2ஆம் இடமான வாக்கு ஸ்தானத்தில் இதுவரை சஞ்சரித்து வந்தார். இனி அவர் 3ஆம் இடத்தில் சஞ்சரிக்கப்போகிறார்.

உங்கள் இராசிக்கு ஜென்மத்தில் இருந்த இராகுவும் 7இல் இருந்த கேதுவும் விலகி விட்டார்கள். ஆனால் அர்த்தாஷ்டமச் சனி இன்னும் விலகவில்லை. இன்னும் 3 மாத காலம் பொறுத்திருக்க வேண்டும். சனி முற்றிலும் விலகியதும், நீங்கள் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கப் போகிறீர்கள். 19.12.2017 அன்று வரவிருக்கும் சனிப்பெயர்ச்சி உங்களுக்கு பெரிய மாற்றத்தை தரப் போகிறது.

எது எப்படி இருந்தாலும் உங்கள் இராசிக்கு அஷ்டமாதிபதியான குருபகவான் 3ஆம் இடத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். 3,6, 8,12 ஆகிய இடங்கள் ஜாதகத்தில் மறைவிடங்களாகக் கருதப்படுகின்றது. மறைவிடத்திற்குரிய ஸ்தானாதிபதி மறைவிடத்திலேயே சஞ்சரிக்கும் பொழுது, நிறைவான பலனையே வழங்கும் என்பார்கள். அதனால்தான் 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம்' என்று சொல்லி வைத்திருக்கிறார்கள். அதேநேரத்தில் புத்திர ஸ்தானம் என்றும், பூர்வ புண்ணிய ஸ்தானம் என்றும் சொல்லப்படும் 5ஆம் இடத்திற்கும் அதிபதியானவரல்லவா குருபகவான். எனவே அவர் 3இல் வரும்பொழுது அவ்வளவு நல்லதல்ல. பிள்ளைகளின் முன்னேற்றத்தில் சில தடைகள் வரலாம். ஆனால் எல்லாம் சனிப்பெயர்ச்சிக்குப் பிறகு சரியாகி விடும்.

அதேநேரத்தில் குருப்பெயர்ச்சியை மட்டும் கணக்கில் வைத்துக் கொள்ளாமல், உங்கள் இராசிக்கு மற்ற இடங்களிலுள்ள கிரகங்களின் அமைப்புகளையும், சஞ்சாரப்படி உலாவரும் கிரகத்தையும், சுயஜாதகத்தின்படி நடைபெறும் திசாபுத்தி நன்மை தரும் திசைதானா? என்பதை அறிந்து கணக்கிட்டு அதற்குரிய சிறப்புப் பரிகாரங்களை யோகபலம் பெற்ற நாளில் செய்வதன் மூலம் அபரிமிதமான பலன்களை வரவழைத்துக்கொள்ள இயலும்.

குதூகலம் தரும் குருப்பெயர்ச்சி!

குருபகவான் உங்கள் இராசிப்படி தற்பொழுது 3ஆம் இடத்தில் வந்திருக்கிறார். 3ஆம் இடம் என்பது சகோதர ஸ்தானம், தைரிய ஸ்தானம், வீரபராக்கிரம ஸ்தானம், பலவித திறமைகளையும் வெளிக்கொணரும் ஸ்தானம் என்றெல்லாம் கூறப்படுகிறது. உங்களைப் பொறுத்தவரை அஷ்டம ஸ்தானத்திற்கும் குரு அதிபதியாக விளங்குவதால், அவர் 3இல் சஞ்சரிக்கும் பொழுது முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்க சந்தர்ப்பங்கள் கைகூடிவரும்.

பொன்னவன் மூன்றில் நின்றால்
பொறுப்புகள் அதிகரிக்கும்!
எண்ணிய காரியங்கள்
எல்லாமே வெற்றியாகும்!
தன்னலம் மாறிப் போகும்!
தைரியம் வந்து சேரும்!
மண்ணிலே பதவி வாய்க்கும்!
மகத்தான வாழ்வும் கூடும்!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது. அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரித்து வாழ்வில் வெற்றியை வரவழைத்துக் கொள்ளப் போகிறீர்கள். பொதுநலத்தில் ஈடுபாடும், நல்ல வாய்ப்பும், பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும். பணத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். வழக்குகள் சாதகமாக முடியும். எதிரிகளின் சூழ்ச்சிகள் வெளிப்படும். பணியிடத்தில் உங்கள் திறமையைப் பார்த்து மேலதிகாரிகள் ஆச்சரியப்படுவர். எதிர்காலத்தை ஏற்றம் தரும் விதத்தில் அமைத்துக் கொள்ள எடுத்த முயற்சிகள் ஒவ்வொன்றாக கைகூடும்.

குரு பார்வை கொடுக்கும் பலன்கள்!

எத்தனை கிரகங்களின் பார்வை பலன் கொடுத்தாலும், குருவின் பார்வைக்கு மட்டும் தோஷங்களை நிவர்த்தி செய்யும் ஆற்றல் உண்டு என்பது ஜோதிட விதி. வியாழனின் பார்வை வெற்றிகளைக் குவிக்கும் என்பார்கள். அந்தப் பார்வை 7ஆம் இடத்திலும், 9ஆம் இடத்திலும், 11ஆம் இடத்திலும் பதிவாகிறது. இந்த 3 விதமான பார்வைகளாலும் முயற்சியில் ஏற்பட்ட குறுக்கீடுகள் அகன்று வெற்றிக் கனியை விரைவில் எட்டிப் பிடிக்கப் போகிறீர்கள்.

'ஏழினைக் குருதான் பார்த்தால் இல்லறம் சிறப்பாய் வாய்க்கும்' என்பார்கள். எனவே திருமண வாழ்க்கையை ஏற்கக் கூடிய காலத்தில் இருப்பவர்களுக்கு அந்த யோகம் கைகூடி வரும். மணமாலை சூடும் வாய்ப்பும், மங்கல ஓசை இல்லத்தில் கேட்கும் வாய்ப்பும் கைகூடிவரும் நேரமிது. உடன் பிறப்புகளோடு ஏற்பட்ட மனஸ்தாபங்கள் மாறும். இல்லறத்தில் இணைந்த தம்பதியர்களுக்குள் இருந்த கருத்து வேறுபாடு மாறும். இதுவரை அதிகம் முயற்சி செய்தும் முடிவடையாத காரியங்கள், இப்பொழுது எளிதில் முடிவடையும். உறவினர் பகை மாறி உங்களோடு வந்து ஒட்டிக் கொள்வர். விலகிச் சென்ற பணியாளர்கள் விரும்பி வந்துசேருவர். வழக்குகளில் திசைதிருப்பம் ஏற்படும். வாய்தாக்கள் ஓயும்.

9ஆம் இடத்தைக் குரு பார்ப்பது மிக மிக யோகமாகும். ஒளிமயமான எதிர்காலத்திற்கு உத்தரவாதம் தரும் விதத்தில் பலவிதச் செயல்கள் நடைபெறும். குறிப்பாக தந்தை வழி உறவில் இதுவரை இருந்த விரிசல்கள் அகலும். விலகியிருந்த பெற்றோர்கள் வீடு தேடி வந்து சேருவர். பங்காளிப் பகை மாறும். பூர்வீக சொத்துகளில் முறையான பங்கு கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் மனம்போல் மாற்றமும், ஏற்றமும் உருவாகும். குலதெய்வ வழிபாட்டில் அக்கறை காட்டுவது நல்லது. பிதுர்ரார்ஜித ஸ்தானத்தை குரு பார்க்கும் பொழுது முன்னோர் வழிபாட்டையும், குலதெய்வ வழிபாட்டையும் முறையாகச் செய்து கொண்டால்தான் கண்ணேறு படாமலும், கவலையில்லாமலும் வாழலாம். புண்ணிய ஸ்தலங்களுக்குச் செல்லும் யோகமும் உண்டு.

இதுபோன்ற காலங்களில் காசி முதல் இராமேஸ்வரம் வரை சென்று வரும் வாய்ப்பு ஒரு சிலருக்கு கிடைக்கும். மன அழுத்தங்கள் விலகி மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற எண்ணம் உருவாகும். சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும். செல்வாக்கு பெற்றவர்களின் பட்டியலின் பெயரில் உங்கள் பெயரும் இடம்பெறும்.

'பதினொன்றை குருதான் பார்த்தால் பணவரவு அதிகரிக்கும்' என்பது ஜோதிட விதி. எனவே குருவின் பார்வை பலத்தால் மிகப்பெரிய முன்னேற்றங்கள் வந்துசேரப் போகிறது. அதிலும் சகாய ஸ்தானத்தில் இருந்து குரு பார்ப்பதால் இதுவரை செய்த முயற்சிகளில் இருந்த இடையூறுகள் அகலும். பணிபுரியும் இடத்தில் சந்தித்து வந்த பிரச்சினைகள் அகலும். சக பணியாளர்கள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். உத்தியோகத்தில் இருந்து வி.ஆர்.எஸ். பெற்றுக் கொண்டு வெளியில் வந்து சுய தொழில் செய்யும் யோகமும் ஒருசிலருக்கு உண்டு.

குருவின் அதிசாரம்!

14.2.2018 முதல் 11.4.2018 வரை இக்காலத்தில் குரு அதிசாரமாக விருச்சிக இராசிக்குச் செல்கிறார். இப்பொழுது அர்த்தாஷ்டம குருவின் ஆதிக்கம் உங்களுக்கு நடைபெறப் போகிறது. எனவே அதிசார காலத்தில் கொஞ்சம் கூடுதல் விழிப்புணர்ச்சியோடு செயற்பட வேண்டும். உடல்நல தொல்லைகள் அதிகரிக்கும். உறவினர்கள், உங்கள் குணமறிந்து நடந்து கொள்வார்களா? என்பது சந்தேகம்தான். வேலைப்பளு கூடும். மற்றவர்களுக்கு பணப் பொறுப்புகள் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது. பிறருடைய அழைப்பை நம்பி, தூர தேசத்திற்கு சென்றவர்கள் வேலை கிடைக்காமல் மீண்டும் தாய்நாடு திரும்ப நேரிடலாம். இதுபோன்ற காலங்களில் குருவை வழிபடுவதோடு சிறப்புப் பரிகாரங்களையும் சுயஜாதக அடிப்படையில் செய்து கொள்வது நல்லது.

அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!

7.3.2018 முதல் 4.7.2018 வரை குரு வக்ர இயக்கத்தில் இருக்கிறார். உங்கள் இராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியான குரு பகவான் வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது, சிக்கல்களும், சிரமங்களும் வரத்தான் செய்யும். என்றாலும் தைரியமும், தன்னம்பிக்கையும் மிக்க நீங்கள் அவற்றை எதிர்கொள்வீர்கள். பொதுவாழ்வில் வீண் பழிகள் வந்து சேரலாம். கட்டுக் கடங்காத விரயத்தால் கவலைப்படுவீர்கள். பற்றாக்குறையின் காரணமாக கடன்வாங்கும் சூழ்நிலை கூட ஒருசிலருக்கு உருவாகும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. பொதுவாக குருவை வழிபடுவதன் மூலம் குடும்பத்தில் அமைதி காண இயலும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

சிம்ம இராசியில் பிறந்த பெண்களுக்கு, குருப்பெயர்ச்சிக்கு பிறகு ஓரளவு நன்மைகள் வந்தாலும், சனிப்பெயர்ச்சிக்குப் பின்னரே சாதகமான பலன்களை அதிகம் எதிர்பார்க்க முடியும். அதேநேரத்தில் குரு அதிசாரமாக வரும்பொழுது, பெப்ரவரி 2018இல் ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கும். மருத்துவச் செலவு கூடும். கோபத்தைக் குறைத்துக் கொண்டு செயற்படுவதன் மூலம் பல நல்ல வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்ளலாம். குருவின் பார்வை பலத்தால், வீடு- மனை வாங்கும் யோகம் உண்டு. பழைய வாகனங்களைப் புதுப்பிப்பதற்கான சந்தர்ப்பங்கள் கைகூடி வரும். கணவன்-மனைவி உறவில் சச்சரவும், சமாதானமும் உருவாகும். பெண் பிள்ளைகளின் சுபச் சடங்குகள் நடைபெற வாய்ப்பு உண்டு. தாய் வழியில் தனலாபம் கிடைக்கும். உத்தியோக முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றினால், உங்கள் குடும்ப முன்னேற்றம் கூடும். பிரதோஷ வழிபாட்டிலும் கவனம் செலுத்துவது நல்லது.

செல்வம் தரும் சிறப்பு வழிபாடு!

உங்கள் இராசிநாதன் சூரியன் என்பதால், ஞாயிற்றுக்கிழமைகளில் சிவனையும், அம்பிகையையும் முறையாக வழிபடுவது நல்லது. அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால், சனிக்கிழமைதோறும் அனுமன் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். சிறப்பு வழிபாடாக காரைக்குடி அருகிலுள்ள கொற்றவாளஸ்வரர்-திருநெல்லையம்மனை வழிபட்டு வந்தால் சுற்றமும், நட்பும் பாராட்டும் விதத்தில் வாழ்க்கை அமையும்.

(தொடரும்)

கலைத் தரிசனம்



பல்துறை ஆளுமைகொண்ட சிற்பக் கலைஞர்

கலாபூஷணம் செல்லப்பா சண்முகநாதன்

அவர்களுடனான சந்திப்பு

1953 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 4 ஆம் திகதி மயிலிட்டியில் பிறந்த இவர், பாடசாலைக் காலத்தில் கலை மீது ஆர்வம் கொண்டு ஓவியம் வரைதல், கவிதை எழுதுதல், நாடகம் நடித்தல், கவியரங்கம், பட்டிமன்றம் போன்ற துறைகளில் ஈடுபாடு காட்டினார். இதன் காரணமாக இன்று சிற்பக் கலைஞராக, ஓவியராக, நடிகராக, நெறியாளராக, அண்ணாவி யாராக எனப் பல்துறை ஆளுமைகளில் சிறந்து விளங்குகின்றார். 1980 இல் மயிலிட்டி முனையன் வளவு முருகையன் ஆலய சித்திரப் பெருந் தேருக்குச் செதுக்கப்பட்ட மகரயாழிச் சிற்பம் பெரிதும் பலராலும் பாராட்டைப் பெற்றது. 2013 ஆம் ஆண்டு கலாபூஷண விருதையும் பெற்றார். கலாலயா சிற்பாலயக்கூடத்தை உருவாக்கி பல சிற்பப் படைப்புக்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார். கலாபூஷணம் செல்லப்பா சண்முகநாதன் அவர்கள் தன் கலைப்பணி பற்றி மனமறிந்து கூறியவை வலம்புரியில் பிரசுரமாகிறது.

❖ தாங்கள் கலைத் துறைக்குள் எவ்வாறு கால்பதித்தீர்கள்?

யாழ்ப்பாணம் அல்லது வட இலங்கை இந்துக்கலை வரலாற்றில் பெரும் செல்வாக்குச் செலுத்தி நிற்கும் மகா சில்பி விலாட சங்கிலித்த வண்டை ஆச் சாரிக் குருக்கள் தம்மரபினில் அப்புக் குட்டி செல்லப்பா (பிள்ளையார் ஆச்சாரியார்) அவர்களின் புத்திரனாக மயிலிட்டி வடக்கு காங்கேசன் துறையில் பிறந்தேன். மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும் காங்கேசன்துறை மகா வித்தியாலயத்தில் உயர் நிலைக் கல் வியையும் கற்றேன். பாடசாலைக் காலங்களில் கலைகள் மீது பேரவாக் கொண்டு கவிதை எழுதுதல், ஓவியங்கள் வரைதல், நாடகங்கள் நடித்தல், கவியரங்கம், பட்டி மன்றங்களில் பங்கெடுத்தல், பண்ணோடு பாவிசைத்தல் போன்ற செயற்பாடுகள் இலக்கியத் துறைக்குள் என்னை பிரவேசிக்கச் செய்தது. அத்தோடு ஆசிரியர்கள் என் மீது காட்டிய அக்கறையும் போட்டி நிகழ்வுகளில் பங்கெடுத்து வெற்றியீட்டிய சான்றிதழ்களும் எனக்கு மேலும் வலுச்சேர்த்தன.

எனது தந்தையார் பிள்ளையார் ஆச்சாரியார், பெரிய தந்தையார் கனகசபை ஆச்சாரியார் ஆகியோர் சிறந்த சிற்பக் கலைஞர்களாக அக்காலத்தில் பணிபுரிந்தமையால் அவர்களுடன் இணைந்து சிற்பங்கள் செதுக்கும் வாய்ப்பும் கிடைத் தது. இதனால் பாடசாலைக் காலத்திலேயே சிற்பத்துறையும் இலக்கியப்பகுதியும் எனது விருப்புக்குரிய துறைகளாகி அந்தத் துறைகளிலேயே எனது பயணத்தை ஆரம்பித்தேன்.

❖ சிற்பக் கலையை எப்படிக் கற்றீர்கள்?

எனது பெரியதந்தையாரும் 1970 களில் பெரும் புகழ் பெற்று விளங்கியவருமான சிற்பக் கலைஞர் அமரர் முருகேசு கனக சபை ஆச்சாரியாரின் அரவணைப்பில் சிற்பக்கலையின் அரிச்சுவடியைப் பயின்றேன். இலங்கையின் தலைசிறந்த சிற்பிகளில் ஒருவரென்று திகழ்ந்த பேராசான் தந்த திட்ப நுட்பம் செறிந்ததும் செம்மை கொண்டதுமாகிய உருவரை திறனும் செதுக்கும் திறனும் என்னிடம் படிந்தமையால் அப்பெரியவரின் ஆசியோடு சிற்பக் கலைக்குள் கால் வைத்தேன்.

தொடர்ந்து கனகசபை ஆச்சாரியாரின் மாணவனும் எனது மாமனாருமாகிய மயிலிட்டியூர் கலைஞர் திலகம் அமரர் சின்னத்துரை நவரத்தினம் அவர்களிடம் சிற்பக் கலையின் உச்சப் படிப்பறிவையும் சிற்பக்கலை வீச்சின் உயிர்த்துடிப்பையும் துறை போகக் கற்றேன். நானும் எனது குருநாதர் நவரத்தினமும் கனக சபை ஆச்சாரியாரிடம் கலைபயின்றவர்கள் என்பதை இவ்விடத்தில் பதிவுசெய்ய விரும்புகின்றேன்.

ஏராளமான கலைநயம் மிக்க காத்திரமான கலைப் படைப்புக்களைப்படைத்திருக்கின்றேன். இன்னும்பலபுதியபடைப்புக்களைஉருவாக்கிக் கொண்டிருக்கின்றேன்.

இதனைவிட அக்காலத்தில் தென்னிந்திய மண்ணிலிருந்து வருகை தந்து ஈழத்து இந்து ஆலயங்களில் தேர்ச் சிற்பக் கலையில் வித்துவம் காட்டி வடித் தெடுத்த சிற்பிகளான மேதாவி களும் எனது நட்புக்குப் பாத்திர மானவர்களுமான மாலை கண்டான் சோம இலட்சுமணன் ஸ்தபதி, மாயவரம் ச.ஏகாம்பரம் ஸ்தபதி, தியாகராஜன், சின்னத்தம்பி போன்



றோரின் அறிவுரைகளையும் சிற்ப நுட்பங்களையும் கேட்டறிந்து அவர்களின் மகா ரதங்களையும் உச்சியிலிருந்து உளர்ந்து செல்லும் சக்கரம் வரை ஆய்வு செய்து அதன் ஆழத்தையும் பகுத்துணர்ந்து கொண்டேன்.

ஈழத்துக் கலையுலகின் சிற்பக்கலை விற்பன்னர்கள் ஆறுமுகம் ஆச்சாரியார், க்லாகேசரி து.தம்பித்துரை, தேர்க் கலையரசு, ஆ. சீவரத்தினம், அமரசிங்கம் போன்ற ஜாம்ப வான்களின் அறிவுரையும் எமது சிற்பக்கலைக்கு வலுச்சேர்த்தது.

❖ தாங்கள் செதுக்கிய சிற்பங்கள் பற்றி?

எனது பதினைந்தாவது வயதில் முருகப்பெருமானுடைய உருவம் தாங்கிய விக்கிரகம் ஒன்றினை எனது முதற்படைப்பாக உருவாக்கினேன். தொடர்ந்து எனது குருவுடன் இணைந்து தச்சன் தோப்பு கைலாசவாகன பர்வத ஊர்தி (1975) (இலங் கையில் இரண்டாவதாக அமைக் கப்பட்ட ஊர்தி என்ற சிறப்பு) அடுத்து மயிலிட்டி முனையன் வளவு முருகையன் சித்திரத் திருத்தேர் யாழ்ப்பாண மாவட் டத்தில் மட்டுமன்றி முழு இலங்கைத் திருநாட்டிலும் கூட 1970-1990களில் பெரிதும் விதந்து பேசப்பட்டது.

மயிலிட்டி முருகன் சித்திரத் தேர் யாழ்ப்பாணத்துத் தேர்க் கலை மரபில் தலைசிறந்ததோர் கலைப்படைப்பாகத் திகழ்ந்தது. அந்நாளில் அதிகளவுமூலப்பொருட்களையும், கலைத்திறன் சார்ந்த நிர்மாணத்தினையும் புகுத்தி அன்றைய இந்திய சிற்பி களின் ரதங்களிற்கு இணை யாகப் படைத்தோம். ஆனால் காலத்தின் கொடுமையால் அத்ருத்தேர் அழிவுற்று அதன் எஞ்சிய சிறுதுகள்களையே தற்போது காணக்கூடியதாயுள்ளது. தொடர்ந்து 1984 இல் கரவெட்டி தச்சன்தோப்புப் பிள்ளையார் திருமஞ்சம் சிறந்த நிர்மாணத்திறனுடனும், கவர் திறனுடனும் படை த்தோம்.

நாட்டின் ஸ்திரமற்ற தன்மைகளால் இடப்பெயர்வுகளை சந்தித்து சொந்த இடம் விட்டு வன்னி மண் சென்று அங்கும் பல ஆலயங்களிற்கு சிற்பநிர்மாணங்களை படைத்து உச்சக் கட்ட படைப்பாக உப்பு நீரில் விளக்கெரியும் அற்புதத்தாய் வற் றாப்பளை கண்ணகை அம்பாள் ஆலய அழகுத் திருமஞ்சத்தை அழகும், நேர்த்தியும், சிறந்த கட்டுமானமும் கொண்ட கலைப் படைப்பாகப் படைத்தோம்.

இதனை விட சப்பரங்கள், நூற்றிற்கும் மேற்பட்ட வாகனங் கள், வேட்டையடைப்பு செல்வ விநாயகர் ஆலய சித்திரத்தேர் பந்தல் அலங்கார மணவறைகள், சிகரங்கள் என பல கலை நயம் மிக்க படைப்புகளை படைத்திருக்கின்றோம்.

நீர்வேலியில் எமது கலாலயாவிலிருந்து அழகான தெய் வீக வாகனங்களை உருவாக்கி அனுப்பி கொண்டிருக்கின்றோம்.

என்னோடு தோளோடு தோள் நின்று உழைக்கும் எனது இளவலும் சிற்பக்கலை விற்பன் னனுமாகிய திரு. செல்லப்பா சிவரத்தினசிங்கம் உயிர்ச் சிற்பக் கலைக்கு வலுச்சேர்க்கின்றார்.

❖ தாங்கள் செதுக்கிய சிற்பங்களில் அதிகம் பாராட்டப்பட்ட சிற்பம் என்றால் எதனைக் குறிப்பிடுவீர்கள்...?

ஏராளமானவற்றைக் குறிப்பிட லாம். இருந்தாலும் 1980 இல் உருவாக்கப்பட்ட மயிலிட்டி முனையன் வளவு முருகையன் ஆலய சித்திரப் பெருந்தேருக்குச் செதுக்கப்பட்ட மகரயாழிச் சிற்பம் பெரிதும் பாராட்டப்பட்டது. இன்று அத்தேர் அழிவுற்ற நிலையில் அதிலிருந்த பல சிற்பங்கள் மீட் கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டு ள்ளன. அடுத்து வற்றாப்பளை மஞ்ச சிற்பங்களையும் குறிப்பிடலாம்.

❖ தங்களின் சிற்பக் கலைக்கூடம் பற்றி...

மயிலிட்டிகலைமகள்வித்தியாலயத்திற்கு அருகாமையில் எமது இல்லத்தில் எனது குருநாதர் திரு. சி.நவரத்தினம் தலைமையில் "கனகசபை சிற்பாலயம்" என்ற பெயருடன் எங்கள் சிற்பக்கலைக்கூடம் இயங்கி வந்தது. பின்பு இடப்பெயர்வுகளால் இடங்கள் பல மாறிச் சென்ற இடத்திலெல்லாம் ஆலயங்களுக்குத் தேவையான சிற்பங்கள், வாகனங்கள் போன்றவற்றைச்செதுக்கிக்கொடுத்துள்ளோம். தற்போது நீர்வேலியில் "கலாலயா" என்ற பெயரில் எமது சிற்பாலயம் பல சிற்ப படைப்புக்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது.

❖ சிற்பக்கலையின் போக்கு எப்படி இருக்கின்றது...?

சிற்பக்கலை முன்னைய எமது காலத்தை விட தற்போது விரிந்து பரந்து காட்சியளிக்கின்றது. ஏராளமான கலைஞர்கள் உருவெடுத்திருக்கிறார்கள். இருப்பினும் எமது அக்கால சிற்பக் கலைக்கும் தற்கால சிற்பக் கலைக்கும் இடையிலான வேறுபாட்டை உய்த்துணர்ந்து பார்த்தால் சிற்பக்கலை இன்னும் சிறிது காலங்களில் எத்தகைய கலையாய் மாறுமோ என்பதில் ஐயப்பாடு எழுகின்றது. என்றாலும் சிற்பக் கலையின் வரன்முறை மரபு மாறாத கலைஞர்களும் இப்போதும் வளர்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள்.

❖ தங்களின் கவிதை ஆக்கங்கள் பற்றி...

படிக்கும்காலங்களில் கவிதை இலக்கியத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டவன். முதலாவதாக மணமக்களை வாழ்த்தி மங்கல வாழ்த்துப்பாக்கள் எழுதிப் பாடியிருக்கிறேன். அதன் பின் ஆலய குடமுழுக்கு விழாக்கள், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இராஜகோபுரம், சித்திரத்தேர் போன்றவற்றை வாழ்த்தி வாழ்த்துப்பாக்களும் அடுத்து இலக்கண அமைவிற்கு தகுந்தாற்போல் நூற்றுக்கும் மேலான கல்வெட்டுக்களையும் (நினைவுமலர்) எழுதியுள்ளேன். பல ஆலயங்களுக்குகும்பாபிஷேக சிறப்பு மலர்களையும் வெள்ளோட்ட விழாவுக்கான சிறப்பு மலர்களையும் உருவாக்கியுள்ளேன்.

❖ தங்களின் நாடகம் / கூத்துக்கள் பற்றி...

பாடசாலைக் காலத்தில் பண்ணிசை, நாடகம் போன்ற துறைகளில் ஆர்வம் கொண்டவனாக இருந்தேன். இதுவே பிற்காலத்தில் பண்ணோடு இசை பாடவும் காத்தவராயன் போன்ற நாடகங்களை நெறியாழ்கை செய்யவும் வழிகோலியது. இத்துடன் வன்னிப்பெருநிலப்பரப்பில் வில்லிசைகளை எழுதியும் நெறியாழ்கை செய்தும் இருக்கின்றேன்.

❖ பட்டங்கள் விருதுகள் பற்றி...

வன்னேரி ஐயனார் ஆலயம்- சிற்பசிகாமணி

மல்லாவி நுண்கலை மன்றம்- முதுபெரும் கலைஞர்

வற்றாப்பளை கண்ணகி அம்பாள்- சிற்பக்கிரீடம்

அகில இலங்கை இந்து கலாசார அமைச்சு- கலாபூஷண விருது (2013)

❖ இளம் தலைமுறையினருக்கு எதனைக் கூற விரும்புகிறீர்கள்?

சிற்பக் கலை என்பது தெய்வீகக் கலை. இதனைத் துறைபோகக் கற்று அமைப்பு, அளவுத் திட்டம், நேர்த்தி, கவர்திறன், சிறந்த கட்டுமானம் மிக்க படைப்புக்களாக உருவாக்குங்கள் என்கின்ற செய்தியை இவ்விடத்தில் பகிர்ந்து கொள்கின்றேன்.

நேர்காணல்:
ஜெயம் ஜெகன்

பொதுவாழ்வென்பது புயல் வீசும் கடலுக்கு ஒப்பானது. அதை கடந்து குறிப்பிட்ட இடத்தை அடைவதில் இன்பம் இருக்கிறது. – எம்.என்.ராய்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

தமிழ் மக்கள் பேரவைக்கு ஓர் அன்பு மடல்

தமிழ் மக்கள் பேரவையினருக்கு அன்பு வணக்கம்.

ஈழத் தமிழ் மக்களின் கையறுநிலையில் காலத்தின் தேவை கருதி எழுகை பெற்ற அமைப்பாக தமிழ் மக்கள் பேரவையை மக்கள் பார்க்கின்றனர்.

அரசியல் என்ற எல்லைகளைத் தாண்டி தமிழ் மக்களின் அபிலாசைகளை முன்னிலைப் படுத்துகின்ற ஒரு மக்கள் இயக்கமாக தமிழ் மக்கள் பேரவை தனது பணியை முன்னெடுத்துச் செல்வது போற்றுதற்குரியது.

இன்றைய சூழ்நிலையில் நேர்மையான அரசியல் தலைமையே நமக்குத் தேவையானதாகும். அந்த நேர்மையான அரசியல் தலைமை என்பது உருவாக்கப்பட வேண்டும். அந்த உருவாக்கம் இருப்பதை ஒழுங்குபடுத்துவதனூடாகவோ அன்றி புதியதாகவோ அமையலாம்.

எதுவாயினும் இன்றைய சூழ்நிலையில் ஒற்றுமை என்பதே தமிழ் மக்களின் பலமாக இருக்க முடியும். இந்த ஒற்றுமையை ஏற்படுத்துகின்ற ஒரே அமைப்பாக தமிழ் மக்கள் பேரவையை குறிப்பிடலாம்.

பொதுவில் அரசியல் புலத்தில்; அரசியல் பலத்தில் தம் வாழ்வியலை நடத்த நினைப்பவர்கள் தமிழ் மக்கள் பேரவை போன்ற மக்கள் இயக்கங்களை எதிர்க்கவே செய்வர்.

அதற்காக ஒட்டுமொத்த அரசியல் தரப்புக்களும் மக்கள் இயக்கங்களை எதிர்க்கும் என்று கூறுவதும் ஏற்புடையதன்று.

எதுவாயினும் மிகக் கொடும் போர் நடத்தி, தமிழ் இனத்தை அழிக்கும் வகையில் வதை செய்த நிலையில் எங்களின் இருப்பு; எங்களின் உரிமை; எங்களின் எதிர்காலம் தொடர்பில் சிந்தியாமல் இருப்பதென்பது தமிழராக வாழ விருப்பமற்றிருக்கும் போதே சாத்தியமாகும்.

மற்றும்படி எங்கள் இனம் வாழவேண்டும். எங்கள் எதிர்காலச் சந்ததி நாம் பட்ட துன்ப துயரங்களை அனுபவிக்காமல் நிம்மதியாக வாழ வேண்டும் என்று யார் நினைத்தாலும் அவர்கள் நிச்சயம் தமிழினத்தின் எதிர்காலம் பற்றி, தமிழினத்தை ஆட்சியாளர்கள் எப்படி ஏமாற்றுகின்றனர் என்பது பற்றி, தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காக தமிழ் அரசியல் தலைமைகளை எங்ஙனம் பயன்படுத்துகின்றனர் என்பது பற்றி அறியாமல் – தெரியாமல் – ஆய்வு செய்யாமல் – தேடலில் ஈடுபடாமல் இருக்க முடியாது.

அவ்வாறான சூழ்நிலையில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது மக்கள் இயக்கமாகிய தமிழ் மக்கள் பேரவையின் கடமையாகும். இப்பணியை பேரவை ஆரம்பித்திருப்பது உண்மையில் காலம் உணர்ந்த செயல்.

நாம் இங்கு மக்கள் என்று கூறுவது தமிழ் மக்களை மட்டுமல்ல, மாறாக சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களையும் உள்ளடக்கியே மக்கள் என்ற பதத்தை கூறுகின்றோம்.

அந்த வகையில் தமிழ் மக்களின் நிலைமை தொடர்பில் சிங்கள மக்களிடம் ஒரு தெளிவை; விழிப்பை ஏற்படுத்துவதில் தமிழ் மக்கள் பேரவை ஈடுபட வேண்டும்.

இதை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உள்ள சிங்கள மாணவர்களில் இருந்து ஆரம்பிப்பது பொருத்தமானது.

தமிழர் தாயகத்தில் இருக்கக்கூடிய சிங்கள மாணவர்களிடம் ஒரு புரிதலை ஏற்படுத்துவோமாக இருந்தால், அது நிச்சயம் தென்பகுதியில் நிறைந்த மாற்றத்தை ஏற்படுத்தும்.

ஆகையால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிங்கள மாணவர்களுக்கு எங்கள் நிலைமையை புரிய வைக்கும் செயலை ஆரம்பியுங்கள்.

கூடவே ஒட்டுமொத்த தமிழ் அரசியல்வாதிகளையும் அழைத்து தமிழ் மக்களின் நிலை பற்றி ஆராயுங்கள். இவை அனைத்தும் தமிழ் மக்களுக்குப் பலமாக அமையும்.

புலித்தேவனும் நடேசனும் உயிரிழந்துவிட்டனர்!

ஜெகத் ஜெயசூரிய தகவல்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கிய தலைவர்களாக செயற்பட்ட புலித்தேவன் மற்றும் நடேசன் ஆகியோர் உயிரிழந்து விட்டார்கள் என முன்னாள் இராணுவத்தளபதி ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

அத்துடன், உயிரிழந்த அவர்களினது உடலங்கள் அடையாளம் காணப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

பிரேசிலுக்கான இலங்கை தூதுவராக இருந்த ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவிற்கு எதிராக அந்நாட்டில் யுத்தக் குற்றச்சாட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், பிரேசிலில் இருந்து நாடு திரும்பியுள்ள அவர் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே இதனைக் கூறியுள்ளார்.

புலிகளின் திருகோணமலைத் தளபதியாக இருந்த தனது கணவன் இராணுவத்திடம் சரணடைந்ததாகவும், அவர் சென்றதற்கு தான் சாட்சியாக இருப்பதாகவும் வடமாகாண அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் கூறுகின்றார்.

இப்போதும் அவர் கணவனை தேடிக் கொண்டிருக்கின்றார். அவருக்கு என்ன நடந்தது என்பதை நீங்கள் அறிவீர்களா?" என அந்த ஊடகம் கேள்வியெழுப்பியிருந்தது.

இதற்கு பதிலளித்து பேசிய அவர், யார் அவர்? புலித்தேவனா? அவர் ஒருபோதும் சரணடைந்திருக்கவில்லை. அவர் இறந்து விட்டார். நடேசனும் இறந்து விட்டார்.

அவர்களின் உடல்கள் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டது என நினைக்கின்றேன் என அவர் பதிலளித்திருந்தார். எனினும், நாங்கள் எழிலன் பற்றியே கேள்வியெழுப்புவதாக அந்த ஊடகம் குறிப்பிட்டிருந்தது.

இதனையடுத்து, மீண்டும் பதிலளித்து பேசிய ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய, எழிலனுடன் அனந்தி இருந்திருபபாராக இருந்திருந்தால் அவர் எங்கே இருக்கின்றார் என்பதை திருமதி அனந்தி சசிதரன் அறிந்திருக்க வேண்டும்.

எனினும், விபரங்கள் குறித்து நான் இப்போதும் அறியவில்லை. வெள்ளைக் கொடியுடன் அவர் வந்ததாக கூறுகின்றார்.

எவ்வாறாயினும், சரணடைந்த அனைவரும் யாரால் புனர்வாழ்வளிக்கப்பட்டார்கள் என்பதற்கான பட்டியலில் இருக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

பிரசன்ன ரணவீர நிதி மோசடி விசாரணைப் பிரிவில் ஆஜர்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணவீர நிதி மோசடி விசாரணைப் பிரிவின் முன்னிலையில் ஆஜராகியுள்ளார்.

வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்காகவே அவர் நேற்று நிதி மோசடி விசாரணைப் பிரிவில் ஆஜராகியுளளார்.

களனி பிரதேச சபையின் தலைவராக இருந்த காலப் பகுதியில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல் தொடர்பிலேயே குறித்த வாக்குமூலம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கிரிபத்கொட பகுதியில் அரசுக்கு சொந்தமான 80 பேர்ச்சஸ் காணிகளை சட்டரீதியற்ற முறையில் ஆவணம் தயாரித்து விற்றதாகவும் அதில் 2 பேர்ச்சஸ் காணிகளை அவரது உறவினர் ஒருவர் கொள்வனவு செய்துள்ளதாகவும் பிரசன்ன ரணவீர மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

பிச்சைக்காரர்களிடமும் வரி அறவிடும் அரசு– ஜே.வி.பி

நிலையான பொருளாதார கொள்கை ஒன்று இல்லாத காரணத்தினாலேயே மக்களிடம் அதிக வரிகளை அறவிடும் வகையில் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. பிச்சைக்காரர்களிடமும் வரி அறவிடும் நிலையில் அரசாங்கம் பயணிப்பதாக சாடியுள்ள மக்கள் விடுதலை முன்னணி, மக்களின் வரிகளிலேயே அமைச்சர்கள் ஆடம்பர வாழ்க்கையை வாழ்கின்றதாகவும் குற்றம் சுமத்தியுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் செய்தியாளர் சந்திப்பின் போதே பாராளுமன்ற உறுப்பினர் பிலம் ரத்நாயக மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (செ-11)

அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

திருமண உறுதி (நிச்சயதார்த்தம்)

திருமண உறுதிச் சடங்கை நிச்சயதார்த்தம் என்று வடமொழியில் சொல்கிறார்கள். காலப்போக்கில் நிச்சயதார்த்தம் என்ற சொல்லே நிலைத்துவிட்டது.

மணமக்களை சார்ந்த இரு வீட்டாரும் சான்றோர்களையும் சுற்றத்தார்களையும் அவையில் கூட்டி மணநாளைக் குறித்து ஒப்புதல் செய்து திருமணத்தை உறுதி செய்வதாகும். (தொடரும்)

சத்திய தரிசனம்

ஒற்றுமையாக இருப்போம்

❖ வயதாகிவிட்டது என்ற உணர்வையும், அதனால் நம்மால் ஏதும் செய்ய முடியவில்லையே என்ற சோர்வையும் விட்டுத் தள்ளுங்கள். நடந்து போனதை எண்ணி மனச்சுமையை வளர்த்துக் கொள்ளாதீர்கள். இருப்பதை உற்சாத்துடன் ஏற்றுக் கொள்ளுங்கள். செய்யும் செயலில் உங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.

❖ பிறருக்கு உதவி செய்வதில் தான் உண்மையான மகிழ்ச்சி இருக்கிறது என்ற உண்மையை எப்போதும் நினைவில் வைத்துக் கொளளுங்கள். பொறாமையால் மனம் புழுங்கினால் அந்த இடம் நரகம். நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்ளுங்கள். நல்ல எண்ணங்கள் நம் மனதில் தெய்வீக ஆற்றலை உண்டாக்குகின்றன.

❖ உலக சம்பந்தமான பெயருக்கும் புகழுக்கும் கௌரவத்திற்கும் ஆசைப்பட்டு உங்களுடைய நாணயத்தைத் துறக்காதீர்கள். ஒற்றுமையையும், ஒன்றாக உழைக்கும் மனப்பான்மையையும் வளர்த்துக் கொள்ளுங்கள்.

❖ தூய சிந்தனையாக, மனசாட்சியாக நம் இதயத்தில் இருப்பவனே. இறைவன் அவரை தேடி ஓட வேண்டிய அவசியம் இல்லை.

❖ உடல் நோய்க்கு பல மருந்துகள் உண்டு. ஆனால், உள்ள நோய்க்கு தன்னலமற்ற சேவையே மருந்து.

திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

எப்பேர்ப்பட்ட பேறு இது? என்றெண்ணிப் பேருவகை கொண்டான். காலம் கனிய களிப்புடன் காத்திருக்கத் தொடங்கினான்.

அந்தப்புரத்திலோ, தனக்கு நாயகனாக வரப்போகிறவன் அந்த நாராயணனே என்பதை அறியாத அலர்மேல்மங்கை தன் வயதொத்த தோழிகளுடன் அம்மானை ஆடிக் கொண்டிருந்தாள்.

விதிக்கப்பட்ட விதிப்படியும் கொடுக்கப்பட்ட வாக்குப்படியும் நிகழ்ச்சிகள் நிறைவேற வேண்டுமல்லவா?

நிகழ்ச்சிகள் நிகழத் தொடங்கின.

சேஷாசலத்தில் ஸ்ரீநிவாசனும் வகுளாதேவியும் வாழ்ந்து கொண்டிருந்த இல்லம் வனப்பு மிகுந்த காணப்பட்டது. (தொடரும்)

மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** கரிக்கட்டுக்குளத்திலும் **வவுனியா பிரதேசத்தில** வேளாங்குளம், மடுக்குளம், வேளாங்குளம் விமானப்படை ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில** மடுக்கரை பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

பொன்னம்பலம் ஆறுமுகம் ஞாபகார்த்த உள்ளூர் ரீதியிலான உதைபந்தாட்டம்

அரியாலை ச.ச.நிலை அணி

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 65ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு அமரர் பொன்னம்பலம் ஆறுமுகம் ஞாபகார்த்தமாக அன்னாரது குடும்பத்தினரின் அனுசரணையில் உள்ளூர் ரீதியாக நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அரியாலை சனசமூக நிலைய அணிக்கும் அரியாலை திருமகள் சனசமூக அணிக்கும் இடையில் நடைபெற்ற விறுவிறுப்பான போட்டியில் கோல்கள் எதுவும் அடிக்கப்படாத நிலையில் தண்ட உதையின் அடிப்படையில் 4:3 என்ற புள்ளிகள் அடிப்படையிலும்,

இறுதிப் போட்டியில் அரியாலை அருணோதயா சனசமூக அணியை 4:0 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் வென்று அரியாலை சனசமூக நிலைய அணி சம்பியனாகியது. (க)

32 வருடங்களின் பின்னர் ஊர்காவற்றுறை மாட்டுச்சவாரி

பாம்பரிய கிராமிய விளையாட்டுகளில் ஒன்றான "மாட்டுச் சவாரி" போட்டி 32 வருடங்களின் பின்னர் யாழ். ஊர்காவற்றுறை பகுதியில் இடம் பெற்றது.

ஊர்காவற்றுறை - புதுவேலி மைதானத்தில் கடந்த 03.09.2017 நடைபெற்ற இந்தப் போட்டியில், 32 மாடுகள் சவாரியில் ஈடுபடுத்தப் பட்டிருந்ததுடன்,

அவை ஒவ்வொன்றும் சுமார் 10 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான பெறுமதியுடையவை எனவும் அவற்றின் உரிமையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். (க)

சம்பியனான ஆவரங்கால் மத்தி

ஈ.எஸ்.பி.நாகரத்தினம் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் புத்தூர் வளர்மதியை 3:1 என்ற நேர் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம். ஆட்ட நாயகனாக மத்தியின் அமைதி சிந்து தெரிவு செய்யப்பட்டார். (க)

சமநிலை தவிர்ப்பு உதையில் திக்கம் இளைஞர் கழகம் வெற்றி

மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் சுனாமியால் இறந்தவர்களினதும் கழகத்தின் மறைந்த வீரர்களினதும் நினைவாக நடத்தும் 09 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் கடந்த 03.09.2017 அன்று நடைபெற்ற ஆட்டத்தில் திக்கம் இளைஞர் கழகத்தை எதிர்த்து நவசக்தி அணி மோதியது.

இரு அணிகளும் 1-1 என்ற கோல் கணக்கில் முடிவடைந்தது. தண்டை உதை மூலம் திக்கம் இளைஞர் கழகம் 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரு அணிகள் சார்பாக கோல் போட்ட விபரம் திக்கம் இளைஞர் கழகம் சார்பாக அகிலன். நவசக்தி சார்பாக தனிதன். ஆட்டநாயகனாக நவசக்தி கோல் காப்பாளர் (சயந்தன்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (க)

மைலோவின் அனுசரணையில் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையில் அஞ்சலோட்டப் போட்டி முதல்முறையாக யாழில்

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் மைலோ அனுசரணையுடன் 2ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அகில இலங்கை பாடசாலைகள் அஞ்சலோட்டப் போட்டிகள் எதிர்வரும் 8ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை முதற்தடவையாக யாழ். துரையப்பா மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்வி அமைச்சும், இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுநர் சம்மேளனமும் இணைந்து நடத்துகின்ற இம்முறைப் போட்டித் தொடரில் நாடளாவிய ரீதியிலிருந்து 164 ஆண்கள் பாடசாலைகளும் 138 பெண்கள் பாடசாலைகளும் (302 பாடசாலைகள்) கலந்து கொள்ளவுள்ளன.

பாடசாலைகள் விளையாட்டுத்துறை வரலாற்றில் முக்கிய தொடராக 1984ஆம் ஆண்டுமுதல் நடத்தப்பட்டு வந்த இப்போட்டித் தொடர் தவிர்க்க முடியாத காரணத்தால் 2004ஆம் ஆண்டு கைவிடப்பட்டது. எனினும், கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசமின் முயற்சியால் கடந்த வருடம் மண்டியில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

இதன்படி பாடசாலை மாணவர்களுக்கிடையில் சமத்துவம், ஒன்றியாக வேலை செய்தல், சகோதரத்துவம், கூட்டுறவு, நல்லிணக்கம் ஆகியவற்றை ஏற்படுத்தும் நோக்கில் இம்முறை யாழ். மண்ணில் இப்போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

12, 14, 16, 18 மற்றும் 20 ஆகிய வயதுப் பிரிவுகளின் கீழ் ஆண், பெண் என இரு பாலாருக்கும் நடத்தப்படவுள்ள இம்முறை போட்டித் தொடரில் 38 அஞ்சலோட்டப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இதில் சுமார் 5,100 மாணவர்கள் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் 4X100, 4X200, 4X400 மற்றும் 4X800 வரையான அஞ்சலோட்டப் போட்டிகள் இடம்பெறவுள்ளதுடன், 12 வயதுக்குட்பட்ட வீரர்களுக்கான 4X50 அஞ்சலோட்டப் போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

இந்நிலையில், முதற்தடவையாக கலப்பு பாடசாலைகளுக்கான போட்டிகளை நடத்துவதற்கும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

இதில் வெற்றியீட்டும் அணிகளின் புள்ளிகளும் ஒட்டுமொத்த புள்ளிப் பட்டியலில் இணைத்துக் கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த தொடரின் ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அதில் பிரதம அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.இராதாகிருஷ்ணன் கலந்து கொள்ளவுள்ளார். அத்துடன் எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதி நாள் நிகழ்வின் பிரதம விருந்தினராக வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

நாவற்குழி சரஸ்வதி வி.கழக தாச்சிச் சுற்றுப் போட்டி

காளியம்பாள் சம்பியன்

நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்கழக தாச்சி சுற்றுப் போட்டியில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்று சம்பியனானது.

நாவற்குழி சனசமூக நிலையமும், விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்திய விளையாட்டு விழாவின் தாச்சிச்சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியும், பரிசளிப்பு விழாவும் கடந்த 03.09.2017 ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணியளவில் நாவற்குழியில் விளையாட்டுக்கழகத்தலைவர் செ.கிரிதரன் தலைமையில் இடம்பெற்றன.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டதுடன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத் தலைவர் செ.சண்முகலிங்கம், யாழ்.மாவட்ட தாச்சி நடுவர் சங்கத்தலைவர் செ.சுகிர்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பரபரப்பாக இடம்பெற்ற தாச்சி இறுதிப்போட்டியில் மானிப்பாய் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகமும், தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகமும் மோதின. இதில் 5:4 என்ற அடிப்படையில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்று சம்பியனானது. விருந்தினர்களால் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் கோப்பைகளும் வழங்கி வைக்கப்பட்டன. (க)

9 கிலோ கஞ்சாவுடன்...

குமுவினருக்கு புலனாய்வுத் தகவல் ஒன்று கிடைத்துள்ளது. அதனடிப்படையில் நேற்றைய தினம் அதிகாலை 2 மணியளவில் குறித்த பகுதிக்கு சென்ற சிவில் பாதுகாப்பு குழுவினர். குறித்த நபரை பிடித்ததுடன் கஞ்சாவையும் கைப்பற்றியுள்ளனர்.

பின்னர் உடனடியாக வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து அங்கு வந்த பொலிஸார். சந்தேக நபரை கைது செய்ததுடன் அவர் வைத்திருந்த கஞ்சாவையும் கைப்பற்றியுள்ளனர். 40 வயதுடைய நபரே மேற்படி சம்பவத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். (செ-9)

இராணுவத்தை...

உறுப்பினர்கள் வரை அனைவரது உரிமைகளும் இல்லாது செய்யப்பட்டு, அவர்களது பதவியுயர்வுகள் இல்லாது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள். அது தொடர்பில் இன்று எவரும் கதைப்பதில்லை. மகிந்த ராஜபக்ஷவை மின்சாரக் கதிரையிலிருந்து நாம் பாதுகாக்கிறோம் என்றால் இராணுவத்தினரை பாதுகாப்பதற்கு எவரும் எமக்கு கற்றுத்தர தேவையில்லை. ஆகவே இந்த விடயத்தில் சர்வதேசத்தை தலையீடு செய்ய நாம அனுமதிக்கப்போவது இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

வருமான வரி...

வரவுள்ளது.

தற்போது அறவிடப்படும், 10, 12, 15,20 மற்றும் 40 வீத வரிகள், எதிர்காலத்தில் 14, 28,40 என மூன்று வீதங்களில் மாத்திரம் அறவிடப்படும் என நிதியமைச்சுத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

வருடாந்தம் 5 லட்சம் ரூபாவாக இருந்த இருந்த தனி நபர் வருமான வரி 6 லட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி தனி வர்த்தகர் அல்லது தொழில் புரியும் நபர் ஒருவர் வருடாந்தம் 5 லட்சம் ரூபாயை வருமானமாகப் பெற்றால் அவருக்கு வரி விலக்கு அளிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

முரசறைந்து வெளியேற்ற...

காரைநகர் வெடியரசன் வீதியைச் சேர்ந்த ஏரம்பு ஞானேஸ்வரி என்ற பெண்மணி பணத் தேவையின் பொருட்டு தனது வீட்டை அவ்வூரைச் சேர்ந்த ஒருவரிடம் இரு வருட தவணை அடிப்படையில் அறுதி உறுதி எழுதி ஈடு வைத்தார். சுமார் மூன்று இலட்சம் ரூபாவிற்கு ஈடு வைக்கப்பட்டது.

உரிய காலத்தில் அந்த வீட்டை மீட்க முடியாத காரணத்தால் ஈடு பிடித்தவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர். நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் அந்த வீடு ஈடு பிடித்தவர்களுக்குச் சொந்தமானது.

இந்நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை மூதாட்டியின் வீட்டுக்கு பொலிஸார் சகிதம் வந்த நீதிமன்றப் பணியாளர்கள் வீட்டில் இருந்த பொருட்கள் அனைத்தையும் வெளியே. வீதியில் தூக்கி வைத்துவிட்டு அந்தப் பெண்மணியையும் வீட்டை விட்டு வெளியேற்றியிருந்தனர்.

அவர்கள் வரும்போது பானையில் சோறு அவிந்துகொண்டிருந்தது. அந்தப் பானையை அப்படியே தூக்கி வெளியே வைத்தனர் என மூதாட்டி கண்ணீர் மல்க கருத்து வெளியிட்டிருந்தார்.

மூதாட்டியின் நிலை தொடர்பாக சமூக வலைத்தளங்களும் இணைய, அச்சு ஊடகங்களும் செய்திகளை வெளியிட்டதன் அடிப்படையில் அவருக்கு உதவுவதற்கு பல தரப்பினரும் முன்வந்தனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காக மேஜர் இளமகள் என்ற மாவீரரைத் தந்த தாய் என்ற அடிப்படையில் அவர் மீது அனைவரின் பார்வையும் திரும்பியது.

இந்நிலையில், அவரது ஊரைச் சேர்ந்த வெளிநாட்டில் உள்ளவர்கள் சிலர் தாங்களாக முன்வந்து பணத்தை திரட்டி அனுப்பியதன் பயனாக ஈடு பிடித்தவர்களுக்கு 5 இலட்சத்து 26 ஆயிரம் ரூபா பணம் செலுத்தி அந்த வீடு மீண்டும் பெறப்பட்டு மூதாட்டியிடம் வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, காரைநகர் வேம்படியில் உள்ள பாரதி கலைக் கல்லூரியின் புலம்பெயர் தேசத்தில் உள்ள செயற்பாட்டாளரும் சமூக ஆர்வலருமான தம்பையா கருணாநிதி (பிகனடா) எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக சுமார் 2 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா நிதி சேர்க்கப்பட்டது.

மேலும், அவ்வூரைச் சேர்ந்த சிவகாமி நலன்புரி ஒன்றியத்தின் புலம்பெயர் செயற்பாட்டாளர்களின் முயற்சியால் 2 இலட்சத்து 96 ஆயிரம் ரூபா நிதி சேர்க்கப்பட்டது. இதன் மூலம் அந்தக் காணி தற்போது மீட்கப்பட்டுள்ளது.

நேற்று பிற்பகல் 6.00 மணியளவில் சட்டத்தரணி சாருஜா சிவநேசனின் காரைநகரில் உள்ள அலுவலகத்தில் காணி மீளவும் அந்த மூதாட்டியின் பெயரில் எழுதப்பட்டது.

இதன்போது ஈடு பிடித்தவர்கள், காணி உரிமையாளரான ஞானேஸ்வரி, பாரதி கலை மன்றம் மற்றும் சிவகாமி நலன்புரி ஒன்றியத்தின் பிரதிநிதிகள், அப்பிரதேச கிராம சேவையாளர், சமூர்த்தி உத்தியோகத்தர் மற்றும் நலன்விரும்பிகள் பிரசன்ன மாகியிருந்தனர்.

காணி எழுதப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் அனைவரும் மூதாட்டியை அழைத்துச் சென்று அவரிடம் வீட்டுத் திறப்பைக் கையளித்து, வீட்டில் குடியேற்றினர்.

தனது வீடு மீண்டும் கிடைப்பதற்கு உதவி செய்த மனிதநேயம் மிக்க அனைவருக்கும் அந்த மூதாட்டி கண்ணீர் மல்க நன்றி தெரிவித்ததுடன் தனது இறப்பு வரை அவர்களைத் தாம் மறக்கமாட்டார் எனவும் அவர் கூறினார். (செ-9)

சிகிச்சையில் கவன...

என்பவரே உயிரிழந்தவராவார். சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கடந்த யூலை மாதம் 21ஆம் திகதி அன்று மேற்படி பகுதியில் உள்ள தனது வீட்டில் தேநீர் போடுவதற்காக பிரஸ்தாப பெண் அடுப்பை மூட்டியுள்ளார்.

அடுப்பை மூட்டுவதற்கு முன்னதாக அடுப்பில் வைக்கப்பட்ட விறகிற்கு மண்ணெண்ணெய் ஊற்றியுள்ளார், மண்ணெண்ணெய் விறகு வழியாக வழிந்து குறித்த குடும்ப பெண்ணின் சட்டையிலும் பட்டுள்ளது. இதனை அறியாத அவர் அடுப்பை மூட்டும் போது, தீ அவரது சட்டையிலும் பற்றியுள்ளது.

தீப் பற்றிய நிலையில் மனைவியின் அலறல் சத்தம் கேட்டு ஓடிவந்த கணவன் உடனடியாகவே சட்டையை கிழித்து தீயை அணைத்துள்ளார். எனினும் மனைவி தீக் காயத்தின் எரிதலால் அவதிப்பட அதனை பார்த்த கணவன் தண்ணீரை ஊற்றியதுடன் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளார்.

அங்கு 38 நாட்கள் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் காய்ச்சல் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கடந்த 5 ஆம் திகதி பிரஸ்தாப பெண் மாற்றப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் எரிகாயம் மற்றும் காய்ச்சலால் அவதிப்பட்ட குறித்த குடும்ப பெண் சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் உயிரிழந்துள்ளார்.

எனினும் குறித்த பெண்ணின் மரணத்துக்கு சிகிச்சையளிப்பதில் ஏற்பட்ட கவனயீனமே காரணம் என மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி வைத்தியசாலையில் இருந்த போது எரிகாயங்களுக்கு உரிய சிகிச்சை வழங்கப்படாத காரணத்தால் காயங்கள் அழுகி கிருமி தொற்றுக்கு உள்ளாகியுள்ளன.

குறித்த குடும்ப பெண்ணிற்கு 25 சதவீதமே தீக்காயம் ஏற்பட்ட நிலையில் உரிய சிகிச்சை வழங்கப்பட்டிருந்தால் காப்பாற்றியிருக்க முடியும். அடி வயிற்றில் ஏற்பட்ட தீக்காயம் ஆறியுள்ள நிலையில், தொடையில் ஏற்பட்ட தீக்காயத்திற்கு பண்டச் போட்டு கட்டியுள்ளனர். இந்த பண்டச் 3 நாட்களுக்கு மேலாக மாற்றப்படாமல் இருந்துள்ளது. இதனாலேயே காயம் அழுகியுள்ளது.

இதனை அடுத்து சாதாரண நோயாளர்கள் அனுமதிக்கப்படும் விடுதிகளில் குறித்த குடும்ப பெண் அனுமதிக்கப்பட்டமையால் கிருமி தொற்றும் ஏற்பட்டுள்ளது. இதனை அடுத்தே மரணம் சம்பவித்துள்ளதாக திடீர் மரண விசாரணை அதிகாரியின் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ். போதனா வைத்தியசாலையில் குறித்த குடும்ப பெண் அனுமதிக்கப்பட்டிருந்த போது, தாதியர்கள் அருகில் வருவதற்கு தயக்கம் காட்டியதாகவும், வைத்தியர் ஒருவர் கடுமையாக பேசி இருந்ததாகவும் பெண்ணின் தாயார் திடீர் மரண விசா ரணை அதிகாரி முத்துக்குமார் உதயசிறியிடம் விசாரணையின் போது கூறியுள்ளார். (செ-4)

உள்ளூர் மீனவர்...

இது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சருக்கும் முறையிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கடற் பரப்பில் அட்டைத் தொழிலில் ஈடுபடும் தென்னிலங்கை மீனவர்களால் உள்ளூர் பகுதி மீனவர்கள் பல் வேறு பிரச்சினைகளை நாளாந்தம் எதிர் நோக்கி வருகின்றனர். கடல் அட்டைத் தொழிலை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு கடந்த 2016.04.04 அன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மீன்பிடி அமைச்சர். மகிந்த அமரவீரவிடம் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

அந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மீன்பிடி அமைச்சர் இது தொடர்பில் தான் உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்திருந்தார். எனினும் அதன் பின்னரும் முல்லைத்தீவு கடலில் இவ்வாறான பிரச்சினைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. கடந்த நான்காம் திகதி அதிகாலையும் இவ்வாறு தென்னிலங்கை மீனவர்களால் முல்லைத்தீவு மாவட்ட மீனவர் ஒருவரின் படகு சேத மாக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே நேற்று அதிகாலை கடலில் மீன்பிடித்து கொண்டிருந்த முல்லைத்தீவு மாவட்ட மீனவர் ஒருவரின் படகு மீது, அட்டை பிடிப்பதற்காக தென்னிலங்கையில் இருந்து வந்த படகொன்று மோதியுள்ளது. இதனால் சேதமுற்ற படகு நடுக்கடலில் மூழ்கியுள்ளது. மூழ்கிய படகிலிருந்த இருவர் கடலில் தத்தளித்து கொண்டிருந்த வேளையில் அவர்களை காப்பாற்றாது தென்னிலங்கை மீனவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

தொடர்ந்து மூழ்கிய படகிலிருந்த மீனவர்கள் இருவரும் கடலில் தத்தளித்து நீந்தி கரை சேர்ந்துள்ளனர். இது தொடர்பில் உடனடியாக முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனிடம் மீனவர்கள் தெரிவித்ததை அடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற அவர், உடனடியாகவே வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு தொலைபேசி மூலமாக சம்பவத்தை தெரியப்படுத்தியுள்ளார். தான் இது தொடர்பில் உரியவர்களுக்கு தெரியப்படுத்தி நடவடிக்கை எடுப்பதாகவும் முதலமைச்சர் பதில் கூறியுள்ளார்.

இவ்வளவு காலமும் மீனவர்களின் தொழிலுக்கு இடையூறாக இருந்த தென்னிலங்கை மீனவர்கள் தற்போது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் அளவிற்கு நிலைமை மாறியுள்ளது. முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களில் பெருமளவிலானோர் சிறுதொழிலில் ஈடுபட்டு வரும் நிலையில் தென்னிலங்கை மீனவர்களின் இந்த செயற்பாடுகள் பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்தி வருகின்றன. எனவே இது தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (செ-4,310,281)

காணாமல் ஆக்க...

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் உள்ள ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முற்பகல் இடம் பெற்றது.

இந்த சந்திப்பில் வடக்கு, கிழக்கினைச் சேர்ந்த காணாமல்ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் 30 பேர் கலந்து கொண்டிருந்ததாக நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் பிரச்சினைகளை அறிந்து, அது தொடர்பில் எதிர்காலத்தில் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்து ஆராய்வதற்காகவே இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டதாக நல்லிணக்க அமைச்சு தெரிவித்தது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களை மறைத்து வைத்துள்ளதாகக் கூறப்படும் இடங்கள் தொடர்பான தகவல்கள் வழங்கப்படுமிடத்து, அது தொடர்பில் தேடிப்பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களில் எவரேனும் வெளிநாடுகளில் இருப்பதாக தகவல்கள் கிடைத்திருப்பின், அது தொடர்பில் தெரியப்படுத்தும் பட்சத்தில் தூதரகங்கள் ஊடாக தேடிப்பார்க்க முடியும் எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டோரைக் கண்டறிவதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ள போதிலும், இந்த பிரச்சினைக்கு உரிய தீர்வினை வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிட்டதாக நல்லிணக்க அமைச்சு தெரிவித்தது.

நல்லாட்சி அரசாங்க காலத்தில் ஊடகவியலாளர்கள் உட்பட எவரும் காணாமற்போனதாக முறைப்பாடுகள் கிடைக்கவில்லை எனவும் ஜனாதிபதி இச் சந்திப்பின் போது சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)

இந்து மத வழிபாட்டிடங்களை...

வடக்கிலுள்ள இந்துக்களின் மத வழிபாட்டு தலங்களை புத்தர் சிலைகளின் மூலம் ஆக்கிரமிக்கும் இராணுவத்தின் செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

வவுனியா மூளாய்மடு, பேயாடி கூழாங்குளம் மற்றும் தாண்டிக்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள ஆலயங்களின் வளாகத்திற்குள் புத்தர் சிலைகளை அமைத்து வரும் இராணுவம் அதனை தொடர்ந்தும் பராமரித்து வருகின்றது.

வவுனியா மூனாய்மடு பேயாடி கூழாங்குளம் பகுதியிலுள்ள நாகபூசணி அம்மன் ஆலய வளாகத்திற்குள் பெரியதொரு புத்தர் சிலையை 56 டிவிசன் படைமுகாமை சேர்ந்த இராணுவம் அமைத்துள்ளது.

இவ்வாறு அமைக்கப்பட்ட புத்தர் சிலையானது நாகபூசணி அம்மன் ஆலயத்தை விட உயரமான நிலம் எழுப்பி பெரிதாக அமைக்கப்பட்டுள்ளதால் மழை காலங்களில் இந்து ஆலயத்திற்குள் வெள்ளம் புகுந்து இடர் ஏற்படுகின்றது.

இது தவிர இந்து ஆலயத்தின் பெயர் பலகை சிங்கள மொழியினாலும் மொழிபெயர்க்கப்பட்டு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தின் சுற்று மதிலும் முழுவதுமாக பௌத்த அடையாளங்களுடன் அமைக்கப்பட்டுள்ளன. ஆலயத்தின் வலது பக்கம் முன்பக்கம் இராணுவ முகாம் காணப்படுவதாலும் சுதந்திரமாக வழிபாட்டில் ஈடுபட முடியவில்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும் மேற்படி இந்து ஆலயத்தில் நடைபெறும் பூஜை நிகழ்வுகளின் போது இராணுவம் அமைத்து வைத்துள்ள புத்தர் சிலை பெரும் இடையூறாக உள்ளதாகவும் அப்பகுதி மக்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இதே போன்று தாண்டிக்குளம் பகுதியில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்திற்கு நெருக்கமாக புத்தர் சிலை ஒன்றை நிறுவி அங்கும் ஆலய வளாகத்தை ஆக்கிரமிக்கும் நடவடிக்கைகள் தொடர்வதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஏ9 பிரதான வீதியில் அமைந்துள்ள ஒவ்வொரு பெரிய படைமுகாம்களின் வீதியின் கரைகளில் பல்வேறு புத்தர்சிலைகளை அமைத்து அவற்றைப் படையினரே பராமரித்து வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இதே வேளை பருத்தித்துறை துறைமுகம் பகுதியில் உள்ள வைரவர் கோவிலுக்கு அருகிலும் புத்தர் சிலையை இராணுவம் அமைத்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (செ-4)

வலிப்பு ஏற்...

ஜெயக்குமார் (வயது 39) என்ற குடும்பஸ்தரே இதில் உயிரிழந்தவராவார்.

பிரஸ்தாப நபர் சம்பள பணத்தினை பெறுவதற்காக வேலணை அம்பிகை நகருக்கு நேற்றைய தினம் நண்பகல் வந்துள்ளார். அங்கிருந்து பிற்பகல் 2 மணியளவில் புங்குடுதீவில் உள்ள தனது வீட்டை நோக்கி துவிச்சக்கர வண்டியில் சென்றுள்ளார்.

வேலணை பாலத்தில் சென்று கொண்டிருந்த போது திடீரென வலிப்பு ஏற்படவே துவிச்சக்கர வண்டியில் இருந்து இறங்கி தரையில் இருந்துள்ளார். மேலும் வலிப்பு அதிகரித்த போது அருகில் இருந்த கடலுக்குள் நிலை தடுமாறி சுருண்டு விழுந்துள்ளார்.

இதை தூரத்தில் இருந்து அவதானித்த ஒருவர் உடனடியாக அவ்விடத்துக்கு வந்து ஏனையவர்களையும் அழைத்துள்ளார்.

அருகிலிருந்தவர்கள் விரைந்து வந்த போதிலும் விழுந்த நபர் பரிதாபகரமாக உயிரிழந்து காணப்பட்டுள்ளார்.

மேற்படி மரணம் தொடர்பான மரண விசாரணையை தீவக பிரதேச மரண விசாரணை அதிகாரி நாகராஜா தியாகராஜா மேற்கொண்டதுடன், உடற்கூற்று பரிசோதனைக்காக சடலம் யாழ்போதனா வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (செ-9,30)

இந்திய - இலங்...

பயணமாகியுள்ளனர்.

இந்து சமுத்திர கடல் எல்லை பாதுகாப்பு கருதியே இந்த கூட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆண்டு தோறும் நடத்தப்படும் கூட்டுப் பயிற்சியில் இந்தியக் கடற்படையுடன் கூட்டுப் பயிற்சிகளை மேற்கொள்வதற்காக இலங்கையின் கடற்படை நேற்று முன்தினம் இந்தியாவின் விசாகப்பட்டினம் நோக்கி பயணமாகியிருந்தது.

இன்று 7 ஆம் திகதி இரு நாடுகளின் கூட்டுப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலை யில் இலங்கை கடற்படையின் ஆழ்கடல் ரோந்துக் கப்பல் களான சுயுர மற்றும் சாகர ஆகிய இரண்டு பாரிய போர்க்கப்பல் கள் மற்றும் 43 கடற்படை அதிகாரிகளும், பயிற்சி நிலை அதிகாரிகள்60 பேர்உள்ளடங்கலாக 368 கடற்படையினருடன் திருகோணமலை துறைமுகத்தில் இருந்து விசாகப்பட்டினத்திற்கு புறப்பட்டுச் சென்றுள்ளன.

நேற்று முன்தினம் காலை இலங்கை கடற்படையினர் விசாகப்பட்டினம் துறைமுகத்தைச் சென்றடைந்துள்ள நிலையில் இன்று இலங்கை - இந்திய கடற்படையினரின் கூட்டு பயிற்சிகள் ஆரம்பமாவதுடன் செப்ரெம்பர் 14ஆம் திகதி வரையில் இந்திய - இலங்கை கடற்படைகளின் கூட்டுப் பயிற்சிகள் இடம்பெறும்.

இந்து சமுத்திர கடல்எல்லை பாதுகாப்பு பலப்படுத்தப் படவேண்டும் என்ற கருத்து நிலவிவரும் நிலையில் அதனை அடிப்படையாகக் கொண்டே இந்த கூட்டுப் பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இந்தியாவிடம் இருந்து மேலுமொரு கடலோர பாதுகாப்பு ஆயுதக் கப்பல் ஒன்றை கொள்வனவு செய்துள்ள இலங்கை கடற்படையினர் குறித்த கடலோர பாதுகாப்பு கப்பலையும் இணைத்து இந்த கூட்டுப் பயிற்சிகளை முன்னெடுக்கவுள்ளதாக கூறப்படுகிறது. (செ-11)

இராணுவத்தை...

பில் பங்கேற்று க்ருத்து வெளியிட்ட அமைச்சரும், கட்சியின் பொதுச் செயலாளருமான கபீர் ஹஷீம், இராணுவத்தை பாதுகாக்க எவரும் கற்றுத்தர தேவையில்லையென குறிப்பிட்டுள்ளார்.

அங்கு மேலும்கருத்துத்தெரிவித்த கபீர் ஹஷிம், ஜெகத் ஜயசூரிய தொடர்பில் சரத் பொன்சேகா வெளியிட்ட கருத்து அவரது தனிப்பட்ட கருத்தாகும். தனிப்பட்ட ரீதியில் ஒருவர் வெளியிடும் கருத்து கட்சியின் உத்தியோக பூர்வ நிலைப்பாடாக அமையாது.

அவ்வாறு ஏதாவது தீர்மானங்கள் இருந்தால் கட்சி அதனை வெளிப்படுத்தும். எனினும் இந்த நாட்டின் விடுதலைக்காக போராடிய தீவிரவாதத்தை இல்லாதொழித்த இராணுவத்தினரை உள்நாட்டிலோ வெளிநாடுகளிலோ தண்டிக்க இடமளிக்கப் போவது இல்லை என்பதை நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம்.

அரசாங்கம் என்ற வகையில் நாம் எமது கொள்கையிலிருந்து மாறவில்லை. எனினும் கடந்த காலங்களில்நாட்டை மீட்டெடுத்த இராணுவத்தின் உயர் அதிகாரிகள் முதல் கடை நிலை 23 ☛

நெடுங்கேணி...

களான கூழமுறிப்பினை சேர்ந்த 23 வயதுடைய தர்சன், ஓட்டுத் தொழிற்சாலையடியினை சேர்ந்த 19வயதுடைய சகுந்தரராஜன் பரணிதரன் மற்றும் அதே இடத்தினை சேர்ந்த 22 வயதுடைய செல்வக் குமார் விதுசன் ஆகிய மூன்று இளைஞர்களும் படுகாயமடைந்த நிலையில் ஒட்டுசுட்டான் பிரதேச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அதில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக மாஞ்சோலை மருத்துமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கிருந்து சகுந்தரராஜன் பரணிதரன் என்ற இளைஞன் ஆபத்தான நிலையில் அனுராதபுரம் வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் ஒட்டுசுட்டான் வீதி போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் பாரஊர்தியின் சாரதியையும் கைது செய்துள்ளனர். (செ-310)

கணக்காளர் தேவை

எமது பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்திற்கு கீழ்வருவோர் தேவை. கணக்கியல் / கணக்காய்வு பயிலுநர் உ.தரத்தில் வணிகத்துறையில் கற்றவர்கள். கணக்கியல் / கணக்காய்வு உதவியாளர் / **B.com., HNDA** மற்றும் **Chartered, CIMA** பகுதித் தகைமையுடையோர்.

தொடர்பு : 076 5541 472, 077 953 0496 (461)

A/L DAY CLASS
CHEMISTRY
ஆரம்பம் 09.09.2017

நேரம் 10.00

(அலகு ரீதியான விளக்கக் குறிப்புகளும் 1979 - 2017 வரையான கடந்த கால வினாக்களுடனான மீட்டலும்)

சிறந்த பெறுபேற்றுக்கான வழிகாட்டல்

JANA 0778318964 (C-9557)

Mobile Phone Repairing Course

100% தொழில் சார் செயன்முறை பயிற்சிநெறி

(C-9558)

Smart & All Mobile Phones

Hardware , Software and Unlocking

Next Batch Starts on : 09.09.2017

Duration : 1 Month

சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
தனிப்பட்ட கவனிப்பு.
சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.

iCS EDUCATION 77, மணிக்கூட்டு கோபுர வீதி யாழ்ப்பாணம் 077-665 6778 , 021-7306000

எவரெஸ்ட் குமாரிக்கா சந்தனாதி தைலம்

- நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
- இளநரையை போக்கவும்
- பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
- கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
- ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
- ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்

100 வீதம் இயற்கையானது

(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங் கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E)

(9447)

எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

தயாரிப்பு: எவரெஸ்ட் மருந்தகம், உசன், மிருசுவில், யாழ்ப்பாணம்.

ஏக விநியோகஸ்தர் பிரமநாதன் & Co எண்.28, 26, பேரின்பநாயகம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

கைபேசி எண்: 0776389356, 0777153571

6 மாதத்தில் வேலைவாய்ப்பு

வேலைசெய்துகொண்டே பட்டப்படிப்பு / விரும்பிய நாடு செல்வதற்கான விசா

UK, Australia, New Zealand, Canada, Malaysia, Singapore ஏற்பாட்டுடன்

COURSES IN
BUSINESS - TOURISM - HOSPITALITY & MEDIA STUDIES

HND/Degree (2-3 YEARS)
Advanced Diploma (6-12 MONTHS)
Diploma Level (3-8 MONTHS)
Fast Track (1-3 MONTHS)

FREE ▶ Computer Basics & ENGLISH

வடமராட்சி மாணவர்களுக்காக... கரவெட்டி பிரதேச செயகத்தில் JOB FAIR SEP. 8, 9

வகுப்புக்கள் ஆரம்பம் செப்ரெம்பர்.15 வெள்ளி காலை 9.30மணி

100% JOB GUARANTEED மேதிக விபரங்களுக்கு 077 36 16 798

(C-9554) SIKARAM ACADEMY Business · Hospitality · Media

FAST TRACK to CAREERS

175,முதலாம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி), (Pizza Hut அருகில்), யாழ்ப்பாணம். 021 222 00 11

www.sikaram.lk

உடனடி வேலை வாய்ப்பு V2 TRAVELS

விமானப் பயணச்சீட்டுக்கள், விரைவுப் பொதிகள் சேவை

நீண்ட காலமாக வேலை தேடுபவரா? எமது அலுவலகத்திலேயே இலவசமாக தற்போது வேலையும் பெற்றுக்கொள்ளுங்கள்

5,000/=(பயிற்சியின் போது) //15,000/=(பயிற்சியின் பின்னர்) மேற்முகத் தேர்வின் ஊடாகத் தெரிவு செய்யப்படும்

இருவரை, சர்வான வாய்ப்புக்கள் மற்றும் தொழில் அனுபவங்கள் கிடைக்காத வாலிபர்கள் முன்னோடி அடிப்படையில் உடனடியாக விரும்பாகின்றோம்.

தகுதி:- 30 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)

49A சப்பலகேன்,யாழ்ப்பாணம் (பழை பொது நூலகம் முன்னால்) 0768226241

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் விநியோகம் வந்து பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் தாமதிக்கும்வேளைகளிலும் அலுவலகங்கள் உடனடியாக எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்ளக்கூடிய ஒழுங்கு செய்யப்படும்.

கப்பலைக்கொண்டு வெளியே வாய்ப்பு **UK - 550/=** (C-9462)

கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப **CANADA - 400/=** மட்டுமே (பிரதேசைக்குட்பட்டது)

V2 TRAVELS-0768226240

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

B.A (கலைமாணி) இரண்டாம் ஆண்டு (புதியபாடத்திட்டம்) பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)

✸ கடந்த வாரம் B.A முதலாம் ஆண்டு பரீட்சை எடுத்த மாணவர்கட்கான இரண்டாம் ஆண்டிற்கான விரிவுரைகள்.

ஆரம்பம் :- 09.09.2017 (காலை 8.00 மணி)

✸ இரண்டாம் வருட பரீட்சையானது 2018 சித்திரையில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

குறிப்பு :- விரிவுரைகளில் பங்கேற்கும் வெளிமாவட்ட மாணவர்கட்கான தங்குமிட வசதி இலவசம்.

விபரங்களுக்கு S.அருள்நங்கை (நிர்வாகி)

T.P : 021 222 8148

புதிய உயர்கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(C-9548)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.